# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 25 செவ்வாய்க்கிழமை (10.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 257


# இந்திய அதிகாரிகள் இருவர் நேற்று குடாநாட்டுக்குத் திடீர் விஜயம்!

## பாதுகாப்பு நிலைமைகளை மக்களிடம் நேரில் கேட்டறிந்தனர்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 10

இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர் நேற்றுக் குடாநாட்டுக்குத் திடீர் விஜயம் செய்திருந்தனர். யாழ்ப்பாணத்தின் இப்போதைய பாதுகாப்பு நிலையை நேரில் கண்டறியும் பொருட்டே இங்கு அவர்கள் வந்தனர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நேற்றுக் காலை விஜயம் செய்து பொதுமக்களுடன் உரையாடி இப்போதுள்ள பாதுகாப்பு நிலைவரத்தைக் கேட்டறிந்தனர். போருக்குப் பின்னரான பாதுகாப்பு நிலைமை குறித்த தகவல்களை மிக விவரமாகத் தாம் சந்தித்த பொதுமக்களிடம் இருந்து அறிந்து சென்றுள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் 6 இலங்கையர் கைது!

கொழும்பு, ஒக், 10

தென்னிந்திய கன்னியாகுமரியிலுள்ள விடுதியொன்றிலிருந்து ஆறு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் நடத்திய தேடலின்போது 20 வயது முதல் 30 வயது வரையிலான இந்த ஆறு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்தவர்களென இந்தியப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின்போது அவர்களிடம் இந்தியாவில் தங்குவதற்கான தகுந்த ஆதாரங்கள் இருந்ததன்காரணமாக அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக 'த ஹிந்து' பத்திரிகை கூறுகிறது. (ஒ-10)

## இந்திய அரசு வடக்கில் முதற்கட்டமாகக் கட்டிக்கொடுக்கும் 1,000 வீடுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கை நேற்றுக் கையளிப்பு



கொழும்பு, ஓக.10

வடக்கில் மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கு இந்திய அரசின் உதவியின் முதற்கட்டமாகக் கட்டிக் கொடுக்கப்படவுள்ள ஆயிரம் மாதிரி வீடமைப்புத் திட்டத்திற்கான முழுமையான மதிப்பீட்டு அறிக்கை நேற்று இந்திய அரசிடம் கையளிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி இத்தகவலைத் தெரிவித்தார்.

வட மாகாண அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்றத்துக்கான செயலணி இந்த அறிக்கையை இந்திய அரசிடம் கையளித்தது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் இந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இரண்டு பிரதேச பிரிவுகளில் 150 வீடுகளும் வவுனியா வடக்கில் மூன்று பிரதேச பிரிவுகளில் 175 வீடுகளும், மன்னாரில் மடு மற்றும் மாந்தை பிரதேச பிரிவுகளில் 175 வீடுகளும், கிளிநொச்சியில் மூன்று பிரதேச பிரிவுகளில் 250 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று பிரதேச பிரிவுகளில் 250 வீடுகளும் முதற்கட்டமாக இந்தி

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 369 முன்னாள் புலி உறுப்பினர்கள்

கொழும்பு, ஒக. 10

நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமான ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் புனர்வாழ்வு முகாம்களில் உள்ள 369 முன்னாள் புலி உறுப்பினர்கள் தோற்றினர் என வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசிலிருந்து பிரபா விலக 14 நாள்கள் காலக்கெடு

கொழும்பு, ஒக. 10

ஜனநாயக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் அரசில் இருந்து விலகுவதற்கு அந்த முன்னணி 14 நாள்கள் காலஅவகாசம் வழங்கியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் ஒப்புதலுடன் அதன் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் இத்தகவலை அதிகாரபூர்வமாக பிரபா கணேசனுக்கு அறிவித்துள்ளார்.

"இந்த அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில்

(23ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் மரணம் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, ஒக. 10

றுகுணு பல்கலைக்கழக மாணவன் சுசந்த பண்டாரவின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தத் தனி நபர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஜகத் பாலபட்டபெந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் சுசந்த பண்டாரவின் மரணத்திற்கு காரணமானவர்கள் எனப் பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்

(24ஆம் பக்கம் பார்க்க)

# அரசமைப்புத் திருத்தம் குறித்தும் பேசுவதற்கு வராமல் ஐ.தே.க. அடம்பிடித்தால் மேலும் சிலரை உருவி வருவோம்

## அரசாங்கத் தரப்பு எச்சரிக்கிறது

கொழும்பு, ஓக. 10

அரசமைப்புத் திருத்தம் குறித்து அரசுடன் பேச்சு நடத்த மாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அடம்பிடித்தால் அக் கட்சியிலிருந்து மேலும் சிலரைப் பிரித்தெடுத்து தனது நோக்கத்தை அரசு நிறைவேற்றிக்கொள்ளும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

''நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற அரசுக்கு ஒரு சில உறுப்பினர்களின் ஆதரவே தேவை. பேச்சில் கலந்துகொள்ளாது ஐ.தே.க. இழுத்தடித்தால் நாம் எமது திட்டப்படி நடப்போம்.'' என்று தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

''ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொள்ளத் தயாராகவுள்ளனர். ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு விடயத்தில் காலத்தைக் கடத்தி வருவதால் அக்கட்சியிலுள்ள பல முக்கிய உறுப்பினர்கள் விரக்தியடைந்துள்ளனர். அவர்களது அரசியல் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே அவர்கள் அரசு

(23 ஆம் பக்கம் பார்க்க)




அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்

- ★ நிலையான வைப்பு
- ★ சேமிப்பு வைப்பு
- ★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
- ★ தவணைக் கடன்
- ★ சொத்து வியாபாரம்
- ★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே, கே, எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசப்புணர்வுகள் மறைந்தன; ரணிலைச் சந்தித்தார் மனோ

## பிரபா கட்சி தாவியதால் ஏற்பட்ட மாற்றம்

கொழும்பு, ஓக. 10

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய தேசியக் கட்சியுடனான கசப்புணர்வை மறந்து எதிர்க்கட்சிகளைப் பலப்படுத்தும் வகையில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

''அரசு சிறுபான்மைக் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகளைப் பிரித்து சின்னாபின்னப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. இதைக் கடுமையாக எதிர்க்கவேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினேன்'' - என அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. உட்பட பல கட்சிகள் தமது எம்.பிக்களை அரசின் சதியால் இழந்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கேட்டதாக ஒரு இணையத்தளம் செய்தி வெளியிட்டமை தொடர்பாக மனோகணேசனிடம் கேட்ட போது, ''நாடாளுமன்றப் பதவி தொடர்பாக நான் எதுவும் பேசவில்லை. அத்துடன், எனக்கு அதற்கான தேவையும் இருக்கவில்லை'' என்று சொன்னார். (ஓ-சி)

## காற்றோட்டிக் காய்க்கு இம்முறை பெரும் கிராக்கி!

யாழ்ப்பாணம், ஓக 10

ஆடி அமாவாசை விரத நாளான நேற்று காற்றோட்டிக் காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது.

ஆடி அமாவாசை விரதம் இருப்போர் காற்றோட்டிக்காயை தமது உணவில் சேர்த்துக்கொள்வது என்பது ஐதீகம்.

இந் நாளில் மட்டுமே இந்தக் காய்கள் சந்தைக்கு வருவது வழக்கம். இம்முறை காற்றோட்டிக் காய் வெகு குறைவாகவே சந்தைகளில் காணப்பட்டது. அதனைப் பெறுவதற்கும் பலரும் தேடி அலைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இம்முறை ஒரு கிலோ காற்றோட்டிக் காய் 300 ரூபாய்க்கு விற்பனைசெய்யப்பட்டது. சில்லறைக்கு ஒரு காய் 10 ரூபாவுக்கு விலைபோனதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-26)

# கல்முனை வாகன விபத்தில் காயமடைந்த ஏழு பேரில் தாயும், மகளும் உயிரிழப்பு

காத்தான்குடி, ஓக. 10

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேரில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தாயும், மகளுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

ஏனைய ஐவரும் ரம்புக்கனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

றம்புக்கனையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஏழுபேர் ஓட்டோ ஒன்றில் மட்டக்களப்பை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, கற்கள் ஏற்றிவந்த 'டிப்பர்' வாகனத்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

மட்டு. புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப் படை முகாமிற்குச் சற்றுத் தொலைவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் அப்துல் ஹசன் சுப்ஹான் நோநா தல்ஹா (வயது - 44) என்ற தாயும் அவரது மகளான பாத்திமா ரிமாவும்(வயது - 07) பலியாகியுள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலைய வாகன போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். ஹேரத் தெரிவித்தார்.

மரணமானவர்களின் ஜனாஸாக்கள் நேற்றுக் காலை றம்புக்கனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எம்.முருகானந்தம் தெரிவித்தார்.

விபத்தில் சிக்கிய ஓட்டோ முழுமையாகச் சேதமடைந்துள்ளது. டிப்பர் வாகனம் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஓ-சி)

## யா/திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை 05.08.2010 அன்று தேசியப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டமைக்காக பாராட்டு




யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையை தேசிய பாடசாலையாக இலங்கை கல்வி அமைச்சினால் தரம் உயர்த்துவதற்கு பல வழிகளிலும் உதவியும், ஒத்தாசையும் புரிந்த பெருமதிப்புக்குரிய *யாழ். மறை மாவட்ட ஆயர் அதி மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார்* அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக மனமுவந்து பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதோடு எமது பாடசாலை *அதிபர் அருட் சகோதரி மேரி தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ்* அவர்கள் தமது பதவிக் காலத்திற்குள்ளேயே எமது பாடசாலை, தேசியப் பாடசாலையாகத் தரம் உயர வேண்டுமென இரவு, பகல் பாராது அயராது உழைத்து எமது பாடசாலைக்கு பல வழிகளிலும் பெருமைகள் சேர்த்து இன்று தனது இலட்சியக் கனவோடு விடாமுயற்சியால் வெற்றியும் ஈட்டியுள்ளார். அதற்காக பாடசாலைச்சமூகமும் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது பணிகளும், சேவைகளும் இப்பாடசாலைக்கு மென்மேலும் தொடரவேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்தோடு இப்பாடசாலையிலிருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற பிரதி அதிபர், தற்போதைய பிரதி அதிபர், ஆசிரியர் குழாம் அனைவரும் இம்முயற்சிக்கு அதிபரோடு ஒத்துழைத்தமைக்காக எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை)

(101747)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் முருகன் - ஐயாத்துரை

தாயின் மடியில்: 28.08.1931
ஆண்டவன் அடியில் 11.07.2010

கடந்த 11.07.2010 அன்று இறைவனடிசேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும். அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் பங்குகொண்டு உதவிகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சேகண்டி 2 ஆம் ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(சி/569758) குடும்பத்தினர்.

## விளையாட்டுவிழா


நீர்வேலி, ஓக. 10

நீர்வேலி, அச்செழு குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணியளவில் நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் பா.சசிக்குமார் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் பிரதம விருந்தினராகவும், வலி.கிழக்குப் பிரதேச சபை நீர்வேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி பேபி சுலோசனா சுகுமார், மழலைகளின் தாய் திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஓ-110)

## மரண அறிவித்தல்கள்

### கிட்டிணன் கந்தசாமி



(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் யாழ்.வரணி மகா வித்தியாலயம்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் கந்தசாமி 06.08. 2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(98231)

### திருமதி அபிராமசுந்தரி தாமோதரம்

ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபிராமசுந்தரி தாமோதரம் நேற்று (09.08.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரா.தாமோதரம் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.பரியோவான் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியாவார்.

இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
சரா.தாமோதரம் (கணவர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 ★ 04 ★ 1959



உதிர்வு 10 ★ 08 ★ 2009

**பேட்றூட் (சின்னமணி) வளலாய்**

அன்பாலும், பண்பாலும் எம் எல்லோரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு வருடம் ஒன்று கடந்தாலும் உங்கள்
இறப்பை எம் மனம் நம்ப மறுக்கின்றதே
வருடம் ஒன்று சென்றாலும் தாயே - உன்
அன்புமுகம் எம் நினைவில் மறையாதம்மா!
என்றும் உன்
ஆத்மா சாந்தியடைய நாம் இறைனை வேண்டுகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (நோர்வே)

(98234)

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர் வைரமுத்து
வேலுப்பிள்ளை கந்தையா
(ஓய்வுபெற்ற ஆண் பரிசாரகர் - மருதங்கேணி வைத்தியசாலை)

தோற்றம் 12.09.1933
மறைவு: 22.07.2009

ஊரிழந்து உறவிழந்து ஏதிலிகளாய்
அல்லலுற்று அலைந்த போதும் - நாளை
நமக்கென விடியும் பொழுதை நம்பி
காத்துக் கரைசேர்த்தோம் உங்களையும்!
சேர்ந்து வாழ்வோம் எனும் நம்பிக்கையில்!
ஆனால்
வாழ்ந்தது போதுமென எமைத்
தவிக்கவிட்டுச் சென்று
வருடமொன்று ஆனதய்யா!
நீங்களில்லா வீட்டில் - நாம்
மீளக் குடியேறித் தேடுகின்றோம்
விழிநீரால் தினமும் உங்களையே!
மீண்டும் வந்துவிடுங்கள் வாழ்ந்திடுவோம் ஒன்றாக.

திரு க.இதயசிவதாஸ்
இல: 34/1, சிவநகர்
உருத்திரபுரம். தொ.பே.: 0777403064

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(101808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளை அமைத்தல், மலசல கூடங்களை அமைத்தல், வாழ்வாதார உதவிகளை வழங்குதல், அவசர நிலைமைகளின் போது உதவுதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு மட்டுமே அரசாங்கம் அனுமதி வழங்கி உள்ளது.

எமது சமூகம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் எங்கள் மக்களின் சமூக, கல்வி மற்றும் உளநலத் தேவைகள் அதிகரித்துள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு குடாநாட்டின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வசதி வழங்குவதற்கு வெளிநாட்டு நிதி நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது ஜனாதிபதி விசேட செயலணியினால் வழங்கப்படும் அனுமதியைக் காண்பித்தால் மட்டுமே வெளிநாட்டு நிதி நிறுவன அமைப்புக்கள் பண உதவி செய்ய முடியும்.

ஆனால் ஜனாதிபதி விசேட செயலணியை நாடினால் வெளிநாட்டு நிதிநிறுவனங்கள் தாம் நிச்சயம் உதவும் என்று உறுதிமொழி தந்தால் மட்டுமே அனுமதி தரப்படும் என்று தெரிவிக்கின்றது.

மொத்தத்தில் அரசாங்கத்தின் இந்த ஒளித்து விளையாடும் போக்கினால் யாழ். மாவட்டத்தின் சமூக மற்றும் உளநலத்துறை மேம்பாட்டுக்கு பெரும் முட்டுக்கட்டை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவரங்களை வெளியிட்டிருக்கிறார் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வி.கேசவன். நிறு வனத்தின் ஆறாவது ஆண்டு விழாவின் போது அவர் இவற்றைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் மே மாதத்தில் போர் முடிவடைந்த பின்னரே அரசாங்கத்தின் இந்தக் கெடுபிடி ஆரம்பித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் எமது மக்களின் வாழ்வின் எல்லாத்துறைகளையும், அவை சார்ந்த முக்கிய ஆதாரங்களையும் துவம்சம் செய்துவிட்டன. கல்வி, விவசாயம், கைத் தொழில், மீன்பிடி, வர்த்தகம் போன்ற சகல பிரிவுகளும் வேரோடு அறுக்கப்பட்டிருந்தன. இராணுவ ஆட்சி ஒன்றின் கீழ் அனுபவிக்கக் கூடிய அத்தனை பற்றாக்குறைகளையும், தட்டுப்பாடுகளையும் அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது.

சமூக வளர்ச்சிக்குத் தேவையான அத்தனை அலகுகளும் தவிடு பொடியாக்கப்பட்டிருந்தன. அதனால் வாழ்வாதாரங்களை மீள்விப்பது, சமூக, கல்வி, பொருளாதாரம் சார்ந்த பல முக்கிய - பிரதான-அலகுகளை மீள்கட்டுமானம் செய்ய வேண்டிய பெருந்தேவை இப்போது இங்கு எழுந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்காக இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் இருந்து நிதி உதவிகளை பெற்று வரும் அரசாங்கம், அதனை உரிய வழியில் இப் பிரதேசங்களுக்கு செலவிடுகிறதா என்பது வெளிச்சமாகத் தெரியாது. அவை பற்றிய விவரங்கள் அனேகமாக மூடுமந்திரமானவையே.

மக்களின் அத்தியாவசிய மற்றும் பிரதான தேவைகளைத் தவிர்ந்த கல்வி, சமூக, உளவள, தொழில்வள விருத்தி உட்பட பல வாழ்க்கைக் கூறுகளைப் பலப்படுத்த வேண்டிய கனத்த தேவைகள் முன்னர் எப்போதும் இருந்ததை விட இப்போது அதிகரித்துள்ளன.

இத்தகைய ஒரு சூழலில், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதிவளம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு கிடைத்து அவர்களின் வாழ்க்கை நிலை பலம் கொள்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அல்லது கிடைக்கும் நிதி உதவிகள் இப்பகுதி மக்களுக்குச் சுவறக்கூடாது என்ற இருதலைப் போக்குடன் அரசு செயற்படுகின்றதா? இதுவும் பாதுகாப்புத் துறை சார்ந்த விடயமாக உள்ளடக்கப்பட்டுள்ளதா?

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிதி மூலத்தில் இருந்து வழங்கப்படும் பணம் உரியவர்களைச் சேர்கிறதா இல்லையா என்பதனை கண்காணிக்க அரசுக்கு முழு உரிமையும் உண்டு. அதனை தக்கபடி கையாண்டு அரச சார்பற்ற நிறுவனங்களை இத்துறையில் செயலாற்ற அனுமதிக்கலாமே. அரசுக்கு அதில் விருப்பமில்லையென்றால் குடாநாட்டு மக்களின் வாழ்க்கையை மீள்விப்பதிலும், மேம்படுத்துவதிலும் அதற்கு அக்கறையும் விருப்பமும் இல்லை என்பதே அர்த்தமாகும்.

# மூன்று நாள் விஜயமாக நாமல் குழுவினர் பலத்த பாதுகாப்புடன் கிளிநொச்சிக்கு வருகை

## நேற்று கரைச்சிக் கோட்ட பாடசாலைகளுக்குச் சென்றனர்

கிளிநொச்சி, ஒக.10

ஜனாதிபதியின் புதல்வரும் 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் தலைவரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ அடங்கிய குழுவினர் 3 நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று கிளிநொச்சி வந்துள்ளனர். அவர்களுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்றையதினம் நாமல் ராஜபக்ஷ குழுவினர் கரைச்சிக் கோட்ட பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டதுடன் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களையும் வழங்கினர்.

இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் உதித் லொக்கு பண்டார உட்பட அதிகாரிகள் பலரும் அடங்கி உள்ளனர்.

இந்தக் குழுவினருடன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கரைச்சிக்கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் பலரும் பாடசாலைகளுக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது கரைச்சிக் கோட்டத்தில் உள்ள உயர்தரப் பரீட்சை நிலையங்கள் அல்லாத பாரதி வித்தியாலயம், சிபாத கலையகம், செவ்வாநகர் அ.த.க. பாடசாலை, கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை, திருவையாறு ம.வி., வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை, வட்டக்கச்சி ம.வி., இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் ம.வி., அழகாபுரி வித்தியாலயம், மாயவனூர் அ.த.க. பாடசாலை, முரசுமோட்டை புனித அந்தோனியார் றோ.க.த.க. பாடசாலை, பன்னங்கண்டி இ.த.க. பாடசாலை, ஆகிய 14 பாடசாலைகளுக்கு இவர்கள் சென்றனர்.

இதேவேளை, இன்று கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளுக்கும் - நாளை பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கும் பளைக்கோட்டப் பாடசாலைகளுக்கும் இந்தக் குழுவினர் செல்லவுள்ளனர்.

இவர்களின் வருகையை முன்னிட்டு கிளிநொச்சி நகரப் பகுதியிலும் கிளிநொச்சிக் கிழக்குப் பகுதியிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் வருகையை எதிர்பார்த்து பாடசாலை சமூகத்தினர் விடுமுறையையும் பாராது திரண்டிருந்தனர். தமது கருத்துக்களை குழுவினரிடம் தெரிவிக்க ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

ஆனால் வருகைதந்தவர்கள் மேலோட்டமாக பார்வையிட்டு மாண வர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்கி விட்டுச் சென்றதால் பாடசாலைச் சமூகத்தினர் ஏமாற்றமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-405)

# சன் - சீ கப்பலில் இருக்கும் தமிழ் அகதிகளை யுத்தக் குற்றவாளிகள் போல் நடத்தக்கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஒக. 10

வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் கோருகின்றனர் என்ற ஒரேயொரு காரணத்துக்காக சன் சீ கப்பலில் பயணிக்கும் தமிழர்களை யுத்தக் குற்றவாளிகளைப் போல் நடத்தக் கூடாதென சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்கக் கிளையைச் சேர்ந்த அதிகாரி ஜேம்ஸ் மெக்டொனால்ட் இக் கோரிக்கையை விடுத்துள்ளார். இவர் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களில் கைதேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் உயரதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'த வொஷிங்டன் போஸ்ட்' கடந்த 4 ஆம் திகதி செய்தி ஒன்றைப் பிரசுரித்திருந்தது. இந்தக் கப்பல் வட அமெரிக்கா நோக்கி வருகின்றது என்றும் அவ்வாறு வந்தால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக் கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தார்.

அப்பத்திரிகைக்கு ஜேம்ஸ் மெக்டொனால்ட் எழுதி அனுப்பிய குறிப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின் றமை இந்தத் தமிழர்களுக்குப் பேராபத்துகளை ஏற்படுத்தி விடும். எனவே, அமெரிக்காவின் நிலைப்பாடு ஏற்க முடியாதது.

கடந்த கால யுத்தத்தின்போது அரசு - புலிகள் இரு தரப்பினருமே யுத்தக் குற்றங்களைப் புரிந்துள்ளனர். இந்த யுத்தக் குற்றவாளிகள் தப்பி விடக் கூடாதுதான்.

ஆனால், தமிழர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லர். அத்துடன் புலிகள் இயக்கத்தில் கட்டாயப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் இந்தத் தமிழர்களுக்குத் தீங்குகள் நேர்ந்து விடும்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலிகள் இயக்கத்தினர் என்கிற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படாமல் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். சித்திரவதை செய்யப்பட்டும் வருகின்றார்கள். சிலர் இறந்தும் இருக்கின்றார்கள்.

அரசியல் தஞ்சம் தேடி வருபவர்கள் எந்த நாடுகளுக்குச் செல்கின்றார்களோ அங்கு அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், நீதியாகவும் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

இது அவர்களின் உரிமையாகும். எனவே, இந்தத் தமிழர்களை யுத்தக் குற்றவாளிகள் போல் நடத்த வேண்டாம். விசாரிக்காமல் அவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்புகின்றமை அநீதி ஆகும். - இப்படி அவர் மேலும் கூறியுள்ளார்.

# சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள்

தென்மராட்சி, ஒக. 10

டெங்கு ஒழிப்பு செயற்பாட்டின் ஓர் அங்கமாக சாவகச்சேரி அரச திணைக்களங்களின் சிரமதான நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றன.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார், நகர சபையினர், சுகாதாரத் திணைக்களத்தினர் ஆகியோர் நகர்ப் பகுதியில் உள்ள சந்தை, வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் சிரமதானம் மூலம் பற்றைகள், புற்செடிகள் போன்றவற்றை வெட்டி அகற்றி துப்புரவு செய்தனர்.

சாவகச்சேரி நகர் கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டோருக்கு சிற்றுண்டி, குளிர்பானம் போன்றவற்றை வழங்கினர்.

காலையில் நகர்ப் பகுதி, சந்தை போன்றவற்றில் டெங்கு ஒழிப்பு புகையூட்டல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. (ஒ- 207)

# சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு வலி.கிழக்குப் பகுதி மக்களிடம் கோரிக்கை

## வீடு வீடாகச் சென்று சுகாதாரப் பகுதியினர் மேற்பார்வை

யாழ்ப்பாணம், ஒக. 10

வலி.கிழக்குப் பிரதேசத்தில் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமது வீட்டுச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தம் பேணாமல் நுளம்பு பெருக்கத்துக்கு துணை புரியும் வகையில் சுற்றாடலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் இவ்வாறு சுற்றாடலை வைத்திருப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலி.கிழக்குப் பிரதேச சபையின் சுற்றுச்சூழல் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது குடாநாட்டில் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப் படுத்தும் பொருட்டு வலி.கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச சபையின் சுற்றுச்சூழல் சுகாதாரப் பிரிவினர் வீடுவீடாகச் சென்று மக்களின் சுற்றாடல்களைப் பார்வையிட்டு வருகின்றனர். அத்துடன் டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு வழங்குவதுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் தங்கள் பிரதேசத்தைச் சிரமதானம் மூலம் தூய்மையாக வைத்திருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-26)

## நாளை

| | |
|---|---|
| ஆடி26 | 11.08.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : பிரதமை |
| | காலை 06.48 வரை |
| நட்சத்திரம் | : மகம் |
| | மு.இ. 07.16 வரை |
| சுபநேரம் | : 04.34-06.04 வரை |
| ராகுகாலம் | : 12.04-01.34 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழா

சாவகச்சேரி, ஒக.10

சாவகச்சேரி, சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரி லயன் ஐ.கோ. சந்திரசேகரம் ஆற்றவுள்ளார். நூல் ஆய்வுரையை பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் சிவ.மகாலிங்கம் வழங்குவார். (ஒ- 326)

## நல்லூர் ஆலயத்தின் சுற்றாடல் துப்புரவு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் சுற்றாடல் பகுதி யாழ்.மாநகர சபையினரால் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் பின்புறமாக கடைத் தொகுதிகள் அமைக்கப்படும் பகுதியில் தேங்கிக்கிடக்கும் கழிவுப் பொருள்கள், குப்பைகள் போன்றவை நேற்று மாநகரசபையின் தொழிலாளர்களினால் அகற்றப்பட்டன. அத்துடன் ஆலயத்தின் பருத்தித்துறை வீதியோரத்தில் படர்ந்து வளர்ந்திருந்த புற்களும் வெட்டி அழிக்கப்பட்டன. (த-26)

## டெங்குநோயாளர்கள் இனம் காணப்பட்டனர்

பருத்தித்துறை ஐயனார் கலட்டியைச் சூழவுள்ள பகுதியில் டெங்கு நோயாளர்கள் இருவர் இனங்காணப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதனை அடுத்து அப்பகுதியில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியினரால் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

அப்பகுதியில் உள்ள வீதிகள், வீடுகள் தோறும் புகையூட்டப்பட்டதுடன் பற்றைகள், குப்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டன. (த-236)

## உடன் தேவை

★ தோட்டப் பராமரிப்பாளர்
★ சுத்திகரிப்புத் தொழிலாளி

உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரத்துடன் வெள்ளிக்கிழமை 13ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு சமுகம் தரவும்.

இடம் : உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் நீண்டகால அங்கத்தவரான

அமரர்

**சுப்பிரமணியம் நவரட்ணம்**

(உரிமையாளர், நவம் களஞ்சியம், சாவகச்சேரி)

அவர்கள் 06.08.2010ஆம் திகதி காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.


# சிறுவர், கர்ப்பிணிகளுக்கு சத்துணவு வழங்கல்

வடமராட்சி,ஒக.10

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையம் போஷாக்குக் குறைந்த சிறுவர் கர்ப்பிணிகளுக்கான போஷாக்குத் திட்டத்தை முக்கிய செயற்பாடாகச் செயற்படுத்தி வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் முதற்கட்டமாக வேலணைப் பிரதேசத்திலும் இரண்டாம் கட்டமாக ஊர்காவற்றுறை பிரதேசத்திலும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறுவர், கர்ப்பிணிகள் உட்பட 500 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் சத்து மா வழங்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களிலும் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கு சத்துமா வழங்கப்படவுள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார். (த-236)


## 'நிலவு' நிறுவனம் நடாத்தும்
## - தமிழ் மென்பொருள் அறிமுக விழா -

இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்
காலம் : 14/08/2010 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி

மென்பொருள்களின் செயல்முறை விளக்கமும் விற்பனையும் இடம்பெறும்.

வெளியிடப்படும் மென்பொருள்கள்
பொன்மொழி, பொன்பேனா, பொன்விழி

புத்தகம்.com ஈழத்தமிழரின் சர்வதேச புத்தகக்கடை! உங்கள் புத்தகங்களை நாங்கள் விற்கிறோம்!!

- அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் -

பொன் தமிழ்
தமிழால் கணினி உலகை வெல்வோம்

தொடர்புகளுக்கு : 0 777 769 751, 0 777 707 839

**பொன்மொழி**
தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருள்.

**பொன்பேனா**
உங்களது கையெழுத்தினை உடனடியாக தமிழில் தட்டச்சு செய்துதரும் மென்பொருள்.

**பொன்விழி**
Scan செய்யப்பட்ட பக்கங்களில் இருந்து தமிழ் எழுத்துகளை பிரித்து உணர்ந்து தட்டச்சு செய்துதரும் மென்பொருள். தமிழ் OCR.



## வாடகைக்கு

பல்கலைக்கழகத்திற்கும் நல்லூருக்கும் இடையில் பலாலி வீதியில் Ac, Non A/C, வாகன தரிப்பிட மற்றும் பல வசதிகளுடன் கூடிய அறைகள்/வீடு நாளாந்த or மாத வாடகைக்கு உண்டு. (Net வசதியும் உண்டு) தொடர்பு:0774414238, 0094774414238

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிறாம்பியடி வீதியில் கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0778529303

## தவறிவிட்டன

சந்திரன் சசீந்திரன் என்பவரது தே.அ.அட்டை (911102927V), பாடசாலை அ.அட்டை என்பன கோண்டாவிலுக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். 0770424761, 0779773851

## ஆள்கள் தேவை

தகைமை G.C.E. O/L சித்திபெற்ற அல்லது படித்த ஆள்கள் தேவை. எமது நிறுவனத்தில் பலதரப்பட்ட வேலைகளும் பழக்கப்படும். நேர்முகப்பரீட்சை - வியாழக்கிழமை (12.08.2010) காலை 9 மணி

**Bio Tec International Ltd,**
131/2, Palaly Road, Thirunelveli.
T.P. No: 021 4590907



இதுவரை காலமும் கொழும்பில் இயங்கி வந்த ACGC தற்போது தனது கிளையை

# யாழ்ப்பாணத்தில்

இன்று முதல் (10-08-2010) விஸ்தரித்துள்ளது.

**BUSINESS,MARKETING & FINANCE COURSES**

. COMPUTER SCIENCE, IT (DIPLOMA,BSC) . FASHION DESIGN(DIPLOMA) . HOTAL MANAGEMENT (ADVANCE DIPLOMA,BA)

மற்றும் APDMS போன்ற கற்கை நெறிகளுக்கு U.K யில் பிரபல்யமான

WEST LONDON COLLEGE, CAMBRIDGE MANAGEMENT COLLEGE, CONVENTRY UNIVERSITY

போன்றவற்றில் அனுமதிகள் பெற்றுத்தருவதுடன் அதற்குரிய விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

Coventry University London Campus | Nilai University College | Cambridge Management College | West London College WLC

AANGI

ACGC
Aangi Career Guidance Consultant

Jaffna : Point pedro road, Kopay Junction, Kopay.
Colombo : 104-1/3, Manning Place, Colombo 06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் புதுமுக மாணவர்களை கோட்டை முனியப்பர் ஆலய முன்றலிலிருந்து அழைத்து வருவதை முதற்படத்திலும், யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் புதுமுக மாணவரொருவருக்கு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எல்.ஏ.டபிள்யூ சிறிசேன நினைவுப் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: சுகந்தன், டிலீப்)*

# யுத்த சூழலில் பயின்று பல்கலைக்கழகம் செல்லும் நீங்கள் பெற்றோருக்குப் பெருமை சேர்க்க வேண்டும்

## புதுமுக மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்.அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஓக. 10

பல்கலைக்கழக அனுமதிபெற்று நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் மாணவர்கள் எமது பிரதேசத்தின் கலை, கலாசாரம் போன்வற்றைப் பேணுவதைத் தமது நோக்காகக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து 2010 ஆம் ஆண்டு பல்லைக்கழகங்களுக்குத் தெரிவான புதுமுக மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் நிலவிய யுத்த சூழலுக்கும் மத்தியில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்துக் கல்விகற்று இன்று நீங்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள்.

அதேபோல எதிர்காலங்களிலும் திறமையாகக் கல்விபயின்று நாட்டுக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தரவேண்டும்.

இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதுமுக மாணவர்கள் இங்கு சமுகம் தந்துள்ளீர்கள். இனிவரும் காலங்களில் இரு மாவட்டங்களிலும் தனித்தனியே இவ்வைபவம் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யவுள்ளோம்.

நீங்கள் அனைவரும் இந்த நாட்டின் சொத்துக்கள். எனவே அதிகார பீடத்திலுள்ள அனைவரும் உங்களை வழிநடத்த வேண்டும். அதனால்தான் இன்று இவ்வாறானதொரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான் கடந்த 8 வருடமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்மையாற்றியபோது எமது பிரதேச மாணவர்கள்பட்ட துன்பங்களை நான் அறிந்துள்ளேன். மருத்துவபீட மாணவன் ஒருவன் தனது இருகால்களையும் இழக்க நேரிட்டது இன்று அந்த மாணவன் தனது விடாமுயற்சியினால் மனதைத் தளரவிடாது இலட்சியத்தை அடைவதற்காகக் கற்கின்றார்.

அதேபோல நீங்களும் சிறப்பாகக் கற்று உங்களது பெற்றோரை உரியமுறையில் கனம்பண்ணி எமது நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எல்.ஏ.டபிள்யு சிறிசேன, களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் யோகராஜன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-16-236-319)

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இராணுவத்தினர் சிரமதானம்

நவாலி, ஓக.10

டெங்குநோய் பரவாமல் தடுக்கும் நோக்குடன் ஆனைக்கோட்டையிலுள்ள மானிப்பாய்ப் பிரதேச வைத்தியசாலை வளாகம் இராணுவத்தினரால் சிரமதானம் மூலம் கடந்த சனிக்கிழமை 8ஆம் திகதி துப்புரவு செய்யப்பட்டது.

இவர்களுடன் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரும் சில பொதுமக்களும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் எதிர்பார்த்தளவு பொதுமக்கள் பங்குகொள்ளவில்லையென்று படையினரால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-100)

# 70 வயது மூதாட்டி சின்னம்மா கால்நடையாகக் கதிர்காமத்துக்கு

## ஆடிவேல் விழாவில் கலந்துகொண்டார்



நவாலி,ஓக.10

நவாலியைச் சேர்ந்த 70 வயது மூதாட்டி ஒருவர் 58 நாள்கள் இங்கிருந்து கால்நடையாக பாத யாத்திரை சென்று கதிர்காம முருகனைத் தரிசித்து ஆடிவேல் விழாக் காட்சிகளைக் கண்டு கழித்து வந்துள்ளார்.

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த ஆண்டி சின்னம்மா என்ற இவர், கடந்த மேமாத நடுப்பகுதியில் இங்கிருந்து கால்நடையாகப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கும்போது வேறு சிலரும் இணைந்துகொண்டனர்.

இவர்களுடன் செல்லும்போது இரவு வந்ததும் வழியில் தென்படும் ஆலயங்களில் படுத்துறங்கிவிட்டு மீண்டும் மறுநாள் நடக்கத் தொடங்கி விடுவாராம். வெயிலின் களைப்பால் காட்டுப் பாதைகளில் மரநிழல்களின் கீழ் தங்கியிருக்கும்போது அவ்விடத்தால் செல்லும் பொது மக்கள், படையினர் குளிர்பானங்களை வாங்கிக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறு 58 நாள்கள் நடந்துசென்று கதிர்காமம் சென்றடைந்தாராம். அங்கு இடம்பெற்ற ஆடிவேல் விழாக் காட்சிகளைக்கண்டு கழித்துவிட்டு மீண்டும் தமது ஊருக்கு வாகனங்கள் மூலம் வந்து சேர்ந்துள்ளார்.

இவரது இத் துணிச்சலை மக்கள் பலரும் பாராட்டியுள்ளனர். (த-100)

# கீரிமலை, கசூரினா, வில்லூன்றிப் பகுதிகளில் பிதிர்க்கடன் நிறைவேற்றக் குவிந்த மக்கள்

யாழ்ப்பாணம்,ஓக.10

ஆடி அமாவாசை தினமான நேற்று பெரும் எண்ணிக்கையிலான இந்து மக்கள் மறைந்த தமது தந்தையருக்கு பிதிர்க் கடன்களைச் செலுத்தினர்.

பிதிர்க்கடனைச் செலுத்துவதற்காக இந்துக்களின் பிரசித்திபெற்ற இடங்களான கீரிமலை, வில்லூன்றி, கசூரினா தீர்த்தக்கரை ஆகிய இடங்களில் பெருமளவில் மக்கள் கூடினர்.

கடந்த காலங்களைவிட இம்முறை பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பிற மாவட்டங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வந்து பிதிர்க் கடன்களைச் செலுத்தினர்.

கீரிமலைக்கும், கசூரினா புனித தீர்த்தக் கரைக்கும் விசேட பஸ் சேவைகள் நடத்தப்பட்டன. வழமையைவிட இம்முறை பெரும் எண்ணிக்கையில் மக்கள் வந்திருந்தபோதும் இந்துக் குருமார்களின் எண்ணிக்கை குறைந்தளவிலேயே இருந்தது.

இதனால் மக்கள் தமது பிதிர்க் கடன்களைச் செலுத்துவதற்காக முண்டியடித்தனர். (த-6-26-86)

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சுற்றாடலில் தண்ணீர்ப் பந்தல் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.10

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயத்திற்கு முன்பாக பருத் தித்துறை வீதியில் தண்ணீர்ப் பந்தல் அமைக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் ஆலயத்தின் பின் வீதியில் அதாவது கோயில் வீதியிலும் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசடி வீதி, கச்சேரி-நல்லூர் வீதி ஆகியவற்றிலும் தண்ணீர்ப் பந்தல்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-26)

# பனாட்டு 'சீசன்'

யாழ்ப்பாணம், ஓக.10

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளுக்குப் பனாட்டு வரத் தொடங்கியுள்ளது.

தென்னிலங்கை மக்களால் விரும்பிக் கொள்வனவு செய்யப்படுவதால் ஒரு கிலோ பனாட்டு 150 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (த-207)




# கட்டாக்காலி கால்நடைகளை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை

கொழும்புத்துறை,ஓக.10

அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் மாடுகளை அப்பகுதி மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அரியாலை கமநல சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நல்லூர்ப் பிரதேச செயலர், கமநல சேவை அலுவலகம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது கைவிட்டுவந்த மாடுகள் பெருகி சுமார் 1000 வரையில் அப்பகுதியில் அலைந்து திரிவதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதிகளில் விவசாயச் செய்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதால் பயிர்களைக் கால்நடைகளின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க வேலிகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே இம்மாடுகள் அடையாளம் காண முடிந்தவற்றை உரிமையாளரிடம் கொடுக்கவும் ஏனையவற்றை குடும்ப நிலைக்கேற்ப பகிர்ந்தளிக்கவும் ஆலோசித்துள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இதனிடையே இம்மாடுகளைப் பிடிப்பதற்குத் தேர்ச்சி[illegible] துழைக்க வே[illegible]டுள்ளது. (த-135)

# அரியாலை கிழக்கு வயற்பகுதிகளில் இம்முறை பெரும்போக நெற்செய்கை

கொழும்புத்துறை,ஓக.10

அரியாலை கிழக்கு வயற்பகுதிகளில் பூம்புகார் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயல் உரிமையாளர்கள் தமது உறுதிப் பத்திரங்களின் பிரதி மற்றும் விவசாயத்துக்காக அப்பகுதிக்குச் செல்லவுள்ளோரின் அடையாள அட்டை பிரதிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அரியாலை கமநல அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.சபா[illegible]டுள்ளார்.

இப்பகுதிகளைச் சுற்றி கட்டாக்காலி பாதுகாப்பு வேலிகளை அமைக்க விவசாயிகள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளுக்கு மானிய முறையில் உர வகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை-சென்ற ஆண்டு அனுமதிக்கப்பட்டு விவசாயம் மேற்கொண்டோருக்கு வழங்கப்பட்ட விதைநெல், உழவுக்கான உதவிகள் போன்ற உதவித்திட் டங்களை இம்முறையும் புதிதாக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

உங்கள் வெற்றியே எங்கள் இலக்கு

தொடர் 02

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010

வளவாளர்:
மாணவர்களின் பாராட்டுக்குரிய எமது தேசிய
ஆசிரியர் S.தீபன், வவுனியா.



| வினாத்தாள் I | 45 நிமிடங்கள் |
|---|---|
| சுட்டெண் | புள்ளிகள் |

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

*** முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்படும் பாடல் அடிகளுக்கு மிகப் பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவுசெய்க.**

01. இடமிடமாய்ச் சென்றிடும்
இடர்கள் எல்லாம் செய்திடும்
தாவித்தாவிப் பாய்ந்திடும்
மனித இனத்தின் நண்பனாம்.




02. வண்ண வண்ண நிறங்களோடு
வட்டமிடும் வடிவமே
எண்ணம் பல தோன்றிட
எழுந்து பறப்பாய் நித்தமுமே.





*** 3ஆம், 4ஆம் வினாக்களில் நான்கு கட்டங்களில் உள்ள உருக்களில் மூன்று கட்டங்களில் உள்ள இரு உருவங்களுக்கிடையே ஏதோ ஓர் ஒற்றுமை உண்டு. ஒற்றுமை அற்ற கட்டத்தைத் தெரிவு செய்க.**

03.




04.





*** 5ஆம், 6ஆம் வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்களில் தடித்த எழுத்தில் உள்ள மரபுத்தொடருக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்க.**

05. நிரோசன் கடிதத்தை உடைத்துப் பார்த்ததும் அவனுக்கு **வயிற்றில் பால் வார்த்தது** போல் இருந்தது.
1) கடிதம் பால்போன்ற வெண்ணிறக் கடதாசியில் எழுதப்பட்டிருந்தது.
2) எதிர்பார்த்த ஏதோ ஒரு விடயம் நிறைவேறியிருந்தமை.
3) உதவி கேட்டு எழுதியமையால் மனவருத்தப்பட்டான்.

06. மாலதி தான் செய்த தவறை ஒத்துக்கொண்டது போல **நீலிக்கண்ணீர்** வடித்தாள்.
1) தவறை ஒத்துக்கொள்ளாது போலியாக அழுதாள்.
2) தவறை உணர்ந்து உள் மனதில் இருந்து அழுதாள்.
3) மன்னிப்புக் கேட்கும் விதத்தில் வாய்விட்டு அழுது புலம்பினாள்.

07. இவ் உருவில் உள்ள நாற்பக்கல்கள் எத்தனை?



1) 3 2) 5
3) 7 4) 9

*** 8ஆம், 9ஆம், 10ஆம் வினாக்களுக்கு பின்வரும் சம்பவத்தைக்கொண்டு விடையைத் தெரிவுசெய்க.**

கோட்டை புகையிரத நிலையத்தை 4 புகையிரதங்கள் வந்தடைந்த ஒழுங்குமுறை வருமாறு: மாத்தறையில் இருந்து வந்த புகையிரதத்தை விட 15 நிமிடங்கள் முன்னதாக புத்தளத்தில் இருந்து வந்த புகையிரதம் நிலையத்தை அடைந்தது. வவுனியாவில் இருந்து வந்த புகையிரதம் நிலையத்தை அடைவதற்கு 12 நிமிடங்கள் முன்னதாகவே மாத்தறையில் இருந்து வந்த புகையிரதம் நிலையத்தை அடைந்தது. கண்டியில் இருந்து வந்த புகையிரதம் வவுனியாவில் இருந்து வந்த புகையிரதத்தை விட 15 நிமிடங்கள் முந்தியே நிலையத்தை அடைந்தது.

08. கோட்டை புகையிரத நிலையத்தை மூன்றாவதாக வந்தடைந்த புகையிரதம் எது?
1) புத்தளம் புகையிரதம். 2) கண்டி புகையிரதம்.
3) மாத்தறை புகையிரதம்.

09. புத்தளத்தில் இருந்து வந்த புகையிரதம் இரவு 9.10 இற்கு கோட்டை நிலையத்தை அடைந்தது. எனின், கண்டி புகையிரதம் நிலையத்தை அடைந்த நேரம் யாது?
1) பி.ப 9.25 2) பி.ப 9.22 3) பி.ப 9.37

10. புகையிரதங்கள் கோட்டை நிலையத்தை வந்தடைந்த ஒழுங்குமுறை யாது?
1) புத்தளம் → மாத்தறை → கண்டி → வவுனியா.
2) புத்தளம் → கண்டி → மாத்தறை → வவுனியா.
3) கண்டி → புத்தளம் → வவுனியா → மாத்தறை.

*** கீழே தரப்படும் குறியீட்டுச் செய்கையை அவதானித்து 11-12 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

□ x □ + ○ = △

△ - 9 + □ = 24


11. உருவம் ○ இன் பெறுமதி யாது?
1) 2. 2) 3. 3) 5.

12. உருவம் □ இன் பெறுமதி யாது?
1) 5. 2) 4. 3) 6.

13. △ - ○ + □ இச் செய்கையின் பெறுமானம் யாது?
1) 30. 2) 26. 3) 35.

*** பின்வரும் பொருட்களின் விலைக்கு இடையிலான தொடர்பு வருமாறு:**
250g பருப்பு = 500g சீனி 750g சீனி = 500g கடலை
5kg கடலை = 2 பால்மா பைக்கற்று.

14. கீழே மூன்று கூடைகளில் உள்ள பொருட்களில் பெறுமதி கூடிய கூடை எது?





1) A 2) B 3) C

15. 1kg சீனி ரூபா 60.00 எனின், 1 பால்மா பைக்கற்றின் விலை யாது?
1) ரூ. 200.00 2) ரூ. 225.00 3) ரூ. 250.00

16. 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை. எனின், அன்றைய தினத்தில் இருந்து மார்ச் 8ஆம் திகதி வரை எத்தனை தினங்கள் அடங்குகின்றன?
1) 17 நாட்கள். 2) 16 நாட்கள். 3) 14 நாட்கள்.

17. 2011ஆம் ஆண்டின் ஓகஸ்ட் 07ஆம் திகதி புதன்கிழமை. எனின், செப்டெம்பர் 27வரை எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?
1) 7 2) 8 3) 9

*** நான்கு நண்பர்கள் குற்றிமீது ஏறி நின்றபோது அவர்களின் உயரம் வருமாறு :-**





18. நான்கு நண்பர்களில் உயரம் கூடியவர் யார்?
1) A 2) B 3) C

19. உயர அடிப்படையில் சம உயரம் உடையவர்கள் யாவர்?
1) Aயும் Cயும் 2) Aயும் Bயும் 3) Aயும் Cயும்

20. நிமலனிடம் ரூபா 2,000 இருந்தது. அதில் அரைப்பங்கின் கால்பகுதியை பாடசாலை உபகரணங்கள் வாங்குவதற்காக செலவழித்தான். எனின், உபகரணத்திற்காக செலவழித்த தொகை யாது?
1) ரூபா 1,000 2) ரூபா 250 3) ரூபா 500

*** ஒரு சதுரமுகியின் 6 பக்கங்களிலும் A,B,C,D,E,F எனும் ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வருமாறு:**




21. 'D' எனும் எழுத்திற்கு எதிரே உள்ள எழுத்து எது?
1) C 2) B 3) A

22. 'F' எனும் எழுத்திற்கு எதிரே உள்ள எழுத்து எது?
1) D 2) E 3) C

*** சைந்தவி, பானுஜா ஆகிய இருவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 276cm ஆகவும், சைந்தவி, தமிழினி ஆகிய இருவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 272cm ஆகவும், தமிழினி, பானுகா, சைந்தவி ஆகிய மூவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 413cm ஆகவும் இருந்தன. எனின்,**

23. சைந்தவியின் உயரம் யாது?
1) 135cm 2) 141cm 3) 137cm

24. பானுகாவினதும் தமிழினியினதும் கூட்டுத்தொகையை மீற்றர் சென்ரிமீற்றரில் தருக.
1) 278cm 2) 27m 8cm 3) 2m 78cm

*** 25ஆம், 26ஆம் வினாக்களில் தரப்பட்ட வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களின் ஒத்த கருத்துச் சொல்லை தெரிவுசெய்க.**

25. தாய் தன் மகளுக்கு **நிலாவைக்** காட்டி உணவு ஊட்டினாள்.
1) ஞாயிறு. 2) மதி 3) தினகரன்.

26. சூரியனின் வரவைக் கண்ட **அம்புயம்** தன் இதழ்களை விரித்தது.
1) மல்லிகை. 2) சூரியகாந்தி. 3) தாமரை.

27. தொலைபேசி : இலக்கங்கள் எனின், வானொலி :
1) பெட்டி. 2) அலைவரிசை 3) நிகழ்ச்சிகள்.

28. தரம் 05 : புலமைப்பரிசில் எனின், தரம் 11: ..................................
1) கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சை.
2) கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சை.
3) பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை.


*** பின்வரும் விலைத் தொகுதியைக் கொண்டு 29-30 வரையான வினாக்களுக்கு விடை தருக.**




29. அடிமட்டம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 7 2) ரூபா 8 3) ரூபா 9

30. புத்தகம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 55 2) ரூபா 60 3) ரூபா 120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடி அமாவாசைத் தினத்தையொட்டி வில்லூன்றி மற்றும் கீரிமலை பகுதிகளில் நேற்றுப் பக்தர்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வில்லூன்றியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை முதற்படத்திலும், மதகுருமார்கள் கிரியை வழிபாட்டை மேற்கொள்வதை இரண்டாவது படத்திலும், கீரிமலை தீர்த்தக் கரையில் மக்கள் தமது பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவதை மூன்றாவது படத்திலும், கீரிமலையில் உள்ள மண்டபத்தில் விசேட மேளக்கச்சேரி இடம்பெறுவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன்,நேசன், நந்தன்)*

# மாநகர எல்லைக்குள் அனைத்துக் கடைகளிலும் இன்று டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஒக.10

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் இன்று செவ்வாய்க்கிழமை டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் இ. ஜெயசேகரம் தெரிவித்துள்ளவை வருமாறு:

யாழ். மாநகரசபையின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று அனைத்து வர்த்தக நிலையங்களிலும் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே அனைத்து வர்த்தகர்களும் தமது கடைகள் மற்றும் அதன் சுற்றுப்புறச் சூழல், நகரின் சந்தைப் பகுதி, வடிகால்கள் என்பவற்றில் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகவுள்ள காரணிகளை அப்புறப்படுத்தி குப்பை கூளங்களை சேகரித்து வைக்கவும். பின்னர் யாழ். மாநகரசபை ஊழியர்கள் அப்பகுதிக்கு வருகை தந்து அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்கள். எனவே மாநகர சபையின் செயற்பாட்டுக்குத் தாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவினர் வருகை தந்து சோதனையிட இருப்பதால் அனைத்து இடங்களையும் துப்புரவாகப் பேணி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.

மேற்படி சிரமதானப் பணிகள் நேற்று நடைபெறவிருந்தது. எனினும் ஆடி அமாவாசை தினத்தை ஒட்டி இப்பணிகள் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16-26)

# கலைத்திறன் விழா

யாழ்ப்பாணம், ஒக.10

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆரம்பக் கல்வி மன்றம் நடத்தும் கலைத் திறன் விழா- 2010 நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆரம்பக் கல்வி மன்றத் தலைவர் நெ.மு. அஸ்ஹர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய கல்வியல் கல்லூரிப் பீடாதிபதியும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பதில் அதிபருமான கே.பேர்னாட் ஆகியோர் கலந்து கொள்வார்.

(த-16)

# திடீரென அதிகரித்துள்ள பிச்சைக்காரரின் எண்ணிக்கை



யாழ்ப்பாணம், ஒக.10


யாழ்ப்பாணத்தில் பிச்சை எடுப்போரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

தற்போது பிரசித்திபெற்ற ஆலயங்களின் மகோற்சவங்கள் நடைபெற்று வரும் இவ்வேளையில் ஆலயச் சுற்றாடல்களில் பிச்சைக்காரர்கள் வரிசையாக இருந்து தர்மம் பெற்றுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பிச்சை எடுப்பதற்காக நாட்டின் தென்பகுதி மற்றும் மலையக பிரதேசங்களில் இருந்தும் பிச்சைக்காரர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர் என அறியப்படுகிறது. (த-26)




# நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழா 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்



நல்லூர்,ஒக.10

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திரு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் பக்திப் பூர்வமாக நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவில் இம்மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழாவும், 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு 17 ஆம் திருவிழாவாக கார்த்திகைத் திருவிழாவும் அடுத்த மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு 20 ஆம் திருவிழாவாக சந்தான கோபாலர் உற்சவமும் மாலை 5 மணிக்கு கைலாசவாகனமும், 4 ஆம் திகதி சனிக்கிழமை 21 ஆம் திருவிழாவாக காலை 7 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி உற்சவமும் மாலை 5மணிக்கு வேல்விமானமும் நடைபெறவுள்ளன.

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் திருவிழாவாக காலை 7 மணிக்கு தெண்டாயுதபாணி உற்சவமும் மாலை 5 மணிக்கு ஒரு முகத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு 23 ஆம் திருவிழாவாக சப்பரத் திருவிழாவும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு 24 ஆம் திருவிழாவாக தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி புதன்கிழமை 25 ஆம் திருவிழாவாக காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 9ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5மணிக்கு பூங்காவனம் மற்றும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் உற்சவத்துடன் விழா இனிதே நிறைவுபெறும்.

யுத்தம் நிறைவடைந்து தற்போது குடாநாட்டுக்கான உல்லாசப் பயணிகள் வருகை அதிகரித்துள்ள இக்கால கட்டத்தில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டுப் பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-16-111)

## சந்நிதியில் கொடியேறுதின்று



சூரனை வதைத்த பின்னர்
சுந்தர முருகன் தோன்றி
பேரருள் வழங்கி நின்ற
பெரும்பதி கதிர்காமமாகும்
எண்ணிலா நகைகள் மாட்டி
எழில் தவழ் வேலையேந்தி
கண் கொளா காட்சி காட்டும்
கவின்நிறை நல்லூராகும்.

மாவையில் மயில்கள் ஆட
மாந்தோப்பு குயில்கள் கூவ
பாவையார் பால்குடங்கள் ஏந்த
பலநூறு காவடிகள் ஆட
காவினில் களிநடன மாடும்
காட்சியே மாவையாகும்.

நோயினால் வாடும் அன்பர்
நொந்தவர் அநாதைக்கெல்லாம்
தாயாக அன்னம் ஊட்டி
தானே வந்தருள் புரிந்து
தீராத நோய்கள் தீர்க்கும்
திருத்தலம் சந்நிதியே ஆகும்.

வானவர் பூச்செரிந்து
வணங்கிய வாழ்த் தொலிக்க
கோனவன் கொடிய தின்று
கொற்ற மாகோயில் ஏறும்
காண்பவர் கயிலை நண்ணி
கவலைகள் நீங்கி வாழ்வர்

-விகடகவி-

# மரக்கறிகளின் விலை எகிறியது

யாழ்ப்பாணம், ஒக.10

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

தற்போது விரத " சீசன்" ஆரம்பமாகியுள்ளமையாலேயே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பை அடுத்து தம்புள்ள பகுதியில் இருந்து நேற்றுப் பெருந்தொகையாக மரக்கறி வகைகள் எடுத்து வரப்பட்டன.

திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வகைகளின் நேற்றைய விலை விவரம் வருமாறு:

- கத்தரிக்காய் (1கிலோ) - 130 ரூபா
- பயிற்றங்காய் ( 1கிலோ) - 180 ரூபா
- பாவற்காய் ( 1கிலோ) - 160 ரூபா.
- மரவள்ளிக்கிழங்கு ( 1கிலோ) - 80 ரூபா
- தக்காளிப்பழம் ( 1கிலோ) 140 ரூபா
- வெண்டிக்காய் ( 1கிலோ) - 80 ரூபா
- பூசணிக்காய் ( 1கிலோ) - 60 ரூபா
- பச்சை மிளகாய் ( 1கிலோ) - 120 ரூபா
- வெங்காயம் ( 1கிலோ) - 60 ரூபா
- முருங்கை ( 1கிலோ) - 120 ரூபா
- கீரை (1பிடி) -40 ரூபா

(த-26)

# விபத்தில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக.10

நாய்களால் துரத்தப்பட்டு வேகமாக ஓடிவந்த நாய் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்ட இளைப்பாறிய அதிபருக்கு கால் முறிந்தது.

இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செ.சிவஞானம் (வயது - 61) என்பவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை

கொழும்பு, ஓக. 10

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி விசேட இலவச பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்காக பரீட்சை இடம்பெறும் தினங்களில் மாணவர்களுக்கு இலவச போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கு போக்குவரத்துச் சங்கங்கள் முன்வந்துள்ளன.

இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி நிறைவடையவுள்ளன.

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனம், தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் ஆகியனவே இந்த இலவச சேவைகளை வழங்கவுள்ளன. (சி)


கொக்குவில் கிழக்கு

பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்



பொற்பதி விநாயகர் ஆலய விகிர்தி வருட மகோற்சவம் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி அளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாள்கள் நடைபெற்று எதிர்வரும் 24.08.2010 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 20.08.2010 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம் நடைபெற இருப்பதால் அதில் பங்குகொள்ளும் அடியார்கள் முன்கூட்டியே ஆலய நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய நிர்வாகத்தினர்
சிவஸ்ரீ தியாகராஜா குருக்கள்
நடராஜா குருக்கள்
தொடர்பு: 0771751456






உடலை திடமாக கட்டியெழுப்புங்கள்

தசைநார் வளர்ச்சிக்கு

தசைநார் நன்கு விருத்தி பெறுவதற்கு அவசியமான போஷாக்கு அடங்கிய பானம். ஓமோன் மற்றும் இழையச் செயற்பாடுகளை அதிகரிப்பதுடன் நோயெதிர்ப்புச் சக்தியை விருத்திசெய்யவும் உதவும்.

Hotline 0777 536796
Manufactured under licence from Edge USA


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி முத்தையா (அப்பா)

(முகாமையாளர், ஈஸ்வரபகவான் அன் கம்பனி)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்தையா 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சண்முகவடிவு, கற்பகவடிவு, கிருஷ்ணவடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வீ.ஆர்.கே. இரத்தினசபாபதி (ஜே.பி), சிவானந்தராஜா, அன்னலிங்கம், சுரேந்திரராஜா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஓம்சக்தி, யசோதன், ஆதித்தன், ஆதிசக்தி, சிவசக்தி, சுதாகரன், மணிகண்டன், ஞானசக்தி, விஜிதா, கோகுலன், தர்ஷன், விஜயன், மயூரன், பிரியதர்சினி, திபாகரன், மதுரவாணி, காந்தரூபன், சாந்தரூபன், கோமேசன், மேரிசுமா, பிரவீனா, வராகி, வாசுகி, விபூஷன், சாள்ஸ் நிக்ஷன், டெய்சி ஆகியோரின் அன்புப் பேரனும் நிலாந்தி, புராதனி, பிரணவிகா, சஞ்ஜய், ரிவாஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

532/1, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, 021 222 5919

தகவல் :
குடும்பத்தினர்

(101749)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஓக 10

கரவெட்டி பரலோக மாதா ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (த-135)

* * *

கொழும்புத்துறை, ஓக 10

சில்லாலை புனித மரியாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும், திருவிழாத் திருப்பலி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கும் நடைபெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (த-135)

* * *

ஆடிச் செவ்வாயை முன்னிட்டு நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜைகள், அபிஷேகங்கள் என்பன இடம்பெறும். வருடாவருடம் கடைசி ஆடிச் செவ்வாயன்று இந்த ஆலயத்தில் பாற்செம்பு எடுத்தல், கற்பூரச் சட்டி எடுத்தல் மற்றும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறும். (த-26)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 29.12.1948
காலன் கையில் 13.08.2007

மீசாலை மேற்கைச் சேர்ந்த
அமரர் கந்தையா வேதநாயகம்
திதி: 10.08.2010

ஆண்டுகள் மூன்று ஆனதையா
அழியா உன் நினைவை மீட்குதையா
மீண்டும் நீர் வருவீரென்று
எம் விழிகள் நோக்குதையா
மாண்டவர் மீண்டு வருவதில்லை
மாறாத நியதியிது
மாவடியான் மலரடியில்
நிர்மலமாய் அமைதி கொள்க.

என்றும் நினைவுடன்:
மனைவி: தில்லைநாயகி
மகள்: வவி
மருமகன்: குமார்
பேரப்பிள்ளைகள்: இஷான், கிஷானா.

(சி/569755)


## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2276
திகதி 08.08.2010

வெற்றி எழுத்து: C வெற்றி எண்கள்: 5 0 4 7 4 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | எழுத்து/எண்கள் | | | | | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 5 | 0 | 4 | 7 | 4 | 3 | ரூபா. 16,954,164/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 5 | 0 | 4 | 7 | 4 | 3 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 0 | 4 | 7 | 4 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 4 | 7 | 4 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 72 |
| 4ம் பரிசுகள் | | | | | 7 | 4 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 695 |
| 5ம் பரிசுகள் | | | | | | 4 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் | 7102 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் | 70465 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | எழுத்து/எண்கள் | | | | | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 5 | 0 | 4 | 7 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 5 | 0 | 4 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 65 |
| 9ம் பரிசுகள் | | 5 | 0 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 703 |
| 10ம் பரிசுகள் | | 5 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 7077 |
| 11ம் பரிசுகள் | C | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 28074 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,090,392.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,475,130.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 2470662, 4607000 Hotline:2433631

முடிவுகளை அறிய www.nlb.lk



O/L, A/L, பட்டதாரிகளுக்கு
UK யில் உயர்கல்வியைத் தொடர அல்லது இங்கிருந்தவாறே UK உயர்கல்வியைத்தொடர அரியவாய்ப்பு



Teesside University
Walsall College Wisemore Campus
OFFICIAL REPRESENTATIVE

City & Guilds UK Dec 2010 / June2011
EC U.K May 2011
APPROVED CENTRE

Bringing Talent to Life...

Diploma / Advanced Diploma
Graduate Diploma (B.Eng)
புதியவகுப்புக்கள்

IELTS இன்றி UK இல் உயர்கல்வி
இலவசக்கருத்தரங்கும் ஆலோசனைகளும்

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
நாளை காலை 9.00 மணி

MEET THE OFFICIAL REPRESENTATIVE AND VISA CONSULTANT

APSS Engineering (Pvt) Ltd
5, Harmers Avenue, Colombo 6
Hotline: 077 241 8804, 077 230 6642
Email: apsseng@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்த சபை செயற்பாடுகள் மூலம் வழக்காளிகள் இருவருமே வெற்றியடைவர்

## பொத்துவில் பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 10

நீதிமன்றங்களில் பிணக்குகள் தீர்க்கப்படும்போது ஒருவர் வெற்றிபெற, மற்றவர் தோல்வியடைந்து விடுகிறார். ஆனால் மத்தியஸ்த சபை மூலம் தீர்க்கப்படும் பிணக்குகளில் வழக்காளிகள் இருவருமே வெற்றிபெறுகின்றனர்.

- இவ்வாறு இறக்காமத்தில் நடைபெற்ற மத்தியஸ்த தின விழாவில் பொத்துவில் பிரதேச செயலாளர் யூ.எல்.நியாஸ் தெரிவித்தார்.




இறக்காமம் அல் - அஷ்ரப் மத்திய மகா வித்தியாலயத்தில் இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளரும், மத்தியஸ்த குழாம் தவிசாளருமான எம்.எல்.அப்துல் மஜீட் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

பிரதேச செயலாளர் மேலும் கூறியவை வருமாறு:-

நீதிமன்றங்களுக்கு நீதி வேண்டிச் செல்பவர்கள் பெருமளவு பணத்தைச் செலவு செய்கின்றனர். எனினும் ஒருவரே வெற்றி பெறுகிறார்.

எதிராளி விரும்பினால் மேல் நீதிமன்றங்களில் மேன் முறையீடு செய்து வழக்கை மீண்டும் தொடர வாய்ப்பிருக்கிறது. எனவே, நீதிமன்றத் தீர்ப்புகள் முற்றுப்பெற்றவைகளல்ல.

ஆனால், மத்தியஸ்த சபை மூலம் பிணக்குதாரர்கள் பூரண மனத் திருப்தியடைகின்றனர். தீர்ப்புகள் ஊடாக அந்த வழக்கு முற்றுப்பெற்று விடுகிறது. பிணக்குதாரர்களை சமாதானமாக இணைத்து வைப்பது மிகப் பெரிய பலமாகும்.

மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளைச் செய்து கொடுப்பதைக் காட்டிலும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்ப்பது மிகவும் பெரிய சேவையாகும். இது இறைவன் விரும்புகின்ற ஒரு சமயக் கடமையுமாகும். - இப்படி நியாஸ் கூறினார். (ளி)

# கல்முனை நெடுஞ்சாலையில் வாகன விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் படுகாயம்

மட்டக்களப்பு, ஓக.10

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நம்புக்கணையிலிருந்து அட்டாளைச்சேனைக்கு உறவினர் வீட்டுக்கு வந்தவர்களை ஏற்றிவந்த ஓட்டோ, கிரான்குளத்தில் கனரக வாகனமொன்றுடன் நேருக்கு நேர் மோதியதால் இவ்வனர்த்தம்நேர்ந்தது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 4 பிள்ளைகளும், மருமகனான சாரதியுமே படுகாயமடைந்துள்ளனர். கனரக வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர். (ளி)

# கடமை உணர்வின்றிச் செயற்படும் திருமலை வைத்தியசாலை ஊழியர்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு நோயாளர்கள் கோரிக்கை

திருகோணமலை,ஓக.10

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் செயற்பாடுகளால்நோயாளர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

தாங்கமுடியாத உபாதையுடன் நோயாளர்கள் காத்திருக்கையில் அங்கு கடமையில் இருக்கும் ஊழியர்கள் சர்வசாதாரணமாகத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்துவிட்டே கடமையில் ஈடுபடுவர் என்று வைத்தியசாலைக்கு வரும் மக்கள் குறை கூறுகின்றனர்.

வைத்தியர்கள் பொறுப்புடன் நடந்து கொண்டாலும் கூட ஊழியர்கள் கவனயீனமாக உள்ளனர் என்பது நோயாளர்களது குற்றச்சாட்டாக இருக்கிறது. அத்துடன் நோயாளர்களைக் கணினி மூலம் பதிவு செய்யும் இடத்தில் சுமார் பத்து நிமிடங்களுக்கும் அதிகமாகத் தாமதிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அதிகாரிகள் மேற்படி நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுத்து பொறுப்புள்ளவர்களையும், தகுதியுடையவர்களையும் கடமைக்கு அமர்த்த வேண்டும் என மக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்படுகிறது.

# ஆசிரியர்கள் தமது தொழிலில் மகிழ்வுறாவிடில் எந்தத் தொழிலிலும் ஈடுபாடு இருக்காது

## சேவைநலன் பாராட்டு நிகழ்வில் உரை

மட்டக்களப்பு, ஓக.10

ஆசிரியர்கள் தாம் செய்யும் தொழில் குறித்து மகிழ்ச்சியாகவும் அக்கறையாகவும் இருக்காவிட்டால் எந்தத் தொழிலிலும் ஈடுபாடு காட்டமாட்டார்கள்.

- இவ்வாறு கலாநிதி கோ. கோணேசபிள்ளை சேவைநலன், பாராட்டு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

இவ்வைபவம் மண்டூர் - தம்பலவத்தை கனிஷ்ட வித்தியாலய அதிபர் வே.ஜெயரெட்ணம் தலைமையில் மேற்படி பாடசாலையில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''எந்தவொரு நாடும் முன்னேற்றப் பாதையை அடைய அடிக்கல்லாக அமைபவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. ஜப்பான், சிங்கப்பூர், ஜேர்மனி, தென்கொரியா ஆகிய நாடுகள் ஆசிரியர்களை மதித்தமையால் முழுப் பயனைக் கண்டுள்ளன.

குற்றச் செயல்கள் குறைவடையவும், பொருளாதார அபிவிருத்தி ஏற்படவும் ஆசிரியர்களின் அளப்பரிய பங்களிப்பு இன்றியமையாததாகும்.''

வித்தியாலய அதிபர் வே.ஜெயரெட்ணம் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

''இன்று சேவை நலன் பாராட்டுப் பெறும் ஆசிரியரான தா.இராசேந்திரம் அறிவு, திறன், மனப்பாங்கு உடைய பொதுத் தேர்ச்சியைப் பெறும் மாணவர் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டவர்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கணினி அறிவு, ஆங்கில அறிவு, தொழில்நுட்ப அறிவு உடையவர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்'' - என்றார்.

நிகழ்வில் ஆசிரியர் எஸ்.ரமணன் நன்றியுரையாற்றினார். (ளி)


# இலங்கைத் தேயிலைக்கு சர்வதேசத்தில் கிராக்கி

கொழும்பு, ஓக. 10

இலங்கைத் தேயிலைக்கு சர்வதேச மட்டத்தில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தேயிலை ஏற்றுமதிச்சபை தெரிவிக்கின்றது.

இலங்கைக்குப் போட்டியாக உள்ள இந்தியாவின் அஸாம் மாநில தேயிலைக்கு ஏற்பட்டுள்ள ஒருவகை நோய் காரணமாக இந்தியாவின் தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படுள்ளதாகவும், இதனால் இந்தியாவில் இருந்து உலகசந்தைக்கான நிரம்பல் திடீர் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் தேயிலை ஏற்றுமதிச்சபை தெரிவிக்கிறது.

இது இலங்கைத் தேயிலைக்கு கூடிய கேள்வியை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. இது கடந்த வருடத்தைவிட 25 சதவீத ஏற்றுமதி அதிகரிப்பைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)




# ஹற்றன் மாணவிகள் கடத்தப்பட்டது என்பது நாடகமே; அம்பலமானதால் காதலர்கள் இப்போது விளக்கமறியலில்!

## பொலிஸ் தரப்பு தெரிவிப்பு

கண்டி,ஓக. 10

ஹற்றனில் கடத்தப்பட்ட பாடசாலை மாணவிகள் இருவர் கம்பளையில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்கள் என்று பரபரப்பை ஏற்படுத்திய சம்பவமானது காதலர்களால் சோடிக்கப்பட்டதென்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்குப் பிழையான தகவல்களை வழங்கிய மாணவிகள் இருவரும் உரிய விசாரணைக்குப் பின்னர் ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மீண்டும் நாளை புதன் கிழமை ஹற்றன் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு ஹற்றன் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்த மாணவிகளின் காதலர்களான பாடசாலை மாணவன் உட்பட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தக் காதலர்களைக் கம்பளைக்கு அழைத்துச்சென்ற வான் சாரதியும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அத்தோடு, குறிப்பிட்ட வானையும் ஹற்றன் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் வட்டாரத் தகவல்களின் படி, ஹற்றன் நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்கின்ற இந்த இரு மாணவிகளும் பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவனையும், இளைஞன் ஒருவனையும் நீண்டநாள்களாகக் காதலித்து வந்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த 2 ஆம் திகதி இவர்கள் வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு கம்பளைக்குச் சென்றுள்ளனர். அங்கு காதலர்கள் உல்லாசமாக இருந்துள்ளனர். இந்நிலையில் இரவாகி விட்டதால் காதலர்களின் ஆலோசனைக்கேற்ப அந்த இரண்டு மாணவிகளும் பிளேட் ஒன்றினால் தத்தமது கைகளைக் கீறிக்கொண்டுள்ளனர். தம்மை இனந்தெரியாதவர்கள் கடத்தி வந்தனர் எனவும் தாம் தப்பித்து வந்தனர் எனவும் பிரதேசவாசிகளிடம் பொய் சொல்லியுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து இவர்களின் பேச்சை நம்பிய பிரதேசவாசிகள் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவித்துள்ளனர். இதன் பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற கம்பளைப் பொலிஸார் பாடசாலை மாணவிகளைக் கம்பளை வைத்தியசாலையில் சேர்த்ததோடு விசாரணைகளிலும் ஈடுபட்டனர். இந்த விசாரணைகளைத் தொடர்ந்தே காதலர்களின் கடத்தல் நாடகம் அம்பலத்துக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# எசல பெரஹராவை முன்னிட்டு கடமையில் 6 ஆயிரம் பொலிஸார்

கண்டி, ஓக.10

கண்டி தலதாமாளிகையின் எசல பெரஹரவை முன்னிட்டு சுமார் 6,000 பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஆறு பேரின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது,

இதற்கான பொறுப்புகளை, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண ஏற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் புதிய போக்குவரத்து ஒழுங்கு முறைகள் தொடர்பில் பொலிஸார் இயங்கவுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,பெரஹராவின்போது பொது மக்கள் அநாவசியமான பொருள்களை கொண்டு செல்லவேண்டாமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ளி)

# மஸ்கெலியா கீக் தோட்ட டெங்கு ஒழிப்பில் 2,500 பேர் கலந்து கொண்டு முன்மாதிரி

நுவரெலியா, ஓக.10

மஸ்கெலியா புரவுன் கீக் தோட்டத்தைச் சேர்ந்த 7 பிரிவுகளில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அலுவலர் புவேந்திரன் மற்றும் பொது சுகாதார அதிகாரி எண்டனி பாஸ்கரன் தலைமையில் தோட்ட முகாமையாளர் மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்புக்கான சிரமதானப்பணியை மேற்கொண்டனர்.

இவ்வேலை திட்டத்தில் 2 ஆயிரத்து 500 பேர் கலந்துகொண்டு முன்மாதிரியாக விளங்கினர். இவ்வேலை திட்டம் சுமார் தோட்டக் காரியாலயம், தோட்ட குழந்தைகள் காப்பகங்கள், தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் பாடசாலை வளாகங்கள், தோட்ட ஆலயப் பகுதிகள், தேயிலை தொழிற் சாலை பகுதிகள், வைத்தியசாலை ஆகிய பகுதிகளிலேயே டெங்கு ஒழிப்புச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முழுமையான ஒத்துழைப்பை பொது சுகாதார அதிகாரி [illegible] பாஸ்கரன் மற்றும் கிராம சேவையாளர், தோட்ட வைத்தியர் ராஜபக்ஷவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பில் மாற்றம் கொண்டுவர திண்டாடும் ஜனாதிபதி மஹிந்த

**ஜனாதிபதியொருவர் இரு தடவைகளுக்கு மேலும் அப்பதவியில் நீடிக்கத்தக்கவகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு எதிராகத் தலையெடுத்துள்ள எதிர்ப்புக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில் சிரமமுறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.தே.கட்சியின் யாப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று கட்சியின் உயர் மட்டத்தில் தலைதூக்கியுள்ள கோரிக்கையால் சிரமமுறும் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க-**

**ஆகிய இவ்விரு தலைவர்களும் தாம் எதிர்நோக்கியுள்ள சவால் களைச் சமாளிப்பதில் வெற்றி காண்பார்களா என வினாவெழுப்புகிறது இக்கட்டுரை.**

**'லங்காதீப' சிங்கள நாளிதழில் பிரதி வியாழக்கிழமை தோறும் வெளியாகும் வியாழன் அலசல் கட்டுரைத் தொடர் வரிசையில் கடந்த ஜூலை 28ஆம் திகதி உபுல் ஜோசப் பெர்னாண்டோவினால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ்வடிவம் இங்கு தரப்படுகிறது.**


மஹிந்த


ரணில்

1978ஆம் ஆண்டில் அதுவரை நடைமுறையிலிருந்த அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி புதிய அரசமைப்பொன்றை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் மருமகனே இன்றைய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க ஆவார். ஜே.ஆர். உறவு முறையில் ரணிலின் மாமனாராவார்.

ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் 1995 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சியின் யாப்பு திருத்தி அமைக்கப்பட்டது.

தற்போது ஐ.தே.கட்சியினர், மாமனார் ஜே.ஆரால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு மற்றும் மருமகன் ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப்பட்ட கட்சியின் யாப்பு ஆகிய இரண்டையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கூப்பாடு போட்டு வருகின்றனர். ஜே.ஆரால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு மற்றும் ரணிலால் உருவாக்கப்பட்ட கட்சியின் யாப்பு ஆகிய இரண்டும் நடைமுறையில் இருக்கும் வரை கட்சியால் மீண்டும் ஒரு போதும் ஆட்சியைக் கைப்பற்ற இயலாது என ஐ.தே. கட்சியினர் திடமாக நம்புவதே இதற்கான காரணமாகும்.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர். புதிய அரசமைப்பை உருவாக்கியமை, எப்போதுமே ஐ.தே. கட்சியை ஆட்சி அதிகாரத்தில் நிலைத்திருக்க வைக்கும் குள்ள நோக்கத்தை மனதில் இருத்தியே ஆகும்.

அதேபோன்று தேர்தலில் தோல்வி மேல் தோல்வி கண்டாலும் எப்போதுமே ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தைத் தாம் தக்க வைத்துக்கொள்ளும் நோக்கத்துடனேயே அதற்கு வழி செய்யும் விதத்திலேயே 1995ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே. கட்சியின் யாப்பைத் திருத்தி அமைத்திருக்கக்கூடும்.

ஐ.தே.கட்சியை எப்போதுமே - தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் வைத்துக் கொள்ளும் நோக்கில் அன்று ஜே.ஆர். உருவாக்கிவைத்த புதிய அரசமைப்பு கடைசியில் ஐ.தே.கட்சி யின் ஆட்சிக்கே குழி பறிப்பதாய் அமைந்தது.

1991ஆம் ஆண்டில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திஸ நாயக்கா ஆகியோர் கடைசியில் ஜே.ஆரின் அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரசிலிருந்து வெளியேறிச் சென்றனர். ஆனால், இவ்விருவருமே புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான ஜே.ஆரின் முயற்சியின் போது, அது குறித்த ஆலோசனைகளைத் தயாரிக்க ஜே.ஆரினால் நியமிக்கப்பட்ட சட்ட வல்லுநர்கள் குழுவில் அங்கம் வகித்துச் செயற்பட்ட பிரமுகர்களாவர்.

ஜே.ஆரின் அந்தப் புதிய அரசமைப்பு யோசனை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டபோது அதற்கு ஆதரவாகச் சட்ட நுணுக்கங்களை முன்வைத்து வாதாடியவர்களும் இந்த அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்கவுமே. ஜே.ஆர். பதவியில் இருந்த வரையிலும் இந்த இருவராலும் ஜே. ஆரின் அந்த அரசமைப்புக் காரணமாக தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடிந்தது. பின்னர் பிரேமதாஸ ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக்கொண்டதை அடுத்து இந்த இரு பிரமுகர்களும் தாமே ஆதரவளித்துத் தயாரித்த - தாம் சிறந்ததொரு அரசமைப்பெனக் கூறிவந்த ஜே.ஆரின் அந்த அரசமைப்பினால் அரசியலில் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. கடைசியில் அந்த அரசமைப்பின் காரணமாக ஐ.தே.கட்சி அரசும், கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டு அத்துலத் முதலியும் காமினி திஸநாயக்கவும் ஐ.தே. கட்சியிலிருந்தும் அரசிலிருந்தும் பிரிந்து வெளியேற நேர்ந்தது.

இத்தகைய விதத்திலேயே அன்று ஜே. ஆர்., ஐ.தே. கட்சியை எப்போதுமே ஆட்சி அதிகாரத்தில் நிலைநிறுத்திவைக்கும் நோக்குடன் உருவாக்கிய அவரது புதிய அரசமைப்பு கடைசியில் ஐ.தே.கட்சியின் நாசத்துக்கு வழி வகுத்தது.

## ஐ.தே.கவின் யாப்பில் மாற்றம்: சிரமமுறும் கட்சித் தலைவர் ரணில்

தேர்தல்களில் ஐ.தே.கட்சி தோல்வியுற்றாலும், கட்சியின் தலைமைத்துவத்தைத் தாம் தக்கவைத்துக்கொள்ளும் விதத்தில் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே. கட்சியின் யாப்பை மாற்றி அமைத்த வேளையில் ஏனைய ஐ.தே. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணிலின் அத்தகைய நடவடிக்கைக்கு முழுமையான ஆதரவு வழங்கினர்.

ரணில் விக்கிரமசிங்க எப்படியாவது என்றோ ஒருநாள் அதிகாரத்திலிருக்கும் சந்திரிகாவின் அரசைப் பதவியிலிருந்து அகற்றி ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசொன்றை நிறுவுவார் என்ற தமது உறுதியான நம்பிக்கை காரணமாகவே ரணில், ஐ.தே.கட்சியின் யாப்பை மாற்றியமைப்பதற்கு அத்தரப்பினர் தமது முழுமையான ஆதரவை நல்கினர்.

இது நடந்த 1995ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 15 ஆண்டுகள் ஓடிக்கழிந்துவிட்டன. ஆனால் ஐ.தே.கட்சியோ இன்றும் கூட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவே செயற்பட நேர்ந்துள்ளது. தேர்தல்களில் ஐ.தே.கட்சி தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவியதைச் சாக்காக வைத்து ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணிலை அகற்றவேண்டுமெனப் பலர் குரலெழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினார். ஆனாலும் கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய ரணிலை ஐ.தே. கட்சியின் தலைவர் பதவியிலிருந்து அகற்றி விட இயலாது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒரு தரப்பினர் ஐ.தே.கட்சியிலிருந்து விலகிக்கொண்டனர்.


ஜே.ஆர்.


பிரேமதாஸா

கட்சிக்கான தற்போதைய நடைமுறையில் இருக்கும்வரை கட்சியின் தலைமைப் பதவியிலோ, கட்சியின் உட்கட்டமைப்பிலோ மாற்றம் எத்தனையும் ஏற்படுத்த இயலாது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட கட்சியின் ஏனைய உயர்மட்டத் தலைவர்கள் அண்மைக்காலமாக ஐ.தே. கட்சியின் யாப்பை மாற்றியமைக்க வேண்டுமெனக் குரலெழுப்பி வந்தனர்.

சரி, மாமனார் ஜே.ஆரின் அரசமைப்பிலும் மருமகன் ரணிலின் கட்சி யாப்பிலும், மாற்றங்களை ஏற்படுத்திவிட்டால் மட்டும் ஐ.தே.கட்சியால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியுமா?

### தரவுப் பெட்டி

ஜே. ஆரின் அரசமைப்பிலும், ரணிலின் கட்சி யாப்பிலும் மாற்றங்களை கொண்டு வந்தால் மட்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாமா?

தானே தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்புகிறார்கள் என்று ரணில் நம்புவதாக இருந்தால் தயக்கம் - அச்சம் இன்றி அவர் வாக்களிப்பை நடத்தலாம்.

அரசமைப்புச் சிக்கலுக்கு நிறைவேற்று அதிகார பிரதமர் பதவியை உருவாக்குவது தீர்வாக அமையமாட்டாது எனக் கூறும் இடது சாரிகள் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவும் திண்டாடும் ஜனாதிபதி மஹிந்தவும்.

தனது ஆட்சி முடிந்த பின்னர் தனக்கேற்ற தலைவரை உருவாக்குவதற்கே ஜனாதிபதி மஹிந்த அரசமைப்பில் திருத்தத்தைக் கொண்டுவர முயல்கிறார்.

அது குறித்து உறுதியாக எதனையும் கூறிவிட இயலாது. ஐ.தே.கட்சியின் யாப்பை மாற்றியமைப்பதொன்றும் அவ்வளவு சிரமமான காரியமல்ல. தற்போது கட்சியின் நிறைவேற்றுச்சபை ஐ.தே.கட்சியைப் புனரமைத்தல் என்ற யோசனை மூலம் கட்சியின் யாப்பைத் திருத்தியமைத்தாகவேண்டும் என்பதனை உணர்ந்துகொண்டுள்ளது. இந்தப் பிரேரணையை நிறைவேற்றுச் சபையில் நிறைவேற்றிக்கொண்டு கட்சியின் மகாநாட்டைக் கூட்டி அதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டியதே தற்போதைய தேவையாக அமைந்துள்ளது.

ஆனால் அதற்கான நடவடிக்கை பின்தள்ளிப் போட்டுச் செல்லப்படுவதே தற்போது பிரச்சினையாக அமைகிறது. இத்தகைய தாமதமே கட்சியின் உள்மட்டத்தில் ஒருவருக்கொருவர் கருத்து மோதலில் ஈடுபட்டு கட்சியின் பலவீனம் நாட்டு மக்களுக்குப் புலப்படுவதற்குக் காரணமாக அமைகிறது. கட்சியின் யாப்பைத் திருத்தியமைத்து கட்சியின் தலைமைப்பதவி மற்றும் ஏனைய பதவிகளுக்காக வாக்கெடுப்பொன்றை நடத்தி அப்பதவிகளுக்கானவர்களைத் தேர்ந்தெடுப்பது அத்துணை சிரமமானதொரு காரியமல்ல.

தாமே தொடர்ந்தும் கட்சியின் தலைமைப் பொறுப்பை வகிக்கவேண்டும் எனக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் விரும்புகிறார்கள் என்பதை ரணில் உறுதியாக நம்புவாரானால் அவர் அச்சம், தயக்கம் எதுவுமின்றி அத்தகைய வாக்கெடுப்பொன்றுக்கு முகம்கொடுக்க முடியும்.

அவ்விதம் அத்தகைய வாக்கெடுப்பொன்றில் ரணில் தொடர்ந்தும் கட்சியின் தலைவராக இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப் படுமானால் ரணிலைக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகிவிடுமாறு எவராலும் விரல் அசைக்க இயலாது; அவரை வற்புறுத்த இயலாது. ஏனெனில் க்கட்சியே தமது தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தியுள்ளதென ரணிலால் வாதிட இயலும். அத்தகைய நிலையில் ஐ.தே. கட்சிக்கு ரணில் மூலம் புதிய தலைமைத்துவம் கிட்டும். அத்தகைய புத்துணர்வு பெற்ற நிலையில் ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே.கட்சியினர் ஒன்றிணைந்து புத்தூக்கம் பெற்று மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இன்றைய சுதந்திரக் கட்சி அரசைப் பதவியிலிருந்து வெளியேற்ற இயலும். அத்தகைய தொரு நிலையில் நோய் வாய்ப்பட்டு நடக்கவே சிரமப்படும் யானையைப் போலல்லாது, துடிப்பும் பலமும் கொண்ட ஒரு யானைக் கூட்டத்துக்கே தலைமைதாங்கும் யானையொன்றைப் போன்று ரணிலால் நாட்டு மக்களிடம் ஆதரவு கோர, பொதுத் தேர்தலொன்றுக்கு முகம் கொடுக்க இயலும். அத்தகைய நிலையில் கட்சி அடிமட்டத்துக்கு நலிவு பெற்றமைக்கு ரணிலின் தலை மைத்துவமே காரணம் என எவராலும் குற்றம் சாட்ட இயலாதிருக்கும்.

கட்சியின் தலைமைத்துவம் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுமானால், ஒன்றில் ரணில் கட்சிக்குச் சக்தி மிக்க - திறன் மிக்க தலைவராகி மீண்டும் தலைமைத்துவத்தை ஏற்கக்கூடும். அல்லது கட்சிக்குப் புதிதாகப் தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரணில் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைவிட நேரும். இவ்விரண்டில் எதுவொன்று நிகழ்ந்தாலும் கூட ஐ.தே.கட்சி சக்தியும் பலமும் மிக்க யானையாக அரசியலில் தலை தூக்க வழி பிறக்கும்.

கட்சியின் தலைமைத்துவத்தைத் தெரிவு

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலைக் கண்ணீர்



முதலை ஏன் கண்ணீர் வடிக்கிறது தெரியுமா?

கடல் தண்ணீர் உப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். ஒரு லீற்றர் கடல் நீரில் சுமார் 35 கிராம் உப்புக் கரைந்து உள்ளது. மெட்ராஸ்காரர் ஒருவர் வேறு வழி இல்லாமல் கடல் தண்ணிரையே குடித்துக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்! என்ன ஆகும்?

கடல் வற்றிப் போகுமா? அது ஒன்றும் ஆகாது! அவர் உடம்பு வீணா போகும்.

கணிசமான அளவுக்கு சோடியம், பொட்டாஷியம், கல்ஷியம், இது மாதிரியான உப்புக்கள் அவருடைய உடம்பினுள் போய் ரத்தத்திலே கலக்கும்! கடைசியில் ரொம்ப ஆபத்தில் போய் முடியும்!

நமது நிலைமை அப்படி! கடலிலே கிடக்கும் முதலையினுடைய நிலைமை எப்படித் தெரியுமா?

முதலை மட்டுமில்லை.. கடலிலேயே வாழும் உயிரினங்கள் நிறைய இருக்கு. இவையெல்லாம் உணவை உண்ணும்போது... உணவோடு சேர்ந்து நிறைய கடல் நீரும் உள்ளே போகும். அதனாலே கடல் தண்ணீரில் கரைந்திருக்கும் உப்புக்களும் நிறைய உள்ளே போகும்!

இந்த உப்புக்களை எப்படி மறுபடி வெளியேற்றுகின்றன?

அதிகப்படியான உப்பை வடிகட்டுவதற்கு அவைகளிடம் ஒரு வசதி இருக்கிறது! இதற்காக அவை உடம்பில் ஒரு உறுப்பே இருக்கிறது!

அதற்கு பேர் சால்ட் கிளாண்டு. முதலைக்கு இந்த சால்ட் கிளாண்டு துவாரம் எங்கே உள்ளது தெரியுமா?

அதனுடைய கண் ஓரத்தில்தான்!

அதன் வழியாக அதிகப்படியான உப்பு வெளியே வந்துவிடுகிறது!

இது ஒரு திரவமாக வெளியே வருகிறது!

பார்ப்பதற்கு இது கண்ணீர் மாதிரி இருக்கும்!

ஆனால் அது முழுவதும் இருப்பது உப்பு!

முதலைக் கண்ணீரை எடுத்து எவ்வளவு உப்பு இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்தார்கள்!

முதலைக் கண்ணீரில் உள்ள சோடியம் உப்பு கடல் தண்ணியில் இருக்கும் சோடியம் உப்பை விட மூன்று மடங்கு அதிகமாம்.

முதலையின் இரத்தத்தில் இருக்கிற உப்பை விட கண்ணீரில் ஐந்து மடங்கு அதிகமாக இருக்குதாம்.

அதனால் முதலை ஏன் அழுகிறது என்றால் அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்காகத்தான்!

சிலபேர் அதைப் பார்த்து 'முதலை பிரார்த்தனை பண்ணுகிறது... மனம் கசிந்து கண்ணீர் வெளியே வருகுது' என்று சொல்லுவார்கள்.

அப்படிச் சொல்வது தவறு.

அதனாலேதான் பொய்யான அழுகை அழுபவர்களை 'முதலைக் கண்ணீர் வடிக்கிறான்' என்று சொல்வார்கள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மனிதனும் தெய்வமாகலாம்

ஆசை சுயநலமானது. அது தன்னை தன் மகிழ்ச்சியை முக்கியமாக நினைக்கும். மற்றவர்களைப்பற்றி கவலைப்படாது. ஒரு பெண் மீது ஆசை வைத்த ஆண்கள் அவளை அடைய விரும்புவார்களே ஒழிய அவளது விருப்பம், எண்ணம், வெறுப்புப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். மற்றவர்களை கஷ்டப்படுத்தியாவது சந்தோஷமாக இருப்பார்கள்.

ஆசை விலங்குத்தனமானது. அன்புள்ளவர்கள் மனிதர்கள். பிறர் உணர்ச்சிகளை மதித்து உதவுவார்கள். பிறர் அழுதால் தானும் அழுவார்கள். ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றால் ஓடிப்போய்ப் பார்ப்பார்கள். ஆனால் 'அன்பு' தான் பிறர்க்கு என்ன செய்கின்றோமோ அதைப் பிறரும் தனக்குச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கும்.

நாம் சிரித்தால் பக்கத்தில் உள்ளவனும் சிரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அன்பின் பலவீனம். அப்படிச் சிரிக்கவில்லை என்றால் கோபப்பட்டு உறவை முறித்துவிடுவார்கள், 'எதிர்பார்ப்பு'' அன்பின் கெட்டகுணம். 'நான் உன் வீட்டுக்கு எட்டுத் தடவை வந்திருக்கிறேன். நீ என் வீட்டுக்கு ஒரு தடவைகூட வரவேயில்லை என்று நண்பர்கள் சண்டை போடுவதுண்டு.

அருள் என்பது பிறரது நன்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட உணர்ச்சி. காரணம் அற்ற கருணையின் வெளிப்பாடு அருள். சுயநலம் இன்றி தான் கஷ்டப்பட்டாலும் பிறருக்கு உதவும் உயர்ந்த மனம் அருள் மனம்.

ஆசை உள்ளவர்கள் விலங்குகள். அன்பு உள்ளவர்கள் மனிதர்கள். அருள் உள்ளவர்கள் தெய்வங்கள். பிறரை கெடுத்தாவது துன்புறுத்தியாவது தான் மகிழ்ச்சியா இருக்க நினைப்பது ஆசையின் இலக்கணம். தானும் அவனும் நன்றாக இருக்க வேண்டும். அதே மாதிரி தானும் அவனும் கஷ்டப்படக் கூடாது என்ற எண்ணம் அன்பின் இலக்கணம். தான் கஷ்டப்பட்டாலும் அவமானப்பட்டாலும் பிறர் துன்பப்படக்கூடாது என்ற கருணை அருளின் இலக்கணம்.

இலக்கியத்தில் இந்த மூன்று குணத்திற்கும் மூன்று பெண்கள் சொல்லட்டுமா? ராமாயணத்தில் கைகேயி தன் மகன் நாடாள விரும்பி கோசலையை அழ வைத்தாள். தசரதனைச் சாக விட்டாள். மன்றாடிக் கேட்டும் கைகேயி முதலை மாதிரி பிடிவாதத்தை விடவில்லை. எனவே கைகேயி விலங்கு!

கோசலை பரதனுக்கு அரசு கிடைத்தபோது பதறவில்லை. 'உன்னை விட பரதன் நல்லவன்' என்று ராமனிடம் பாராட்டினாள். ஆனால் ராமன் காடு போவதை அவளால் ஏற்கமுடியவில்லை. கைகேயி மகிழட்டும் தன்னை அவள் வருத்தலாம் என்று தசரதரிடம் சண்டை போட நினைத்தாள். அவள் சராசரிப் பெண். அன்பு மனம் அவளது குணம்.

சுமித்திரையோ ராமனுக்காக லட்சுமணனைக் காட்டுக்குப் போகச் சொன்னாள். தம்பியாக அல்ல வேலைக்காரன் என்ற எண்ணத்தில்போ அவன் திரும்பி வந்தால் வா அல்லது அவனுக்கு முன் இறந்துபோ என்றாள். அவள் மனம் ஆசை, அன்பு இவற்றைக் கடந்த அருள் பொழியும் தெய்வமனம். இவர்கள் முகத்தால் பெண்கள். அகத்தால் ஒருத்தி விலங்கு, ஒருத்தி மானுடப்பெண், ஒருத்தி தெய்வம்.

ஒரு சின்னக்கேள்வி... கோபித்துக் கொள்ள மாட்டீர்களே! இதைப் படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் கைகேயியா? கோசலையா? சுமித்திரையா? அதாவது விலங்கா? மனிதனா? தெய்வமா?

சுகி.சிவம்.

# பிரபஞ்சத்தின் மூலாதாரம்



நடராஜர் உருவத்தின் தன்மை குறித்துப் பலரும் பலவிதமாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதன் தத்துவ விளக்கத்தை அறிஞர் ஆனந்தக்குமாரசுவாமி பின்வருமாறு வெளியிட்டுள்ளார். சிவ தாண்டவத்தின் அவசிய முக்கியத்துவத்தை முழுமையாக நாம் வியாக்கியானம் செய்வதானால் இவ்வாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம். அது மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக பிரபஞ்சத்துக்குட்பட்ட சகலவிதமான அசைவுகளதும் மூலாதாரமாக அவன் புரியும் ஒத்திசைவான ஆட்டத்தைக் குறிக்கும் உருவமாகும். அதையே திருவாசி காட்டுகிறது. இரண்டாவதாக மாயை எனும் பொறியில் சிக்குண்டு தவிக்கும் எண்ணிறந்த மனித ஆன்மாக்களை விடுவிப்பதற்காக அவன் ஆடுகின்ற ஆட்டம். மூன்றாவதாக அது ஆடப்படும் இடம் சிதம்பரம். உலகின் நடுமையம் - அது இதயத்தில் இருக்கிறது. [illegible]

# பொன் மொழிகள்

- தனக்குத் தெரிந்த விடயங்களை மட்டும் மனிதன் பேசுவானாகில் உலகில் பூரண அமைதி பிறக்கும் -பெர்னாட்ஷா
- பகைவரிடமும் அன்பு காட்டி அவரிடமிருந்து நலம் பெறல் நல்லோர் இயல்பு -நீதிவெண்பா
- நாம் மட்டும் தலைவணங்கிக் கேட்போமானால் குழந்தைகளிடமிருந்து எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். -கார்தி
- பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே. -கன்பூசியஸ்
- தற்காலிகமான சிறியதொரு பாதுகாப்பை விலைக்கு வாங்குவதற்காகத் தங்களது அத்தியாவசியமான சுதந்திரத்தை விட்டு விடுபவர்கள் சுதந்திரத்திற்குத் தகுதியானவர்களல்லர். -பெஞ்சமின் பிராங் கிளின்.
- எமது வாழ்வை மேன்மையுறச் செய்துகொள்ள முடியும் என்பதை சான்றோரின் வாழ்க்கை முறைகள் எமக்கு நினைவூட்டுகின்றன. காலம் என்ற மணல் தரையில் அவர்களின் சுவடுகள் காணக்கிடக்கின்றன. -ஹென்றி வேட்ஸ் வர்த்.
- நாம் எந்தச் செயல்களைச் செய்யலாம் என்று முடிவு செய்வோம். நாம் செய்யும் செயல்கள் நம்மை இத்தகையவர் என்று முடிவு செய்யும். -வெர்னஸ்.

தொகுப்பு: பு.தட்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மற்றவர்களுக்காகச் சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லையுண்டு.

### இடபம்



குடும்ப உறுப்பினர்கள் இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். செய்ய மறந்த வேலை ஒன்றால் சிரமங்களுக்கு ஆளாகலாம். சில பொருள்களைக் கடனுக்கு வாங்குவீர்கள். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும்.

### மிதுனம்



வழக்கத்திற்கு மாறாக கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சிக்கனத்தை அதிகரித்து சேமிக்க முற்படுவீர்கள். சில காரியங்களைக் காலதாமதமாகத் துவங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உடன் பணிபுரியும் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம்.

### கடகம்



பிடிவாதமாகச் செயற்பட்டு மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உங்களுக்கு பிடித்த ஒன்று மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்ய நேரிடலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பண விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

### சிங்கம்



ஆசைகள், எண்ணங்கள் நிறைவேறும் நாள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். கையில் பணப்புழக்கம் கூடும். தடை, தாமதங்கள் இல்லாமல் எந்த வேலையையும் சுலபமாக முடிப்பீர்கள். விருந்தினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். மதிப்பு, கௌரவம் மேம்படும் நாள்.

### கன்னி



வெளியூர்களிலிருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும். கடன்மிகுதி ஒன்றைச் செலுத்துவீர்கள். பொறுப்பான வேலைகளால் அலைக்கழிப்பு அதிகரிக்கும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத ஒருவரைச் சந்திக்கலாம்.

### துலாம்



இரண்டு நாள்களாகத் தடைபட்ட காரியம் ஒன்று நடக்கும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்ல நேரிடலாம். அரசு தொடர்பான வேலைகள் அனுகூலமாக முடிவுக்குவரும். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போல தோன்றினாலும், இறுதியில் சாதகமாக அமைந்துவிடும். ஒருவர் உங்களுக்குச் செய்த உதவிக்கு நீங்கள் பதில் உதவி செய்வீர்கள்.

### விருச்சிகம்



நடக்காமல் தடைபட்டுள்ள சில காரியங்களை நினைத்து வருத்தம் அடைவீர்கள். திட்டமிட்ட பயணங்களை மாற்றி அமைக்கலாம். சக ஊழியர் ஒருவரின் ஏட்டிக்குப் போட்டியான பேச்சுக்களால் எரிச்சல் அடையலாம். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு நேரும்.

### தனுசு



உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கச் செல்லும் சிலருக்கு நீங்கள் துணையாகச் செல்வீர்கள். நண்பர்கள் சிலரிடம் மனம்விட்டுப் பேசுவீர்கள். வரவேண்டிய பணம் ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

### மகரம்



மனதில் இனம் புரியாத சந்தோஷம், உற்சாகம் குடி கொள்ளும். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்ட உறவினர் ஒருவர் வீட்டிற்கு வரலாம். புதியவர்கள் சிலரின் நட்புக் கிடைக்கும். காத்திருப்பு, அலைக்கழிப்பு இல்லாமல் சில வேலைகள் சுலபமாக முடிவுக்கு வரும். அனுகூலமான நாள்.

### கும்பம்



பிறரை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடனடியாகக் கைக்குக் கிடைக்காமல் தடைப்படலாம். திடமாக முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பம் அடையலாம்.

### மீனம்



அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். உறவினர் ஒருவர் உங்களை உதாசீனப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளலாம். கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். தாயார் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றக் கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





திதி – பிரதமை
10.08.2010

**அமரர் கந்தையா தங்கம்மா**

தோற்றம் 15.05.1942 — மறைவு 27.03.2009

ஓடி உருண்டதம்மா உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உம்பிரிவை எண்ணி நிதம்
அன்னை முகம்பார்த்து உறங்கிப் பழகிய நாம்
இன்று தூக்கமின்றி துடியாய்த் துடிக்கின்றோம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்
ஆண்டொன்றாகியும் ஆறவில்லையம்மா எம் துயரம்

**அமரர் கந்தையா உதயகுமார்**

தோற்றம் 02.12.1964 — மறைவு 22.07.2009

ஓராண்டு உருண்டோடியதப்பா
கண்டதெல்லாம் கனவாகிப் போனதப்பா
ஆறுதல் சொல்லும் ஆலமரமாய் இருந்துவிட்டு
அவசரமாய் சாய்ந்ததேனோ?
விதையாய் வீழ்ந்து முளைவிட்டு
கிளைபரப்பி விழுது எறிந்து நிழல் தந்து நின்ற
குடும்ப விருட்சமே நூறாண்டு சென்றாலும்
நினைவிழந்து போகுமோ நெஞ்சு

**என்றும் நினைவுடன்**
**குடும்பத்தினர்.**

தில்லையம்பதி,
கோண்டாவில்.

(101719)


Branded பட்மிட்டன், டென்னிஸ்,
கிரிக்கெட் மட்டைகள் மற்றும் சகல
விதமான பாதணிகள், பாரம் தூக்கும்
உபகரணங்கள், விளையாட்டுத்துறை
சார்ந்த அனைத்து உபகரணங்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

Pettah Sports, 4, Bankshall Street,
Colombo - 11
Tel: 2473532, 0722747260

(வி/569484)


## 5ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 20 . 12 . 1962



இறப்பு 06 . 08 . 2005

(திதி: 10.08.2010)

**திருமதி தவகுலரத்தினம் புஸ்பமணி**

ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டது
அன்னையே உங்களைப் பிரிந்து
பொல்லாத காலனவன் எமது அன்னையை
எங்களிடமிருந்து பிரித்துவிட்டான்
அம்மா உனது பிரிவினால்
உமது நினைவுகளை சுமந்தபடி
கண்ணீருடன் கலங்கி வாழும்
உன் அன்புச் செல்வங்கள்.

''அறிவாலயம்'',
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(101717)

**பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரம் இரும்புப் பாலம் ஊடான போக்குவரத்து எந்நேரத்திலும் தடைப்படலாம்

## உடன் புனரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் உள்ள இரத்தினபுரம் இரும்புப்பாலம் இன்னும் திருத்தப்படாத நிலையில் அப்பாலத்தினூடான போக்குவரத்து ஆபத்தான நிலையில் நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் இருந்து டிப்போ சந்தியால் செல்லும் இரத்தினபுரம், திருவையாறு ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதியிலேயே இப்பாலம் அமைந்துள்ளது.

இப்பாலத்தின் மேல் தட்டுக்கள் சில அகற்றப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றது.

இதனூடாக பல வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவது ஆபத்தான நிலையாக உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் அக்கறைகொண்டு விரைவாகப் பாலத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (ஐ-405)

# சாந்தபுரம் மயானம் புனரமைக்கப்பட்டது

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தின் மயானப்பகுதி சாந்தபுரம் மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இக்கிராம மக்கள் சொந்த இடத்தில் மீள் குடியேற்றப்படாமல் நீண்ட நாள்களாக சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் குடியிருப்பவர்களில் ஒருவர் கோரமோட்டை ஆற்றில் மணல் ஏற்றிக் கொண்டிருந்தபோது மணற்குவியல் இடிந்து வீழ்ந்து மரணமடைந்தார்.

அவரது சடலத்தை தமது சொந்தக் கிராமமான சாந்தபுரம் கிராம மயானத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என அப்பகுதி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இராணுவத்தினரின் அனுமதியுடன் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ-405)

# கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் டெங்கு ஒழிப்பு முழு வீச்சில் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஓக.10

தேசிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் காலைப் பிரார்த்தனையில் கல்லூரியின் அதிபர் க. இரத்தினகுமார் டெங்கு நோய் தொடர்பாகவும், அதனைத் தடுக்கும் வழி முறைகள் தொடர்பாகவும் விளக்கமளித்ததோடு நாம் அனைவரும் எமது வீட்டினையும் பாடசாலையையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து அதிபர், பிரதி அதிபர்கள் , ஆசியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணிகளில் வகுப்பு ரீதியாக ஈடுபட்டனர்.

இச்சிரமதானப் பணியில் இராணுவ வீரர்கள் சிலரும் இணைந்து ஈடுபட்டனர். இச்சிரமதானத்தின் மூலம் கல்லூரி வளாகத்திலிருந்து குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு புதைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் சுத்தம் செய்யப்பட்டது.

இச்சிரமதானப் பணிகளை கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி அ. அமிர்தலிங்கம் ஆகியோர் மேற்பார்வை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-405)




# வன்னியில் ஆசிரியர் இடமாற்றத்துக்கு செப்ரெம்பருக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

கண்டாவளை , ஓக.10

வன்னியில் 2011 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஆசிரியர் இடமாற்றங்கள் வலயத்திற்குள்ளான இடமாற்றங்கள், வலயங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள் (மாவட்டத்திற்குள்) ,மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் கடமை புரிந்து இருந்தால் அதே வலயத்தில் அவர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கும் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் தகுதி பெறுகின்றனர்.

கஷ்டப் பிரதேசங்களில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் பெறத் தகுதியானவர்கள்.

வசதியான பிரதேசங்களில் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் பெறத் தகுதியானவர்கள்.

விசேட வைத்திய காரணங்கள் தொடர்பாக இடமாற்றம் கோரும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெறத் தகுதியானவர்கள். அரச வைத்திய அதிகாரியின் சான்றிதழ் அவசியம்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையில் கடமையாற்றும் உத்தியோகத்தரின் மனைவி/ கணவர் இடமாற்றம் பெறத்தகுதியானவர்கள்.

கணவர்/மனைவி ஒன்றாக இணைந்து வாழ்வதற்கான கோரிக்கைகள் தொடர்பில் விண்ணப்பதாரி குறித்த வலயத்தில் இணைந்து நான்கு வருட சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்பவரின் கணவர்/ மனைவி அரச நிறுவனம் ஒன்றில் கடமை புரிவராயின் அது தொடர்பான திணைக்களத் தலைவரின் கடிதமும் தனியார் நிறுவனமாயின் நிறுவனத் தலைவரின் கடிதத்துடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழும் சுயதொழில் புரிபவராயின் கிராம சேவை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

58 வயதை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தங்கள் சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்காவிடத்து அவர்களுக்கு இடமாற்றம் வழங்குவது தவிர்க்கப்படல் வேண்டும்.

கர்ப்பிணிகளைப் பொறுத்தவரையில் அவரின் விருப்பமின்றி இடமாற்றம் வழங்கக் கூடாது. எவ்வாறாயினும் ஒரு கர்ப்பிணித் தாயினால் இடமாற்றம் கோருமிடத்து அவரது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வலய மட்டத்தினுள் இடம்பெறும் இடமாற்ற விண்ணப்பங்களை 1.9.2010ஆம் திகதிக்குள்ளும் மாவட்டமட்டம் மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களுக்கு இடையிலான விண்ணப்பங்கள் 1.10.2010 ஆம் திகதிக்குள்ளும் மாவட்டங்களுக்கு இடையிலான விண்ணப்பங்களுக்கு இறுதித் திகதி 01.09. 2010 ஆகும். மாகாணங்களுக்கு இடையில் நடைபெறும் விண்ணப்பங்களை 01.09. 2010 இற்குள்ளும் வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-432)

## மீள்குடியமர்வுக்குப் பின்னர்

# கிளிநொச்சியில் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் க. இரத்தினகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர்களான திருமதி கெ.ஜெயராஜ், எம்.ஆலால சுந்தரம் ஆகியோரும் ஆசிரியர்களும் ஆசியுரைகளை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் கைலாகு கொடுத்து வாழ்த்தி ஆசி வழங்கினர்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்னர் நடைபெறும் முதலாவது புலமைப்பரிசில் பரீட்சைக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து நூற்றுமுப்பது வரையான மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-405)

# வீடுகள் இன்றி வெயிலிலும் மழையிலும் அல்லற்படும் எமக்கு உதவி செய்யுங்கள்

## கணேசபுரம் கிராம மக்கள் அரச அதிபருக்கு மகஜர்

கிளிநொச்சி, ஓக.10

வீடுகள் இன்றி வெயிலிலும் மழையிலும் அல்லற்படும் எமக்கு உதவி செய்யுங்கள் எனக் கோரி கணேசபுரம் மக்கள் கிளிநொச்சி அரச அதிபருக்கும் கரைச்சிப் பிரதேச செயலருக்கும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

யுத்தத்தினால் மிகவும் பாதிப்படைந்த கணேசபுரம் கிராமத்தில் அண்மையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கூட எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் வாழ்வாதாரம் எதுவுமின்றி தவித்து நிற்கும் எமக்கு உதவுங்கள் என்று கோரி தமது கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மிகச் செழிப்பான எமது கணேசபுரம் கிராமம் யுத்தத்தினால் அழிவடைந்த நிலையில் எமது கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வீட்டுத்திட்ட செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்கும் இச் செயற்றிட்டத்தால் வீடுகளை புனரமைப்பதற்கு உதவிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

இதேவேளை காணி உறுதியற்றவர்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதில்லை. யுத்தத்தினால் ஆவணங்களை இழந்து தவிக்கும் நாம் தற்போது வீடுகள் இல்லாத நிலையில் வெயில், மழை, கடும் காற்றினால் பெரும் துன்பமடைகின்றோம். எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே எமக்கு வீடுகளைப் பெறவும் புனரமைக்கவும் உதவுங்கள்- என்றுள்ளது. (6-405)

# மன்னாரில் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகளின் நேரங்கள் மாற்றம்

மன்னார் , ஓக.10

மன்னார் அரச போக்குவரத்து சாலை தனது சேவைகளை அதிகரித்துள்ளதோடு சில நேர மாற்றங்களையும் செய்துள்ளது.

இதன்படி இனிமேல் மன்னார்- வவுனியா சேவை மாலை 5.30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீண்டும் மன்னார்- கொழும்பு இரவு சேவை இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது. அத்துடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பண்டிவிரிச்சான் கிராமத்திற்கு இரண்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் படி மன்னரிலிருந்து காலை 9 மணிக்கும் மாலை 4மணிக்கும் இரு சேவைகள் நடைபெறும் எனவும் மாலை செல்லும் பேருந்து இரவில் அங்கு தரித்து நின்று மறுநாள் காலையில் பண்டிவிரிச்சானிலிருந்து புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-80)

# வேரவில் இந்து ம.வி. மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமம்

வேரவில், ஓக.10

கிளி/ வேரவில் இந்து ம.வியில் கிணறு இல்லாததால் மாணவர்கள் குடிதண்ணீர் எடுப்பதற்கு அயல் வீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அவர்கள் மனிதாபிமானமாக உதவிகள் புரிந்தாலும் 300 - 400 மாணவர்கள் குறுகிய நேர இடைவேளையில் எவ்வாறு தண்ணீர்த் தாகம் போக்க முடியும்.

மாணவர்களும் வீட்டு உரிமையாளர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கும் அதே வேளை இதனைப் பார்த்துக் கொண்டு இருக்கும் ஆசிரியர்களும் வேதனை அடைகிறார்கள்.

எனவே இந்த மனிதாபிமானப் பிரச்சினை [illegible] தவணை ஆரம்பமாகும் [illegible] தீருமா என மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ-496)

# கல்மடுக் குளம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நீர்ப்பாசனக் குளமான கல்மடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் எஸ். சத்தியசீல்ன் கலந்து கொண்டார்.

இக்குளத்தின் அணைக்கட்டு யுத்தத்தின் போது சேதமடைந்தது. அண்மையில் மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் அணைக்கட்டு சேதமடைந்திருந்ததால் நீர்ப்பாசனம் செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர்.

தற்போது புனரமைக்கப்படும் இந்த குளத்தினை துரிதமாகப் புனரமைத்தால் காலபோக நெற்செய்கையில் ஈடுபட முடியும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (6-405)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் வயாவிளான் புனித யாகப்பர் ஆலயம் திருவிழாக் கண்டது

வலி.வடக்குப் பிரதேசத்தினதும், வலி.கிழக்குப் பிரதேசத்தினதும் எல்லையில் அச்சுவேலி - தெல்லிப்பழை வீதி பலாலி வீதியுடன் சந்திக்கும் பகுதிகளை உள்ளடக்கி வயாவிளான் கிராமம் அமைந்துள்ளது.

இப்பகுதி மக்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் குடாநாட்டுக்கு வெளியிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தமது வீடு வாசல்கள் உடமைகளை இழந்து, தொழில் வளங்களை இழந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துத் தமது வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

பொன்விளையும் பூமியாகிய செம்மண் வளத்தைக் கொண்ட இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் விவசாய, கைத்தொழில் நடவடிக்கைளால் தமக்கும் நாட்டுக்கும் வளம் சேர்த்த உடல் உழைப்பாளிகள். வெங்காயம், மிளகாய், புகையிலை, முந்திரிகை, மரக்கறிப் பயிர்ச் செய்கை என்பவற்றுடன் கால்நடை வளர்ப்பை தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டதுடன் சுண்ணாம்புக் கல் உடைப்பைக் கைத்தொழிலாகவும் செய்து வந்தனர்.

1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உருவான போர்ச்சூழல் காரணமாகத் தத்தம் கையிலகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு உயிர் பிழைத்தால் போதும் என இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், முகாம்களிலும் தஞ்சமடைந்தனர்.

இது நடந்து இருபது வருடங்கள் உருண்டோடிவிட்டன. இன்று வலி.வடக்கின் இப் பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. யுத்தம் ஓய்ந்து இயல்பு நிலை தோன்றுவதையடுத்து வலி.வடக்கின் ஒரு சில பகுதிகளில் வாழ்ந்தோர் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டாலும், பெரும்பாலான பிரதேசங்களில் மக்கள் செல்வதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இப்பிரதேசங்களில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களின் திருவிழாக்களைக் கொண்டாட அண்மைக் காலங்களில் படையினர் அனுமதித்து வருகின்றனர்.

வயாவிளான் பகுதியில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஜூலை 25 ஆம் திகதி இடம்பெற்றது. யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானபிரகாசம் அடிகளாரின் தீவிர முயற்சி மற்றும் ஆலய நிர்வாகிகளின் ஒத்துழைப்பும் படைத்தரப்பால் திருவிழாவைக் கொண்ட அனுமதியும் உதவிகளுழ் வழங்கப்பட்டன. இளைஞர்களும் படையினரும் இணைந்து ஆலய



வளாகத்தில் அடர்ந்து வளர்ந் திருந்த மரங்களையும் பற்றை களையும் வெட்டி அகற்றி கோவி லைக் கழுவிச் சுத்தம் செய்தனர்.

இவ் ஆலயச் சூழலில் வாழ்ந்து வந்த பொதுமக்கள் யாழ்ப்பாணம், கோப்பாய்,பருத்தித்துறைப் பகுதிகளில் கூடுதலாக வசித்து வருகின்றனர். குறிப்பிட்ட தினத்தன்று அவர்கள் தாம் தற்போது தங்கியுள்ள இடங்களிலிருந்து புறப்பட்டு அச்சுவேலி சந்தியூடாக ஆலயத்துக்குச் சென்றனர்.

அவர்கள் அனைவரும் பக்திப் பாடல்கள், செப வழிபாடுகளை உச்சரித்தவாறு பிரயாணத்தை மேற்கொண்டதைக் காண முடிந்தது.

அச்சுவேலி 'அமலிவனம்' பட்டுப் பூச்சித் தோட்டப் பகுதிகளுக்கு அப்பால் குடியிருப்புக்களையோ மக்கள் நடமாட்டத்தையோ காணமுடியவில்லை. ஒட்டகப் புலத்தில் உள்ள படையினரின் இராணுவ சோதனை நிலைய பரிசோதனைகளுக்குப் பின்னர் பொது மக்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். நூறு மீற்றர் தூரத்தில் ஒட்டகபுலம் பரலோமாதா ஆலயம் கம்பீரமாக புதிய தோற்றத்துடன் காணப்பட்டது. மிகவும் சேதமுற்றிருந்த இவ் ஆலயம் இடம்பெயர்ந்து வாழும் அப்பகுதி மக்களின் நிதியுதவியுடன் பாதுகாப்பு படையினரால் புனரமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் இங்கே திருப்பலி ஒப்புக் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. வெளியிடங்களில் இருந்து வரும் மக்களுடன் படையினரும் வழிபாட்டில் ஈடுபடுவர். தமிழிலும் சிங்களத்திலும் திருப்பலிகள் இடம் பெறுகின்றன.

அவ்விடத்தைத் தாண்டி சிறிது தூரத்தில் பழைமை வாய்ந்த புனித யாகப்பர் ஆலயம் காணப்படுகின்றது. தமது வாழ்விடங்கள் சிதைந்து காடுகளுக்குள் மறைந்திருக்கும் புராதன கிராமம் போன்று காணப்படுவதைக் கண்டு மனங்கலங்கியபடி ஏராளமான பக்தர்கள் ஆலய வளாகத்தினுள் சென்றனர். எந்தவொரு வீட்டிலும் கூரைப்பகுதிகள், நிலை, கதவு எவையும் காணப்படவில்லை. உடைந்த கட்டடப் பகுதிகளே எஞ்சியிருந்தன. ஆலய வளாகத்திற்கு வெளியே செல்ல இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்படவில்லை.

யாழ்.ஆயர் இல்லத்தின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்ற திருவிழாவில் ஆயர் இல்ல நிதிப்பொறுப்பாளர் அருட்திரு ப.அன்ரனிதாஸ் அடிகள், மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்திரு ஜோர்ஜ் அடிகள் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெற்றது. புனிதரின் பாதத்தில் தமது கவலைகளையும், கண்ணீர் கதைகளையும்,சீர்குலைந்து அழிவுற்றிருக்கும் கிராமத்தின் நிலையையும் ஒப்புக் கொடுத்து பக்தர்கள் ஈரவிழிகளுடன் பவனியில் பங்கேற்றனர். புனித யாகப்பரின் ஆசியுரை பெற்ற திருப்தியுடன் அங்கு வழங்கப்பட்ட மதிய விருந்திலும் அவர்கள் பங்கேற்றனர்.

தமது சொந்த மண்ணையும் ஆலயத்தையும் விட்டுப் பிரியும் நேரம் 'கடவுளே இன்னும் எத்தனை காலம் எமக்கு இந்தநிலை?' 'எமது வீட்டில் நாங்கள் வாழ வழிகாட்டு' என்று கதறியழுது விடைபெற்ற காட்சி மனதை உருக்கியது.

''நாங்கள் அடிக்கடி இஞ்சை வரவேணும். இறுதிக் காலத்திலாவது பிள்ளை குட்டியளோடை என்ரை சொந்த வீட்டில வாழவேணும். செத்தாலும் இஞ்சை செத்து இந்த மண்ணில தான் எனது உடல் புதைக்கப்பட வேணும்''. இவ்வாறு தெரிவித்தார் ஐ.எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் (வயது 81) என்னும் முதியவர்.

**எஸ்.யேசுதாஸ்.**

இந்தத் திருவிழா மக்களுக்கு திருப்தியை மன நிறைவைக் கொடுத்தது உண்மைதான். இப்பகுதிகளில் உள்ள ஏனைய கிராம மக்களின் ஏக்கம், எதிர்பார்ப்பு தீருவது எப்போது?

வயாவிளான் பகுதியில் உள்ள தோலகட்டி என்னும் இடம் கத்தோலிக்கரின் முக்கிய இடமாகும். இங்குதான் செபமாலைத் தாசர் துறவற சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகர் வண.தோமஸ் அடிகளாரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை தோலகட்டியில் உள்ளது. இவரை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்த ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவரது கல்லறை பாதுகாக்கப்பட வேண்டும்.

தோலகட்டி புனித அந்தோனியார் ஆலயம், உத்தரியமாதா ஆலயம் போன்ற பகுதிகளுக்கு செல்வதற்கான காலம் இன்னும் கனியவில்லை. ஒட்டகபுலம் றோ.க.தமிழ் கலவன் பாடசாலையும் அழிவடைந்து காணப்படுகின்றது.

அது அவர்களின் தாய்நிலம். சொந்த இடம்தான் அவர்களுக்குச் சொர்க்கம். மீளக் குடியமரும் நாளே இவர்களுக்கு மகிழ்வு தரும் நாளாக இருக்கும். ✱




## தேசபந்து டாக்டர் விக்டர் ஹெட்டிகொடவின் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஜனாதிபதி பாராட்டு

நிரிழிவு நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகமும் சித்தாலேபே வைத்தியசாலையும் இணைந்து 2005ஆம் ஆண்டு மூலிகை களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட ஆராய்ச்சிகள் பற்றிய தகவல்கள் சர்வதேச விஞ்ஞான சஞ்சிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை ஜூலை 27ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற ஜனாதிபதி விருது வழங்கும் வைப வத்தில் பலரும் பாராட்டினார்கள். தேசபந்து டாக்டர் விக்டர் ஹெட்டிகொடவின் ஆராய்ச்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விசேடமாகப் பாராட்டப் பட்டன.

டாக்டர் தேவகா பெர்னாண்டோ, தேசபந்து டாக்டர் விக்டர் ஹெட்டிகொட ஆகியோரின் தலைமையின் கீழ் ஆறுமாதங் களுக்கு மேலாக இந்த ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

விளம்பர வரணம்

இதில் 65 நீரிழிவு நோயாளர்கள் ஈடு படுத்தப்பட்டனர். இந்த ஆராய்ச்சிகள் மூலம் அந்த நோயாளர்களின் நீரிவு நோய் கட்டுப்படுத்தப்பட்டமை நிரூபிக்கப்பட் டுள்ளது. சித்தாலேப ஆராய்ச்சிப் பிரிவு இலங்கை மக்களுக்காக நீரிழிவு நோய்க் கான சிகிச்சைகளை மிக விரைவில் ஆரம்பிக்கும்.

டாக்டர் ஹெட்டிக்கொட ஆயுள்வேதம் சம்பந்தமான பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதோடு தமது ஆயுள்வேத தயாரிப்புகளை இலங்கையிலும் வெளி நாடுகளிலும் விற்பனை செய்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.07.1993

* சுதந்திரக்கட்சியிலிருந்து அதன் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவி சிறிமாவோ அறிவிப்பு.
* நீண்டகாலமாக கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வடக்கு- கிழக் கைச் சேர்ந்த 41 தமிழ் இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டதாக் தடுப்புக் காவல் கைதிகள் புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு.

17.07.1993

* முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் படுகொலையில் விடுதலைப் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளதாக அப்படுகொலை குறித்து விசாரணை நடத்திய 'ஸ்கொட் லண்ட் யாா்ட்' துப்பறியும் நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் தெரிவிப்பு.
* அனுரா பண்டாநாயக்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதையடுத்து அக்கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் அதிகரித்திருப்பதாகத் தெரிவிப்பு.

18.07.1993

* லலித் அத்துலத்முதலியின் படுகொலை குறித்து விசாரணை நடத்திய 'ஸ்கொட் லண்ட் யாா்ட்' விசாரணைக் குழு சமர்ப் பித்த அறிக்கையை நிராகரித்த லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமானி தமது கணவரை அரசே கொலை செய்தி ருப்பதாகக் குற்றச்சாட்டு.
* தமக்கென தனித்தனியான சொந்த இராணுவங்களைக் கொண்ட இரண்டு நாடுகள் இலங்கைத் தீவில் உள்ளன என 'ராவய' பத்திரிகையில் தாம் எழுதிய கட்டுரையில் சிங்கள் அறிஞர் அற்ரியன் விஜேமான தெரிவிப்பு.

19.07.1993

* நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் மீண் டும் பங்கேற்றுக்கொள்ளுமாறு அக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க விடுத்த வேண்டுகோளை அமைச்சர் தொண்ட மான் நிராகரித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸாநாயக்க எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு அக்கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு உருவாகியுள்ளதாகத் தெரிவிப்பு.

20.07.1993

* இவ்வார இறுதியில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதி இடம்பெயர் சேவையை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் மேலதிகமாக 4 ஆயிரம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* எம்.பி ஒருவர் கட்சிமாறினால் அவர் எம்.பி பதவியை இழப்பார் எனத் தெரிவிக்கும் அரசமைப்பின் சரத்தை மாற்றக்கோரும் சுதந்திரக் கட்சி எம்.பி நெவில் பெர்னாண்டோவின் பிரேரணையை நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிப்பதென சுதந்திரக் கட்சி முடிவு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

21.07.1993

* சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணையொன்றில் சுதந்திரக் கட்சியின் 67 எம்.பிக்களில் 56 பேர் நாடாளுமன்றத்தில் கையெழுத்திட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* பூநகரி-சங்குப்பிட்டிப் பாதை திறப்பு விடயம் தொடர்பாக விடுதலைப்புலிக ளின் உத்தியோகபூர்மான பதிலைத் தாம் எதிர்பார்திருப்பதாக ஐ.நா.அகதிகள் தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு.

22.07.1993

* இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியவென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு கலைக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் எதிர்வுகூறல் தெரிவிப்பு.
* அனுரா பண்டாரநாயக்காவைச் சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை விலக்கிக்கொள்ளுமாறு பல தரப்புகள் விடுத்த கோரிக்கையை அக்கட்சியின் தலைவி சிறிமாவோ நிராகரித்துவிட் டதாகத் தெரிவிப்பு.

23.07.1993

* திருநெல்வேலியில் 1983 ஜூலை 23ஆம் திகதி விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட பத்தாண்டு நினைவு நாளான இன்று கொழும்பில் விடுதலைப்புலிகள் பெரும் தாக்கு தலை நடத்த முயற்சிக்கலாம் என்ற அச்சத்தில் கொழும்பு நகரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* இராணுவத்துக்கு வழங்கப்படும் குறைந் தளவு நிதியைக்கொண்டு பலம்வாய்ந்த விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கிவிட இராணுவத்தால் இயலாது என விமானப் படையின் முன்னாள் தளபதி ஹறி குணதிலகா எச்சரிக்கை விடுப்பு.

24.07.1993

* நேற்று மட்டக்களப்பில் ஆரம்பமான ஜனாபதி இடம்பெயர் சேவையில் கலந்துகொள்ள இருந்த ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கரமசிங்க ஆகிய இருவரும் விடுதலைப்புலிகள் அங்கு தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சத்தால் தமது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டதா கத் தெரிவிப்பு.
* ஜனாதிபதியும் பிரதமரும் மட்டக்களப்புக் கான தமது விஜயத்தை இரத்துச் செய்தமை தொடர்பாக இராணுவ உயர்மட்டம் சீற்றம் அடைந்திருப்பதாக பி.பிஸி. வானொலி விமர்சிப்பு.

25.07.1993

* புத்தளம் மாவட்டம் இலவங்குளம் பொலிஸ் காவலரண்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் 10 பொலிஸார் உயிரிழக்க நேரிட்டதாகத் தெரிவிப்பு.
* சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காங்கேசன் சிமெந்து ஆலை இம் மாதம் 15ஆம் திகதியுடன் மூடிவிடுவதென்ற அரசின் முடிவுக்கு தொழிற்சங்கங்கள் தெரிவித்த எதிர்ப்புக் காரணமாக அரசின் முன்னயை முடிவு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.07.1993

* மணலாற்றுப் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பெரும் அதிர டித் தாக்குதலில் மண்கிண்டி இராணுவ முகாமுக்கும் அதனைச் சூழவிருந்த மினி முகாம்கள் பலவும் தகர்க்கப்பட்டதாகவும் தாக்குதலில் 60 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகவும் மூன்று சிப்பாய்கள் விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிப்பு.
* 2ஆம் ஈழப்போர் காலத்தில் மட்டும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களுக் குச் சொந்தமான 25ஆயிரம் வீடுகள் சேதமாக்கப்பட்டதாக உத்தியோகபூர்வமாகத் தெரிவிப்பு.

27.07.1993

* மணலாறு மண்கிண்டி இராணுவ முகாம் தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்ட 17 இராணுவத்தினரின் சடலங்களை விடுதலைப்புலிகள் இன்று சர்வதேச செஞ்சிலு வைச் சங்கக் குழுவினரிடம் ஒப்படைக்கவுள்ளதாகத் தெரிவிப்பு.
* மணலாறு தாக்குதலை விடுதலைப் புலி கள் மிகச் சாதுரியமான விதத்தில் மேற்கொண்டிருப்பதை இலங்கை இராணுவத்தரப்பு ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிவிப்பு.

28.07.1993

* இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர்சொனிக் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று திருநெல்வேலி மற்றும் கோப்பாய் பகுதிகளில் நடத்திய குண்டு வீச்சுச் சம்பவங்களில் 4 மாணவர்கள் உட்பட ஐவர் பலியானதாகத் தெரிவிப்பு.
* கூட்டுப்படை தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க சேவையிருந்து இளைப்பாறவுள்ளதாகவும் அப்பதவிக்கு தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தி யரத்ன நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரி விப்பு.

29.07.1993

* இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் காங் கிரஸ் அரசுக்கு எதிராக எதிர்கட்சிகளால் கூட்டாக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட தாகத் தெரிவிப்பு.
* தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்த தமிழகத்திலுள்ள ஈழத் தமிழ் அகதிகளில் ஆயிரத்து 800 பேர் அடுத்தமாதம் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தமிழ் நாடு மாநில அரசு தெரிவிப்பு.

30.07.1993

* கிளாலி கடற்பிராந்தியத்தில் இலங்கைக் கடற்படையினர் தமிழ்ப்பயணிகள் மீது நடத்திய தாக்குதலில் 8இற்கும் அதிகமான பொது மக்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிப்பு.
* மணலாறு மண்கிண்டி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்கு தல் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப் பிகுமாறு விசேட விசாரணை நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி நியமித்திருப்பதாகத் தெரிவிப்பு.

31.07.1993

* மணலாறு மண்கிண்டி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது விடுதலைப்புலிகளி டம் சரணடைந்த 7 பொதுமக்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழுவிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிப்பு.

# அனுராதபுரம் விமான நிலைய தாக்குதல் சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பு

கொழும்பு , ஓக.10

அனுராதபுரம் விமான நிலையத்தின் மீது ஆகாயத்திலிருந்தும் தரைமார்க்கமாகவும் திட்டமிட்டு தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது காவலில் வைக்கப்பட்டுள்ள புலி சந்தேக நபர்கள் மூவருக்கு அனுராதபுரம் பிரதம நீதிவானும் மாவட்ட மேலதிக நீதிவானுமாகிய தர்ஷிகா விமலசிறி பிணை வழங்க மறுத்துள்ளார்.

சந்தேக நபர்கள் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்டுள்ள விசாரணைகளின் பிரதிகளை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கும் படியும் நீதிவான் புலன் விசாரணை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். எதிரிகள் மூவரையும் இம் மாதம் 30 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

ஆர். தப்புரூபன், அப்துல் குத்தூஸ் மற்றும் அரவிந்தன் ஆகியவர்களே இவ்வாறு காவலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளவர்கள். ஜே. ரஜிகலா மற்றும் எஸ். சந்திராணி ஆகியவர்கள் இந்த தாக்குதலில் உதவியும் ஒத்தாசையும் புரிந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இவர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை மனுவையும் நீதிவான் நிராகரித்தார்.

2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படித் தாக்குதலின் போது பாதுகாப்பு படையைச் சேர்ந்த 14 பேரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த 21 பேரும் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இரண்டு விமானப்படை வீரர்களும் வேறு இரு ஆயுத படையினரும் கூட இந்தச் சம்பவத்தில் பலியானதாகக் கூறப்படுகின்றது. (ப)

# போதையுடன் வாகனம் செலுத்திய 4 பேருக்கு ரூபா 57 ஆயிரம் அபராதம் விதிப்பு

தென்மராட்சி , ஓக.10

மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 57 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் வாகன 'ஹோர்ன்' ஒலியை எழுப்பிய நபருக்கு 15 ஆயிரம் ரூபாவும்-

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாவும்-

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையை செலுத்தத் தவறின் தலா மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தின் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அப ராதத் தொகை செலுத்தத் தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும், வாகனத்தை 25 லட்சம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறும் சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-207)

# தமிழக அரசியல்வாதிகள் இலங்கை வந்து உண்மை நிலையை அறியத் தடையில்லை

## தூதர் பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

தமிழ் நாட்டு அரசியல்வாதிகளில் அநேகமானவர்கள் நல்லவர்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இலங்கை வந்து உண்மை நிலைவரங்களை நேரில் அறிந்து கொள்ள முடியும். அதற்குத் தடையில்லை - என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

யுத்த வெற்றியை சொந்தமாக்கி கொள்கின்றமையின் பின்னணியில்தான் ஜனாதிபதிக்கும் பொன்சேகாவுக்குமிடையில் தனிப்பட்டப் பிரச்சினை நிலவுகின்றது என்பது அப்பட்டமான பொய்யாகும். பொன்சேகாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவை தொடர்பாக நீதிமன்றங்கள் சட்டத்துக்கு இணங்க விசாரணை நடத்துகின்றன.

இலங்கை - இந்தியா உறவுகள் மிகவும் நெருக்கமடைந்துள்ளன. ஜனாதிபதி மஹிந்த கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்த பிற்பாடு இது தடவைகள் இந்தியா வந்துள்ளார்.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சகலதுறைகளிலும் செழுமை அடைந்துள்ளன.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகளில் அநேகமானவர்கள் நல்லவர்கள்தான். ஆனால் சிலர் புலி ஆதரவாளர்களான புலம் பெயர் தமிழர்களின் பாதிப்புக்கு உள்ளாகி விட்டார்கள்.

இந்த அரசியல்வாதிகள் யதார்த்தத்தை அறியாமல் இருக்கின்றார்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இலங்கை வந்து உண்மை நிலைவரங்களை நேரில் அறிந்து கொள்ள முடியும். அதற்குத் தடையில்லை.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

# அரச விசுவாசிகளுக்கு காணிகளை வழங்க அப்பாவிகள் விரட்டியடிப்பு

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 10

ஆளும் கட்சிக்கு விசுவாசமானவர்களுக்கு காணிகளை வழங்கும் நோக்கில் அப்பாவிகள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்குளிப் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்குளி சுமத்திபுர பிரதேச மக்கள் எதிர்நோக்கி வரும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு கடித்து குழந்தை உயிரிழந்தால், குழந்தையின் பெற்றோர் மீது வழக்குத் தொடரும் கலாசாரமே காணப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருட்டுச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும் அப்பாவிகள் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்கின்றனர் எனவும், திருடர்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி வாழ்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களை விரட்டியடித்து அவர்களது காணிகளை ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு வழங்கப்படும் ஓர் சூழ்நிலையே தற்போது காணப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (சி)




யாழ்.றோட்டறிக் கழகமும் கண்டி றோட்டறிக் கழகமும் இணைந்து யாழ். பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் கண்டி றோட்டறிக் கழக றோட்டறியன் அயிசா, யாழ். பொது நூலக பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கத்திடம் புத்தகங்களைக் கையளிப்பதையும் காணலாம். அருகில் யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் க. சுரேந்திரன், றோட்டறியன் சி.சிவசங்கர், யாழ். பொது நூலக நூலகர் திருமதி ப. சிறிஸ் கந்தராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
*(படம்: டிலீப்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்-கிளிநொச்சி, பயிலுநர்களுக்கான விண்ணப்பம் கோரல்

கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு பயிலுநர்களை நியமித்து பயிற்சியளிப்பதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.களஞ்சிய முகாமையாளர் பதவி.**

தகைமைகள்:-

★கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறிச் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

★வயதெல்லை: 18-45

★சம்பளம்: பயிற்சிக் காலத்திற்கு ரூபா 9000 (கடமை புரியும் நாள்களுக்கு நாளாந்த அடிப்படையில் கணிக்கப்படும்)

★விண்ணப்ப முடிவு திகதி: 16.08.2010

**02.விற்பனை உதவியாளர் பதவி.**

தகைமைகள்:

★கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறிச் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

★வயதெல்லை: 18-45

★சம்பளம்: பயிற்சிக் காலத்திற்கு ரூபா 8000 (கடமைபுரியும் நாள்களுக்கு நாளாந்த அடிப்படையில் கணிக்கப்படும்)

★விண்ணப்ப முடிவு திகதி: 16.08.2010

★சங்க எல்லைப்பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை இணைக்கவும். மேற்படி பதவிகளுக்குச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ. கூ.சங்கம், கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,கிளிநொச்சி.

(101668)



## 25ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை,
றோ.க.பாடசாலை,
கோப்பாய் தெற்கு)

மண்ணில்:
10.02.1956

விண்ணில்:
10.08.1985

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுகளில்
இருபத்தி ஐந்து ஆண்டுகள் உருண்டதம்மா!
எங்களின் துயரம் ஆற்றயாருமில்லை
இதயம் உருகிட அஞ்சலி செலுத்துகிறோம்.

பிரிவால் துயருறும்:
சுப்பிரமணியம் (கணவர்),
சுதர்ஸன் (மகன்).
[பொறியியலாளர் புத்தளம்]

கிறிஸ்தவக் கல்லூரி முன்,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (101675)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
14★03★1947

உதிர்வு
10★08★2007

**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)

தரணியிலே எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
நீங்கள் சென்று மூன்றாண்டுகள் ஆனாலும்
மாறாது என்றும் எம் நெஞ்சமதில்
உங்களோடு நாம் வாழ்ந்த
பசுமைமிக்க நினைவுப் பதிவுகள்

"தணிகை",
அல்வாய் வடக்கு,
அல்வாய். (101507)

என்றும் உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி
குடும்பத்தினர்.


## அரசமைப்பில் மாற்றம்.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய இப்புதிய வாக்கெடுப்பு நடைமுறையைப் பயன்படுத்துவதைத் தாமதிக்கத் தாமதிக்க - பிற்போடப் பிற்போட கட்சி மென் மேலும் நலிவு கண்டு நாசமுறவே வழியேற்படும். இத்தகைய தாமதமே கட்சியின் உள்ளக மட்டத்தில் ஒருவரை மற்றவர் விமர்சித்து கருத்து வெளியிடும் நிலையை உச்சக்கட்டத்தையடைய வைக்கிறது. இதனை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தமக்குச் சாதகமான வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிறார்.

இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒரு ஜனாதிபதி தமது பதவிக்காலத்தை இரு தடவைகளுக்கு மேலும் கூட வகிக்கலாம் என்ற வகையில் அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ள இயலாத இக்கட்டில் மட்டும் மாட்டிக்கொண்டிருக்கவில்லை. நிறை வேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை அறிமுகம் செய்யும் வகையில் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும் இயலாத நிலையிலும் அவர் உள் ளார்.

பாக்கீர் மாக்கார் நிலையத்தில் அண் மையில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இடம்பெற்ற மாநாட்டில் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சித் தலைவரான அமைச் சர் டியூ குணசேகர அரசமைப்புச் சிக்கலுக்கு நிறைவேற்று அதிகார பிரதமர் பதவியை உரு வாக்குவது தீர்வாக அமைய மாட்டாது எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் அதே கருத்தை வலியுறுத்தி வரு கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிறை வேற்று அதிகார பிரதமர் பதவி யோசனை அரசமைப்புக்குப் பொருத்தமானதொன்றல்ல என அரசின் அமைச்சர்கள் கூடத் தமது கட் சிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள் என ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் தெரிவித்தார் என்று அண்மைய நாட்களில் தகவல் வெளியாகியிருந்தது.

மேற்சொன்னவையும் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷ முகம் கொடுக்க நேர்ந்துள்ள சவால்க ளாகும்.

தாம் அறிமுகம் செய்துவைத்த இன்றைய அரசமைப்பில் ஜனாதிபதி இருதடவை களுக்கு மேலும் அப்பதவியை வகிக்க வழி செய்யும் மாற்றத்தைக் கொண்டுவர முயன்ற ஜே.ஆர் நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமல் லாது, ஐ.தே. கட்சிக் குள்ளும் கிளம்பிய எதிர்ப்புக் காரணமா கவே தமது முயற்சியைக் கைவிட்டுப் பதவியிலிருந்து ஓய்வுபெற நேர்ந்தது.

பின்னர் ஜனாதிபதியாகப் பதவிவகித்த சந்திரிக்காவும் இதேபோன்ற முயற்சியை மேற்கொண்ட போதிலும் அவருக்கும் அதே கதிதான் ஏற்பட்டது.

அந்த வேளையில் சந்திரிகாவின் அத்தகைய முயற்சிக்கு அவ்வேளை ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்குள் உருவான எதிர்ப்புக்குத் தலைமை தாங்கியவர் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஆவார். ஏனெனில் அடுத்த ஜனாதி பதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் எதிர்பார்ப்பு அவரிடம்நிறைந்திருந்தமையே அதற்கான காரணமாகும்.

இன்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசமைப்புத் திருத்த யோசனைக்கு சுதந்திரக் கட்சிக்குள் ளேயே அன்றைய மஹிந்த ராஜபக்ஷாக்கள் உருவாகியுள்ளனர். ஜனாதிபதியின் அந்தத் திருத்த யோசனைக்குக் காலை வாரி விடுபவர்கள் அவர்களே.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஜனாதிபதிப் பதவியின் இரண்டாவதுபதவிக் காலத்தை ஆரம்பித் திருக்கும் இந்த ஆண்டில் இந்த அரசமைப்புத் திருத்தத்தை மேற் கொள்ள இயலாது போகுமானால், அடுத்த ஆண்டு அவர் இந்த ஆண்டில் இருப்பதை விட நலிவு கண்டதொரு தலைவராகவே இருப்பார். அடுத்து வரும் ஆண்டுகளில் அவரது பிரபல்யமும் மதிப்பும் மென்மேலும் நலி வடையக்கூடும்.

எந்தவொரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியினதும் இரண்டாவது பதவிக்காலத்தின் மூன்றாவது ஆண்டு முடிவடையும் வேளையில் அவர் சார்ந்த கட்சி புதிய தலைவரொருவரைத் தேடிக்கொள்ள முயல்வது வழமை. நாளுக்குநாள் ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பலம் நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமல்ல, கட்சி மட்டத்திலும் நலிவடைந்து செல்வதும் வழமையே.

இவை யாவற்றையும் நன்குணர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்புக் குறித்த விடயத்துக்குத் தாம் விரும்பும் விதத்தில் தற்போதே முடிவு கண்டுவிட முயற்சிக்கிறார். ஜனாதிபதிப் பதவிக்கு இரு தடவைகளுக்கு மேலாகவும் போட்டியிடத்தக்க வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ள இயலாது போகுமானால், நிறைவேற்று அதிகார பிரதமர் பதவியையாவது உருவாக்கி, அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாது போகுமானால், ஜனாதிபதித் தேர்தலைப் பிரதமர் பதவிக்கான தேர்தலாக ஆக்கிக் கொள்ள அவர் முயற்சி மேற்கொள்ளக்கூடும்.

நிறைவேற்று அதிகாரப் பிரதமர் பதவியைத் தேர்தலொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கும் இந்த இஸ்ரேலிய நாட்டு நடைமுறை தோல்விகண்டு இஸ்ரேல் நாட்டுக்கே அது வோர் தலையிடியாக மாறி கடைசியில் அந்த நடைமுறையை இஸ்ரேல் நாடே கைவிட [illegible] ராஜ பக்ஷ வின் தலையிடியைச் சுகப்படுத்துவதற்காக இந்த நாடு நிறைவேற்று அதிகாரப் பிரதமர் நடைமுறை என்ற அந்தத் தலையிடியை ஏற்றுக்கொள்ளவுள்ளது.

ஐ.தே.கட்சி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய தலையிடியைக் குணப்படுத்த முயல வேண்டியதில்லை. ஜனாதிபதியின் தலையிடி அதிகரிக்கும்போது அரச மைப்புத் திருத்தம் என்ற முயற்சியால் அரசுக்குள் உருவாகியுள்ள சிக்கல்கள் மென் மேலும் அதிகரிக்க இடமளிப்பதே தற்போது ஐ.தே.கட்சி மேற்கொள்ளவேண்டிய செயற் பாடாகும்.

ஐ.தே.கட்சி முதலில் கட்சிக்குள் உரு வாகியுள்ள சிக்கலைத் தீர்த்துக் கொள்ளவே முயலவேண்டும். ஆதலால் மாமனார் ஜே. ஆரின் யாப்பில் திருத்தம் மேற்கொள்ள முயல்வதற்கு முன்பாக மருமகன் ரணில் தமது கட்சி யாப்பில் திருத்தத்தை மேற்கொண்டாக வேண்டும்.

ஜே.ஆரினால் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய அரசமைப்பை மென்மேலும் சக்திமிக்கதாக்கி தமது மகன் நாமல் ராஜபக்ஷ அரசியலில் முன்னுக்கு வரும் வரை தாம் இந்த ஜனாதிபதிப் பதவியை வகிக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் எதிர்பார்ப்பாகும்.

'நான் உங்களது மாமனார். ஜே.ஆரின் அசரமைப்பை மேன்மேலும் வலுவுள்ளதாக்கிப் பாதுகாக்கிறேன். நீங்கள் உங்களது ஐ.தே. கட்சியின் யாப்பைப் பாதுகாத்துப் பலம டைந்து கொள்ளுங்கள்' என தாம் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசியவேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரணிலுக்கு கூறியிருப்பாரோ என்பது தெரியவில்லை.

உண்மையில் ரணிலின் மாமனாரான ஜே.ஆரின் அரசமைப்புக் காரணமாக தலை யெடுத்துள்ள சிக்கலிலிருந்து விடுபட ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.ஆரின் மருமகனான ரணிலின் உதவி தேவைப்படுகிறது. அதேசமயம் ஜே.ஆரின் மருமகனான ரணில் தமது ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உருவாக்கிக் கொண்ட கட்சியின் யாப்பு விதிகள் காரணமாக கட்சிக்குள் தலைதூக்கியுள்ள சிக்கலிலிருந்து விடுபட அவருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உதவி அவசியமாகிறதா என்பது தெரியவில்லை.

எது எவ்வாறான போதிலும், மாமனார் ஜே.ஆரால் உருவாக்கப்பட்ட அரசமைப் பின் கீழ் இந்த நாடு 32 ஆண்டுகாலம் நிர்வகிக் கப்பட்டுவிட்டது. மருமகன் ரணில் விக்கிரம சிங்க ஐ.தே.கட்சிக்கு அறிமுகப்படுத்திய யாப்பின் கீழ் ஐ.தே.கட்சி 15 ஆண்டுகள் செயற்பட்டுவிட்டது.

மாமனார் ஜே.ஆரின் அரசமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறை செயற்பட்டுள்ளது. மருமகன் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி யாப்பின் மூலம் நிறைவேற்று அதிகார கட்சித் தலைமை நடைமுறை செயற்பட்டுள்ளது.

இன்று ஆட்சி அதிகாரத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ அங்கே. அதே போன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐ.தே. கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இங்கே.

மொத்தத்தில் மாமனார் ஜே.ஆரின் அரசமைப்பிலோ மருமகன் ரணிலின் கட்சி யாப்பிலோ திருத்தம் மேற்கொள்வதென்பது நினைக்குமளவுக்கு அத்துணை லேசானதொரு காரியமல்ல. அது உண்மையில் எலிகள் ஒன்றுகூடி பூனையின் கழுத்தில் மணியொன்றைக் கட்டிப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முயல்வதற்கு ஒப்பான சிரமமான பணியொன்றே.


We felicitate our Alma Mater
**Holy Family Convent, Jaffna**
on being declared as a
**National School**
on 05th August 2010.

Our sincere wishes to the Principal, Staff and Students to continue to excel in all spheres.

Past Pupils' Association
Holy Family Convent, Jaffna.



## மரண அறிவித்தல்

**திருமதி எலைஸா தங்கரட்ணம் மான் [Mann]**



ஊரெழுவைச் சேர்ந்தவரும் தற்போது உரும்பிராயில் வசித்தவருமான திருமதி எலைஸா தங்கரட்ணம் மான் நேற்று (09.08.2010) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பென்ஸமின் அரசரட்ணம் மானின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்பையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லப்பா மான்-நேசம்மா தம்பதியரின் மருமகளும் டொறத்தி மனோகரி மனோரஞ்சன் (யாழ்.மருத்துவபீடம்), புளோரா ராஜினி ரவீந்திரகுமார் (மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தாயும் மனோரஞ்சன், ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், ராஜரட்ணம், பவளரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் சகோதரியும் நிஷாந்தி, கிறிஸ்ரி, ஜெயரூபன், லெஸ்லி, ஜெசிக்கா, ஜெபராஜ் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், றேச்சலின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பலாலி வீதி, உரும்பிராய் தெற்கில் நடைபெற்று,கோப்பாயில் உள்ள அங்கிலிக்கன் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,உரும்பிராய் தெற்கு.
தோ.பே: 0213214788

தகவல்:
R.ரவீந்திரகுமார், G.மனோரஞ்சன் (மருமக்கள்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அணிகளின் உதைபந்தாட்டம்; யாழ்ப்பாணப் பெண்கள் அணியிடம் கிண்ணம்

வலி.வடக்கு,ஒக.10

விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் 3 கோல்களினால் மன்னார் மாவட்ட அணியை வென்று சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது யாழ்.மாவட்டப் பெண்கள் அணி.

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந் தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மன்னார் அணியும் யாழ்ப்பாண அணியும் மோதின.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணி வீராங்கனைகளும் கடுமையாக மோதிக்கொண்டனர்.

முதல்பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் மன்னார் அணியின் முன்கள, பின்கள வீராங்கனைகளின் வியூகங்களை உடைத்துக் கொண்டு நுழைந்த யாழ்.வீராங்கனைகள் கோல் ஒன்றைப் பெற்றனர். இந்நிலையில் முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை என இரு அணிகளும் அதிரடியாக ஆடின.

மன்னார் அணி வியூகம் அமைத்து ஆடிய போதும் யாழ்ப்பாண முன்கள வீராங்கனைகள் அவர்களின் வியூகங்களை உடைத்துக் கொண்டு முன்னேறினர். அதேபோன்று மன்னார் அணியின் வீராங்கனைகளும் யாழ்.அணியினரின் வியூகங்களை இலகுவாக உடைத்தனர்.

ஆனால் இரு அணிகளும் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களைப் பல தடவைகள் தவறவிட்டனர். இருந்தபோதிலும் யாழ்.அணி வெற்றிகரமாக மேலும் ஒரு கோலைப் பெற்று முன்னணி வகித்தது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.அணி மூன்றாவது கோலைப் பெற்றுத் தனது வெற்றியை உறுதி செய்தது.

ஆட்டநிறைவில் யாழ்.மாவட்ட அணி, மன்னார் மாவட்ட அணியை 3:0 எனும் கோல் கணக்கில் வெற்றி கொண்டு மாகாண சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது.(6-86)

## இறுதியாட்டம்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (6-23)

# மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட்; அமெரிக்க மிஷனை வென்றது மகாஜனா

வலி.வடக்கு,ஒக.10

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 81 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 49.5 ஓவர்களின் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சிந்துஜன் 79 பந்துகளில் 17 பௌண்டறிகள், 4 சிக்ஸர்களுடன் 134, ரசிகரன் 123 பந்துகளில் 13 பௌண்டறிகளுடன் 72 ஓட்டங் களை பெற்றுக் கொண்டனர்.

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியைச் சேர்ந்த ஜனந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும்.

கஜந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

327 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி 47.4ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பிரணவன் 83 பந்துகளில் 14 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 94, நிலக்ஷன் 97 பந்துகளில் 6 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன் 64, சற்சீலன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த நிறோஜன் 8.5 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 71 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் ஆனந்தகுமார் 9 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (6-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.10

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவ மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (6-23)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக.10

உரும்பிராய் கிழக்கு சென்.மைக்கல் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் தலைவர் தா.இராசநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் சுன்னாக மேற்தரக் கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் கலந்து கொள்வார்.

(6-23-228)

# விறுவிறுப்பான அரையிறுதியில் வென்று உடுவில் மகளிர் இறுதியாட்டத்துக்கு தகுதி

வலி.வடக்கு,ஒக.10

பரபரப்பாக நடைபெற்ற அரையிறுதியில் 5 புள்ளிகளினால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது உடுவில் மகளிர் கல்லூரி.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட சங்கம், இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப் பந்தாட்டத்தின் அரையிறுதியாட்டம் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டமை பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

முதல்பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 17:15 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கிய போதிலும் உடுவில் மகளிர் கல்லூரி மிகவும் வேகமாக விளையாடி மைதானத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 21:14 புள்ளிகள் என்ற முன்னணி நிலையில் நின்ற வேளை ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டநிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 36:31 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (6-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# படையினர் – பொதுமக்கள் நல்லுறவு 'ருவெண்ரி – 20'; ஸ்ரான்லி வி.கவை வென்றது இராணுவ அணி

யாழ்ப்பாணம்,ஒக.10

ஜெயவர்த்தனவின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க இராணுவ அணி ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

பாதுகாப்புப் படைத் தலைமையகமும் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் பொதுமக்கள் படையினர் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்துக்கான 'ருவெண்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இராணுவ துடுப்பாட்ட அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இராணுவ துடுப்பாட்ட அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும் குணரத்ன 31 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி வீரர்களான சுகிர்தன் நான்கு ஓவர்கள் பந்து வீசி, 22 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் துசியந்தன் நான்கு ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

206 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் காந்தன் 59 ஓட்டங்களையும் றஜனி 47 ஓட்டங்களையும் றஜீவ் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இராணுவ துடுப்பாட்ட அணி வீரர்களான விதாரண 3 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் லியன்கே 4 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (6-23)



இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் தூய ஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மோதவுள்ள குருநகர் பாடும்மீன், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகங்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுகளுடன் நெஞ்சைவிட்டகலா விண்ணக வாழ்வின்

# 31 ஆம் நாள் நினைவும்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

# நன்றி நவிலலும்

ஆண்டவன் தம் இல்லத்தில்
ஊழியுள்ள காலமும் நான் இருப்பேன்

அமரர்

## E.L.S. மரியாம்பிள்ளை

(பிரபல குத்தகையாளர்-குருநகர்)



**மண்ணில்:**
**14.05.1937**

**விண்ணில்:**
**11.07.2010**

மரியாம்பிள்ளை எனும்
மங்கள நாமம் கொண்டு
மண்ணகம் துறந்து
விண்ணகம் சென்ற தகப்பனே...!
விம்முகின்றோம் உங்கள் பிரிவை எண்ணி

குருகுல பூமி குருநகர் மண்ணில்
மாஸ்ரர் என்ற நாமம் கொண்டு
குதூகலம் கொண்ட குடும்பத்தை ஆண்ட
குணாளனே - எம்
குல தெய்வமே - அப்பா..!

அன்பு முத்தம் தந்து
ஆசை மொழி பேசி
அனைவருக்கும் கையசைத்து
ஆர்வமுடன் புறப்பட்டீர்

கொழும்பு செல்லும் வழியில் - உம்மை
எமதர்மன் எதிர்கொண்டான்
விபத்து எனும் பெயரில்
வீதி வந்து வழிமறித்தான்
ஒரு வார்த்தைகூடப் பேச முன்னர்- உங்கள்
உயிர் மூச்சை அடக்கிவிட்டான்

அப்பா உங்கள் வரவை எண்ணி
அன்பு மகள் காத்திருக்க - நீங்கள்
அனைவரையும் தவிக்கவிட்டு
ஆண்டவனிடம் சென்றீரோ....?

ஆண்டவன் அழைப்போ - இல்லை
உம் மகன் அழைத்தானோ.... இதை
அறியாத் துயரில் உம்மவள் அந்தோனியம்மா
ஆறாத்துயரில் உம் பிள்ளைகளும் .... அப்பா...!

எழுபத்தி மூன்று ஆண்டுகளை
முந்திக் கடந்த உங்களை
முந்தல் நகர் காலன்
முடித்துவிட்டான் நொடிப்பொழுதில்

கள்ளமில்லா உம் சிரிப்பால்
காண்பவரைக் கவர்ந்த கள்ளழகா
கடை நொடி நேரம் வரை- உங்கள்
கலை எழில் மாறவில்லையே - அப்பா

பாசத்தின் பிறப்பிடமே- எங்கள்
அன்பின் உறைவிடமே - அப்பா....!
அழுகின்றோம்,புலம்புகின்றோம் - உங்கள்
அன்புக்காய் ஏங்குகின்றோம்

இறப்பின் பின் யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்
பணித்தவன் பாதம் கண்டு-நீங்கள்
பரகதி சென்று இளைப்பாறிட நாம்
பரமனை வேண்டுகின்றோம்.

*இரக்கமுள்ள நித்திய இறைவா இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட உமது அடியாரும் எமக்குப் பிரியமானவருமான எங்கள் அன்பு அப்பா*

## அமரர் E.L.S. மரியாம்பிள்ளை

*எனும் அடியானின் ஆன்மாவை பாவக்கட்டுக்களில் இருந்து விடுதலையாக்கி 'இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்' என்ற திருவசனத்தை அக்களிப்போடு கேட்கும் மகனாக மாற்றி எங்களுடைய அன்பான அப்பாவிற்கு நித்திய வாழ்வை அளித்தருள உம்மைக் கெஞ்சி இரந்து மன்றாடுகின்றோம். எங்கள் நல்ல தகப்பனே! ஆமென்! ஆமென்!! ஆமென்!!!*

*அன்னாரின் ஆன்ம சாந்தித் திருப்பலிகள் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு* **குருநகர் புதுமை மாதா ஆலயத்திலும் Sacred Heart Church Hall Edgehill Road Wimbledon sw 19 4lu Tuesday 7pm U.K.**யிலும் ஒப்புக்கொடுக்கப்படும். ஆத்ம சாந்தித் திருப்பலியில் கலந்துகொண்டு அடியாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் மரணத்தில் எம்முடன் தோளோடு தோள் நின்று எமக்கு ஆறுதல் வழங்கி எமக்கு சகல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டி உதவிகள் பல புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இவரின் பிரிவால் துயருறும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 01, 02 ஆம் குறுக்குத் தெரு.
குருநகர், யாழ்ப்பாணம்.
*49, Nonsuch walk cheam sm 2 7LG*
*T.P: 00442082242722*

(திருப்பலியின் பின் வீட்டிற்கு வரவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. இரு புத்தகங்கள் வாங்கும் விலைக்கு, ஒரு பைக்கற்றுக்குள் ஒரு பென்சிலும் ஒரு அடிமட்டமும் கொண்ட எத்தனை பைக்கற்றுக்கள் வாங்கலாம்?
1) 6 பைக்கற்றுகள். 2) 8 பைக்கற்றுகள்.
3) 10 பைக்கற்றுகள்.

✱ **32ஆம், 33ஆம் வினாக்களில் தரப்பட்ட கூற்றுடன் மிகப் பொருத்தமாக அமையும் கருத்தைத் தரும் விடையைத் தெரிவுசெய்க.**

32. சில பிராணிகளின் விசேட அம்சங்களில் ஒன்றாக விரலிடை மென்சவ்வுகளும் அமைகின்றன.
1) அனைத்து தரை வாழ் உயிரினங்களுக்கும் இது பொதுவானது.
2) இலகுவாக நீந்துவதற்கு உதவி செய்வனவாகவும் இவை அமைந்துள்ளன.
3) பறவை இனங்களில் இவ் அம்சத்தை சிறப்பாகக் காண முடியும்.

33. தரம் 05இல் கல்வி கற்கும் அம்சிகா, பாடசாலைக்கு ஒழுங்காக வருகின்ற மாணவிகளில் ஒருத்தியும் வகுப்பின் முதல்நிலை மாணவியும் ஆவாள். ஆனால், தற்போது அவளின் வரவு குறைவாகவும், பாடத்தில் கவனம் செலுத்தும் தன்மை குறைவாகவும் காணப்பட்டது. இதற்குக் காரணமாக அமைவது,
1) ஆசிரியர் கூடுதலான பயிற்சிகளையும் விளக்கங்களையும் வழங்குகின்றமை.
2) இன்னும் சில நாட்களில் வரப்போகும் புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மனப்பயம் ஏற்பட்டிருக்கின்றமை.
3) சில வாரங்களுக்கு முன்பு ஏற்பட்ட தொற்றுநோயால் அவளின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தமை.


34. விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த பொருள் ஒன்றின் விலை ரூபா 458.50 ஆகக் காணப்பட்டது. இதற்குரிய சரியான குறியீட்டு வடிவமாகக் கொள்ளத்தக்கது எது?
1) SVK.TP 2) NS.MN 3) PSN.ST

35. பாடசாலையில் பரிசளிப்பு விழா ஒன்றிற்காக அச்சடிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் அட்டவணையில் ஒரு நிகழ்வு இடம்மாறி அச்சிடப்பட்டு விட்டது. அந்நிகழ்வைத் தெரிவுசெய்க.
1- அதிதிகள் வருகை. 2- மங்கள விளக்கேற்றல்.
3- இறை வணக்கம். 4- கலை நிகழ்வுகள்.
5- வரவேற்புரை. 6- தலைமையுரை.
7- அதிதிகள் உரை. 8- நன்றியுரை.
1) மங்கள விளக்கேற்றல். 2) கலை நிகழ்வுகள்.
3) தலைமையுரை.

✱ + 1 - = × 3 - + ÷ × 4 = 4 ÷ - × 1 - × + 3 - + 4 - × ÷ 1 4 × - + × - × ÷ - ÷

36. இவ் ஒழுங்கில் அதிக தடவை இடம்பெற்றுள்ள கணிதச் செய்கை யாது?
1) - 2) × 3) +

37. '+' கணிதச் செய்கை இடம்பெற்ற தடவைக்கும் '×' கணிதச் செய்கை இடம் பெற்ற தடவைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
1) 2 2) 3 3) 4

38.


இவ் அமைப்புத் தொடரில் '?' எனும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?
1) 2 2) 3 3) 4

✱ **39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பின்வரும் பாடல் அடிகளைக் கொண்டு விடை தருக.**

பொங்கல் நாளில் ............✱..............
போற்றி நன்றி கூறிடுவோம்
எங்கள் தோழன் இவனென்று
ஏற்றுப் போற்றி வாழ்ந்திடுவோம்.

39. இப் பாடல் அடிகளில் யாரை முன்னிறுத்திப் பாடப்பட்டுள்ளது?
1) வியாபாரி. 2) ஆசிரியர். 3) உழவன்.

40. '✱' இவ் இடத்தில் வரவேண்டிய பொருத்தமான சொல் எது?
1) தூற்றிடுவோம். 2) புகழ்ந்திடுவோம்.
3) போற்றிடுவோம்.

## வினாத்தாள் II — 1 மணி 15 நிமிடங்கள்

சுட்டெண் ______ புள்ளிகள் ______

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. கீழே தரப்பட்டுள்ள பாடல் அடிகளை அடிப்படையாகக் கொண்டு 1-10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்

ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.

1) இப்பாடலில் எப்பொருளைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது?
......................................................................
✱ பின்வருவனவற்றிற்கு ஒத்தசொல் எழுதுக.
2) உலகம் ..............................
3) துயில் ..............................
✱ பின்வருவனவற்றிற்கு எதிர்க்கருத்துச்சொல் எழுதுக.
4) நல்ல ..............................
5) எழுச்சி ..............................
6) 'கதிரொளி' என்பதைப் பிரித்து எழுதுக.
......................................................................
7) 'ஊரினை' என்பதனைப் பன்மையில் எழுதுக.
......................................................................
8) பாடலில் உள்ள பெயரெச்சச்சொல் ஒன்று எழுதுக.
......................................................................
9) 'பத்திரிகை' என்பது குறிக்கும் பால் வகை எது?
......................................................................
10) பாடலில் உள்ள முன்னிலை ஒருமைச்சொல் ஒன்று எழுதுக.
......................................................................

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1) தகவல் / அறிவியல் / உள்ளது / பல / ஏற்படுத்தி / முன்னேற்றம் / தொடர்பில் / சாதனைகளை
......................................................................
......................................................................
2) தேய்வடைந்து / நிலத்தின் / மண்ணரிப்பினால் / வளம் / செல்கின்றது
......................................................................

03. 1) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக்கி எழுதுக.
1. டயானா அதிகாலையில் எழுந்தாள்.
2. டயானா பல் துலக்கி முகம் கழுவினாள்.
......................................................................
2) பின்வரும் தொடர் வாக்கியத்தை இரு தனி வாக்கியமாக எழுதுக.
கீர்த்திகா விடாமுயற்சியுடன் படித்ததால் உயர்ந்த புள்ளிகளைப் பெற முடிந்தது.
1. ..............................................................
2. ..............................................................

04. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.
1) கல்லில் நாருரித்தல் ..............................
2) வயிற்றில் அடித்தல் ..............................

05. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
1) தனது சொத்துக்கள் உடைமைகளை இழந்தவன் ..............................
2) தன் நாட்டைக் காட்டிக்கொடுப்பவன் ..............................

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
......................................................................
2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
......................................................................

07. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.
1) நண்பி என்னுடன் வீடுவரை வருவாயா
2) வகுப்பறையில் சத்தம் போடாதீர்கள் என்றார் ஆசிரியர்

08. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.
1) வீதியின் இரு பக்கமும் ...................... தரும் மரங்கள் தொடர்ந்து காணப்பட்டன. (நிழல் / நிலல் / நிளல்)
2) அதிகாலையில் சிறுவர்கள் பூக்களை .............................. (பரித்தனர் / பறித்தனர்)

09. 1) பின்வரும் தமிழ்க் கருத்திற்கு பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1. பாடசாலை ..............................
2. வகுப்பறை ..............................
3. கரும்பலகை ..............................
2) பின்வரும் ஆங்கிலக் கருத்தைத் தமிழில் எழுதுக.
1. I am coming to the class ..............................
2. Who are you? ..............................

10. மம செல்லங்கரனவா எனும் சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக.
......................................................................

✱ **11-29 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

11. பின்வரும் தாவர வகைகளில் மேலொட்டுண்ணித் தாவரம் எது?
1) புடோல். 2) பூசனி. 3) குருவிச்சை. 4) தாளை.

12. பின்வரும் மூலிகைத் தாவரங்களில் தடித்த இலையுடைய தாவர வகை எது?
1) தூதுவளை. 2) குறிஞ்சா.
3) அகத்தி. 4) கற்பூரவள்ளி.

13. நெல் களஞ்சியசாலைகளில் அதிகளவில் காணப்படும் பூச்சி எது?
1) கரப்பான்பூச்சி. 2) அந்துப்பூச்சி.
3) மூட்டுப்பூச்சி. 4) தெள்ளு.

14. தேசப்படங்களில் இலங்கையின் பிரதான உணவுப் பயிரைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் நிறம் யாது?
1) பச்சை. 2) நீலம். 3) மஞ்சள். 4) சிவப்பு.

15. சுற்றாடல் வளி மாசடைதலில் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தி வரும் தாவர வகை எது?
1) தொட்டாற்சுருங்கி. 2) பாதீனியம்.
3) புளி. 4) இலுப்பை.

16. நீர்கொதித்தாறிய பின் பாத்திரத்தின் அடியில் வெண்ணிறமாகப் படிந்திருப்பது எது?
1) உப்பு. 2) காரியம்.
3) வெண்மணல். 4) பாத்திரத்தின் துகள்கள்.

17. பின்வரும் தாவரங்களில் விலங்குணவிற்காக வளர்க்கப்படும் தாவரவகை எது?
1) நெல். 2) பயறு. 3) சணல். 4) வேம்பு.

18. இவ் வீதிச்சமிக்ஞை குறிப்பது,

1) முன்னே வருக.
2) நிறுத்துக.
3) வலது பக்கம் திரும்புக.
4) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துக.

19. வீடுகளில் அரிசியில் கலந்துள்ள பதர்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படுவது எது?
1) சட்டி. 2) அகப்பை. 3) சுளகு. 4) சாயவடி.

20. ஒருவரின் அன்றாட செயற்பாட்டிற்குரிய சக்தியை வழங்கும் உணவுக்கூறு எது?
1) புரதம். 2) மாப்பொருள்.
3) இலிப்பிட்டு 4) கனியுப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. இவ் உடுத்தொகுதி குறிப்பது,
1) கார்த்திகை.
2) மிதுனம்.
3) கலப்பை.
4) ரிஷபம்.



22. கடற்கரையோரப் பிரதேசங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பிரதான நடவடிக்கை எது?
1) மணமேடுகளை அமைத்தல்.
2) முருகைக்கல் அகழ்வதைத் தடுத்தல்.
3) துறைமுகங்கள் அமைத்தல்.
4) கண்டல் தாவரங்களை இல்லாது செய்தல்.

23. நீரிழிவு நோயாளர்கள் தமது உணவில் பிரதானமாகச் சேர்த்துக்கொள்ளும் தானிய வகை எது?
1) பாசிப்பயறு. 2) உழுந்து. 3) குரக்கன். 4) சாமை.

24. விஷப் பிராணியினால் கடியுண்ட ஒருவருக்கு உடனடியாகச் செய்யக்கூடிய முதலுதவி எது?
1) கடியுண்ட இடத்திற்குக் கீழும் மேலும் இறுகக் கட்டுப் போடுதல்.
2) கூரிய ஆயுதத்தால் காயத்தைக் கிழித்து இரத்தத்தை வாயால் உறிஞ்சி எடுத்தல்.
3) காயம்பட்ட இடத்தின் மேல் நீரை விரைவாகச் செலுத்தி சவர்க்காரத்தால் கழுவுதல்.
4) காயத்தின் மேல் எண்ணெய் தடவுதல்.

25. இத் தையல்வகை குறிப்பது,
1) கம்பளித்தையல். 2) சங்கிலித்தையல்.
3) சோம்தையல். 4) மீன்முள்ளுத்தையல்.



26. இலங்கையில் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
1) நாத்தாண்டியா. 2) வாழைச்சேனை.
3) கந்தளாய். 4) அம்பேவல.

27. பின்வரும் இசைக்கருவிகளில் கஞ்சக்கருவி எது?
1)  2)  3)  4) 

28. கிராமசேவகரிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியாத சேவை பின்வருவனவற்றுள் எது?
1) நன்னடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்.
2) வாக்காளராகத் தம்மை பதிவுசெய்துகொள்ளல்.
3) தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பவற்றிற்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.
4) துவிச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல்.

29. இலங்கையில் அண்மையில் தனது 'டெஸ்ட்' கிரிக்கெட் வாழ்வில் இருந்து விடைபெற்ற வீரர் யார்?
1) குமார் சங்கக்கார. 2) மஹேல ஜயவர்த்தன.
3) முரளிதரன். 4) டில்சான்.

✱ பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.

30.  31.  32.  33. 

.................. .................. .................. ..................


✱ பின்வரும் குறியீடுகள் குறிக்கும் பெயர்களை எழுதுக.

34.  35.  36. 

37. 

.................. .................. .................. ..................

38. இவ்வுருவின் சுற்றளவு யாது?





..........................................

39. 8 மாணவர்களின் மொத்த நிறை 284kg. எனின், ஒரு மாணவரின் சராசரி நிறை யாது?


..........................................

40. நகரங்களுக்கிடையிலான தூரம் km இல் தரப்பட்டுள்ளது. B யிலிருந்து E வரையான தூரம் யாது?




..........................................

41. இப்புள்ளி வலையில் இரு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 2cm. எனின், இவ் உருவின் பரப்பளவு யாது?



..........................................

42. தாங்கி ஒன்றில் இருந்து 27l 500ml நீர் வெளியே எடுக்கப்பட்ட பின் 39l800ml நீர் எஞ்சி இருந்தது. எனின், தாங்கியில் ஆரம்பத்தில் இருந்த நீரின் அளவு யாது?

..........................................

43. குறித்த ஒரு நேரத்தில் வீதியால் சென்ற வாகனங்களின் எண்ணிக்கைகள் வருமாறு:

| வாகனம் | வலம் | இடம் |
|---|---|---|
| துவிச்சக்கர வண்டி | 53 | 44 |
| முச்சக்கர வண்டி | 36 | 30 |
| பாரவூர்தி | 14 | 17 |
| பேருந்து | 27 | 23 |




1) வீதியால் இடப்பக்கமாகச் சென்ற வாகனங்களை நிரல் வரைபில் காட்டுக.
2) வீதியால் சென்ற பாரவூர்திகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................

3) வீதியால் சென்ற துவிச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கைக்கும் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..........................................

4) பேருந்து ஒன்றில் சராசரியாக 35 பேர் பயணம் செய்தனர். எனின், பேருந்தில் வலதுபக்கமாகப் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர்?

..........................................

5) வீதியால் சென்ற முச்சக்கரவண்டிகளில் மொத்தமாக 198 பேர் பயணம் செய்தார்கள். எனின், ஒரு முச்சக்கரவண்டியில் சராசரியாகப் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர்?

..........................................

6) வீதியால் வலது பக்கமாகச் சென்ற வாகனங்களுக்கும் இடது பக்கமாகச் சென்ற வாகனங்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..........................................

44. 350g சீனி ரூபா 28.00 எனின், ரூபா 500.00 ஐக் கொடுத்து கபிலன் 2 1/2kg சீனி வாங்கினான். அவன் மீதியாகப் பெறும் பணம் எவ்வளவு?

..........................................


45. தொழிலாளி ஒருவர் மாலை 3.50 இற்கு வேலையை நிறைவு செய்தார். எனின், நிறைவுசெய்த நேரத்தை டிஜிற்றல் நேரத்தில் குறித்துக் காட்டுக.

46. சுருக்குக. $\frac{2}{3} - \frac{1}{2} =$ ..........................................

47. இச் சதுர அடிக் கூம்பகத்தின்,
1) முகங்களின் எண்ணிக்கை யாது? ....................
2) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ....................



48. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசமத்தில் எழுதுக.




..........................................

49. அதிகாலை வேளை நான் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தேன். திடீரென கிணற்றில் இருந்து குருவி ஒன்றின் அவலக்குரல் கேட்டது. நான் ........
இச்சம்பவத்தைத் தொடரும் வகையில் பொருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் ஐந்து சொற்களிலான ஆறு வாக்கியங்கள் எழுதுக.

..........................................
..........................................
..........................................
..........................................
.......................................... -முற்றும்-

## விடை விளக்கக் குறிப்புக்கள்: வினாத்தாள்-I

*1-3 எடுத்துக்காட்டு 2002 அரசபரீட்சை 02-3 எடுத்துக்காட்டு 2002 அரசபரீட்சை*
*03-E, F எளிய பொறிகள் (எடுத்துக்காட்டு 2003 அரசபரீட்சை.)*
*04-A, D ஈருடக வாழிகள் (எடுத்துக்காட்டு 2003 அரசபரீட்சை.)*
*05-2 (எடுத்துக்காட்டு 2002 அரசபரீட்சை.) 06-1 (எடுத்துக்காட்டு 2002 அரசபரீட்சை*
*07-2 ஏனையவை ஒத்தகருத்தினை வெளிப்படுத்துபவை.*
*08-1 ஏனையவை ஒத்தகருத்தினை வெளிப்படுத்துபவை.*
*09-1 10-3 எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை*
*11-2 எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை. 12-1 எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை*
*13-3 இதுவரை இந்த அமைப்பில் வரவில்லை எதிர்பார்க்கலாம்.*
*14-3 இதுவரை இந்த அமைப்பில் வரவில்லை எதிர்பார்க்கலாம்.*
*15-3 இரண்டும் வெவ்வேறு மார்க்கப் போக்குவரத்து ஊடகங்கள்.*
*16-2 (கடலை வெண்ணிறமல்ல) 17-1 (எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை*
*18-3 (எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை.)*
*19-3 5 வசனம் தந்து ஒழுங்குபடுத்தும் போது எது 03 ஆவதாக வருகிறதோ அதனை விடையாகக் கொள்ளவேண்டும்.*
*21-சரி 1-4, 3-6, 2-5 22-பிழை 6-2, 23-3*
*24-3 (குத்துக்கோடு ஒன்று குறைகின்றது)*
*25- துளி 26. வரலாறு.*
*27-2 படி 1) 2010-2012 2) 2013-2017 3) 2018-2019*
*(எடுத்துக்காட்டு 2006 அரசபரீட்சை.)*
*28-2 29-*




*45கி.மீ /3 = 15 கி.மீ*

*30-1 சுமதி → புஷ்பா → சசிகலா → வரதா*
*31-3 32-4 33-3 34-4*
*35- விடை 4, 5 2010 ஜனவரி 1 வெள்ளி.*

| | | | |
|---|---|---|---|
| 1 வெள்ளி | 7 வியாழன் | 8 வெள்ளி | 14 வியாழன் |
| 15 வெள்ளி | 21 வியாழன் | 22 வெள்ளி | 28 வியாழன் |
| 29 வெள்ளி | | | |

*36-630 ரூபா. 37-பிழை. 38-சரி.*
*39-ஒரு பாடலை இருவரும் பாடியுள்ளனர். 40-தோசை தானாகப் புரளாது என்பதா*

## வினாத்தாள்-II

01. 1-கடிகாரம் (காலம் பற்றிப்பேசுகிறது), 2-மிகச்சிவந்து. 3-கெட்ட, 4-மந்தாரை, 5-சூரியன், 6-பெண், 7-பேட்டுக்கோழி, 8-காலைப்பொழுதை.
02. 1-எப்போதும் பகைமையை உணர்த்துவதால் (கீரியும், பாம்பும் போல)
2-துன்பத்தின் மேல் துன்பம் என்பதால் (மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல)
03. 1-தம்பி பந்தினை அடித்து விளையாடினான்.
2-பெற்றோர்கள் தமது குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவர்.
04. 1-நான் எப்போதும் உண்மையே பேசுவேன்.
2-அவள் மெல்லமெல்ல நடந்து சென்றாள்.
05. 1-அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, 2-அடாது செய்தவர் படாது படுவார்.
06. 1-Green, 2-Rabbit, 3-Parrot, 4-Swren
07. 1-ரோஹுப, 2-காட்டத?, 3-ஔபே நம மொகக்த?, 4-ஔபே வயச கீயத?, 5-ஔபாகே பாசல நம மொக்கத?
08. 1-4, 2-2, 3-3, 4-1, 5-3, 6-2, 7-2, 8-1, 9-2, 10-3, 11-1, 12-1, 13-3, 14-3, 15-1, 16-1, 17-3, 18-4, 19-1, 20-3.
09. அ-நீர்மட்டம், தூக்குக்குண்டு, மூலைமட்டம், கைக்கரண்டி, சவல்.
ஆ-1-விலங்கு, 2-நீர், 3-அதிர்ந்து வெடித்து, 4-காற்று.
10. 1-010000 கி.மீ, 2-0.86, 3-235 கி.மீ, 4-41.50, 5-103, 6-6cm², 7-42, 8-1900, 9-தென்கிழக்கு → வடகிழக்கு → தெற்கு → கிழக்கு. 10-34cm.
11. 1-236, 2-61, 3-சாஹிரா வித்தியாலயம், 4-118.
12. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்,

**கருத்தரங்குக் குறிப்பு:**

*நேற்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை இன்றைய தினம் வெளிவந்துள்ள விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 077-9597407 என்ற தொலைபேசியூடாக U.L.M.சாஜித் ஆசிரியரிடம் இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும். (பிரபல ஆசிரியர்கள் ஒதுக்கிய அரிய நேரத்தை பயன்படுத்த தவறாதீர்கள்)"*



### நாளைய கருத்தரங்குத் தொடரில்

கடந்த வருடம் முதல் கல்விச்சுடருக்கு அதிகளவு ஆக்கங்களை வழங்கியவரும் ஆரம்பக் கல்வித்துறையில் 18 வருட அனுபவமிக்கவரும் அதிபர் சேவையில் உள்ளவருமான வளவாளர் திரு.ஐ.சம்சுதீன் தயாரித்த வினாத்தாள்களும் இன்றைய தினம் வெளிவந்த வினாத்தாள்களுக்கான விடை விளக்கக்குறிப்புக்களும் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் நல்லையா



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் ஏத்திறாம்பியை கொமினை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் நல்லையா (07.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அன்னலஷ்மி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் சிறிகாந்தா (சுவிஸ்), சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகாந்தா அம்பிகாவதி (பாமா-சுவிஸ்), சிறிதரன் நளாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மகேஸ்வரி, பவளஇரத்தினம் மற்றும் அன்னைபூபதி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுஜீவன், றஜீவன், அரவிந், கௌசலியா, தர்சிகா, கௌசிகன் ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2010) புதன்கிழமை பிரான்சில் நடைபெறும். அவரது கொக்குவில் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.சந்திரதேவா (மைத்துனர்)
(வன்னியசிங்கம்)
தொ.பே. 0213211890

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (101816)

## மார்க்கண்டு முத்துலிங்கம்

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு முத்துலிங்கம் நேற்று (09.08.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதன் (U.K), நக்கீரன் (பொலிஸ் பயிற்சிக் கல்லூரி - களுத்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தீபாவின் மாமனும், காலஞ்சென்ற மிருகண்டு மற்றும் மனோன்மணி காலஞ்சென்றவர்களான தேவரத்தினம், அரியரத்தினம் மற்றும் கிருஷ்ணகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கியான்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.நக்கீரன் (மகன்)
021 226 4913

*துன்னாலை வடக்கு.* (சி-569760)

## இரத்தினசிங்கம் செல்லம்மா



வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கற்பக்குனை கந்தரோடையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் செல்லம்மா அவர்கள் 09.08.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - பூரணம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் ஆனந்தன், இராசபூபதி, சிவமணி, யோகராசா காலஞ்சென்றவர்களான இரத்தினம், பார்வதி, பூதப்பிள்ளை, சாவித்திரி, வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாதவிருதயம் (லண்டன்), ஜெயராஜா (கனடா), செல்வநாயகி (கனடா), சிவலிங்கராஜா, நிர்மலாதேவி (குவைத்), பிறேமாவதி (வசந்தி), வில்வராஜா (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான சசிகலா, மன்மதராசா ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி, புஸ்பராணி, வாமதேவன், பர்வதவதனி அப்துல் மஜீத், சிவராஜசிங்கம் (வவா), சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் செ.சிவராஜசிங்கம்
(வவா - மருமகன்)

*கற்பக்குனை,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (101638)

## திருமதி பழனித்துரை மகேஸ்வரி



அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் பருத்திக்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட பழனித்துரை மகேஸ்வரி 07.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி-சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பழனித்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரோகினிஅம்மா, இளையதம்பி, இராஜேஸ்வரி, பொன்னம்பலம் மற்றும் தம்பாப்பிள்ளை, தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நற்குணநாதன், தேவநாதன், சுபாஷினி ஆகியோரின் பாசமிகு தாயாயும் புஸ்பதேவி, றெஜினா, சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும் அரிகரன், அனுஜன், காருஜன், மாருஜா, சுஜிவா, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2010) புதன் கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் மல்லிகாதேவி.

*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம்.* (சி-569761)

# இலங்கைத் தமிழர்களை இந்திய அரசு கைவிட்டு விட்டது என்கிறார் டி.ராஜா



சென்னை, ஓக. 10

இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டது. இதை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதை உள்நாட்டு பிரச்சினையாக மட்டும் பார்க்கக் கூடாது.

- இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேனியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டுவருகிறது. இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதைத் தடுக்க மத்திய அரசு தவறிவிட்டது.

நாளை புதன்கிழமை நடைபெறும் மாநிலங்களவைக் கூட்டத்தில் இந்திய மீனவர்களின் பாதுகாப்புக் குறித்து கடுமையாகப் பேசப்படும். அதுபோல இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதை உள்நாட்டு பிரச்சினையாக மட்டும் பார்க்கக் கூடாது.

தமிழகத்தில் 80 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக வந்தமைக்குக் காரணம் இலங்கையில் தமிழர்கள் மீது நடைபெற்ற போராட்டத்திற்கு இந்திய அரசு இராணுவத்தை தார்மீக ரீதியாக வழங்கி உள்ளது. இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவும் இதை ஒப்பு கொண்டுள்ளார். இந்திய அரசு என்பது காங்கிரஸ் கட்சி மட்டும் அல்ல. தி.மு.க.வும் கூட்டணியில் உள்ளது.

இலங்கைப் போரில் மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளது. இதை ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கூட அறிவித்துள்ளார்.

ஆனால் இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டது. இதை கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது - என்றார்.

## ஈழ அகதிகள் முகாமில் அரிவாள் வெட்டு; பெண் ஒருவர் உட்பட மூவர் காயம்

சேலம், ஓக. 10

சேலம் இலங்கை அகதிகள் முகாமில் இரு தரப்பினருக்கு இடையில் நடந்த மோதலில் அரிவாள் வெட்டுக்கு இலக்காகி பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம் தம்மம் பட்டியை அடுத்த நாகியம்பட்டியில் இலங்கை அகதி முகாம் உள்ளது. இங்கு இலங்கை அகதிகள் குடும்பத்துடன் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு 15 பேர் கொச்சி வழியாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சி செய்தனர். அவர்களைக் கடற்படையினர் பிடித்து எச்சரித்து அனுப்பிவிட்டனர். இந்த 15 பேரும் தாங்கள் பிடிபட அந்த அகதி முகாமைச் சேர்ந்த இன்னொரு தரப்பினர் தான் காரணம் என்று நினைத்து 15 பேர் கும்பலாக வந்து இன்னொரு தரப்பினரைத் தாக்கினார்கள்.

இதில் ஜேசுதாஸ், அவரது மனைவி மேரி ஜெனீதா மற்றும் சாமிபிள்ளை ஆகியோருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஜேசுதாஸின் குழந்தை தர்ஷிகாவை அந்தக்கும்பல் தூக்கி வீசியது. இதில் தர்ஷிகாவும் காயமடைந்தார். இந்த மோதலை தொடர்ந்து அகதி முகாமில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

## ஈழத் தமிழருக்காக கவலைப்படாத தமிழக அரசு ஜெ. மீதான வழக்கில் போரிடுவது கேலிக்குரியது

### வைகோ சாட்டை

உதகை, ஓக. 10

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகவோ, தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்காகவோ கவலைப்படாத தமிழக அரசு, ஜெயலலிதா மீதான வழக்கில் வாய்தா கேட்டதற்குப் போராட்டம் நடத்தியது கேலிக்குரியது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

உதகையில் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை அவர் கூறியவை வருமாறு -

கொடநாடு தேயிலைத்தோட்டத்திற்குள் அத்துமீறி நுழைந்ததோடு, அதிகாரிகளுடன் சோதனையிடச் சென்றது கண்டிக்கத்தக்கது. இதற்காக இப்பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தது ஏற்க முடியாத செயல்.

கொடநாடு ஊராட்சித் தலைவர் பொன்தோஸ், இந்த எஸ்டேட் வளாகத்திற்குள் புதிதாக கட்டடங்களை கட்ட அனுமதியளித்துள்ளார். ஆனால், அவருக்கு அந்த அனுமதியை ரத்துச் செய்யும் அதிகாரம் கிடையாது. இதை நியாயமாகத் தட்டிக் கேட்ட அ.தி.மு.கவினர் மீது பொய்வழக்கு போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரை பொலிஸார் தொடர்ந்து மிரட்டுவதோடு பொய்வழக்குகளையும் பதிவு செய்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகவோ, முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினைக்காகவோ, தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப் படுவதற்காகவோ கவலைப்படாத தமிழக அரசு, ஜெயலலிதா மீதான வழக்கில் வாய்தா கேட்டதற்கு போராட்டம் நடத்தியது கேலிக்குரியது.

முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினைக்காக 33 தடவைகள் தி.மு.க. அரசு வாய்தா வாங்கியதால் தான் உச்ச நீதிமன்ற தீர்ப்பில் தமிழகத்தின் நலனே பாதிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

## பிரபா இறந்த செய்தி கேட்டு...!

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்காக ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர் வெங்கடாஜலபதி படத்தைத் தூக்கிப் போட்டு உடைத்தார் - என்று திருச்சி வேலுச்சாமி தெரிவித்துள்ளார்.

சீமானின் கைதைக் கண்டித்து புதுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற திருச்சி வேலுச்சாமி மேலும் கூறியவை வருமாறு-

பிரபாகரன் இறந்துவிட்டார் என்று தொலைக்காட்சிகளில் செய்திகள் வெளியானபோது அதைக் கண்டு அதிர்ச்சியான ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவர், நேரே வீட்டுக்குச் சென்று பூஜை அறையில் இருந்த வெங்கடாஜலபதி படத்தைத் தூக்கிப்போட்டு உடைத்தார்.

அவர் மனைவி காரணம் கேட்டபோது, என் தலைவன் பிரபாகரனைக் காப்பாற்றாத இந்தச் சாமி எனக்கு இனித் தேவையில்லை என்று மனைவிக்கு பதில் சொன்னார்.

நம் காவல் தெய்வம் வருமா, வராதா என்று எதிர் பார்த்துக் காத்திருக்கிறோம். இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு நடிகரின் வசனம்தான் நினைவுக்கு வருகிறது. "வரவேண்டிய நேரத்தில் கட்டாயம் வருவார்."

- இப்படி அவர் கூறினார்.

## தமிழகக் கடலோரக் காவலுக்கு மற்றொரு அதிநவீன விசைப்படகு



கடலூர், ஓக. 10

தமிழகக் கடலோரப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்த கடலோரக் காவல்படை பொலிஸாருக்கு மற்றொரு அதிவேக விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக தமிழகக் கடலோரப் பகுதியில் கண்காணிப்புத் தீவிரப்படுத்துப்பட்டுள்ளது. கடலோரக் காவல் படையினருக்கு இதற்கு முன்னர் நவீன இரண்டு எஞ்சின்கள் உள்ள ஐந்து தொன் திறனுள்ள படகு வழங்கப்பட்டிருந்தது. தற்போது மேலும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தும் விதமாக அரசு, மற்றொரு 12 தொன் எடை கொண்ட அதிநவீன படகு ஒன்றை வழங்கியுள்ளது.

## ஆந்திராவில் வெள்ளம்; 10 பேர் பரிதாபப் பலி

ஆந்திராவில் கோதாவரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழையால் கோதாவரி ஆற்றுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேலும் ஆந்திராவிலும் கோதாவரி ஆறு நீர்படிப்பு பகுதியில் மழை பெய்து வருதால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் 9 மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் சூழ்ந்துள்ளன. இந்த வெள்ளப்பெருக்கால் 10 பேர் பலியாகினர். பலியானவர்களில் 8 பேர் வாராங்கல்லையும், 2 பேர் அடிலாபாத்தையும் சேர்ந்தவர்கள். மேலும், 30ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நீரில் மூழ்கி நாசமாகின.




வாழ்த்துகின்றோம்

திரு இரத்தினசபாபதி இரத்தினேஸ்வரன்
(முகாமைத்துவ உதவியாளர் தரம் I)

முத்தான முப்பத்தொரு வருடமாய்
எம் முதியோர் இல்லத்தில் பொறுமையின் சிகரமாய்
புன்முறுவல் பூத்தபடி சேவைகள் பல புரிந்து
இன்றுடன் ஓய்வுபெறும் இரத்தினேஸ்வரன் அவர்கள்
வாழ்வில் மேன்மைகள் பல பெற்று
நீடூழி வாழ இதயத்தால்
வாழ்த்துகின்றோம்.

முதியோர் இல்லம், கைதடி.
அத்தியட்சகரும் முதியோர் இல்ல ஊழியர் நலன்புரி சங்கத்தினரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வுகள்

11.08.2010 - புதன்கிழமை

- ★ காலை 6 மணிக்கு வடமாகாண ரீதியான ஆண்கள் மரதன் ஓட்டம்
- ★ காலை 8 மணிக்கு வடமாகாண ரீதியான பெண்கள் சைக்கிள் ஓட்டம்

12.08.2010 - வியாழக்கிழமை

- ★ காலை 6 மணிக்கு வடமாகாண ரீதியான ஆண்கள் சைக்கிள் ஓட்டம்
- ★ காலை 8 மணிக்கு அங்கத்தவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டம்.
- ★ மு.ப. 10 மணிக்கு இரத்ததான நிகழ்வு இடம்பெறும். நிலைய ஆலயத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு நிலைய அரங்கில் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(101805) நிலைய நிர்வாகிகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11-10-1928

மறைவு 11-07-2010

**திருமதி கந்தையா றஞ்சிதம்மா**

(நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை)

திதி: 10.08.2010

இப்புவியில் பிறந்து தியாகச் சுடராய் ஒளிர்ந்து
பதினாறும் பெற்று, பெற்றது போதும்
என்றோ பிரிந்தாய் எம்மை விட்டு
எம் அன்னையே!

83/15, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
0212221076.

(101736)

தங்கள் பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செயலமர்வுகள் இடம் மாற்றம்

தென்மராட்சி, ஓக. 10

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் தரம் 10, 11 வகுப்புக்களின் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடக்கவிருந்த செயலமர்வுகள் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவக வளவாளர்கள் இந்தச் செயலமர்வில் பயிற்சிகளை வழங்கவுள்ளதால் சகல தரங்களைச் சேர்ந்த விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் கலந்துகொள்ளு மாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

* * *

தென்மராட்சி, ஓக. 10

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு நாளை புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறவிருந்த செயலமர்வுகள் வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவருக்கு கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, ஓக. 10

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.எம்.அபயரட்ணவும் கலந்துகொள்வர்.

இக்கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை கொழும்பு அருள்கல்விவட்டம் மேற்கொண்டுள்ளது. (ஒ)

## உயரப்புலத்தில் டெங்குத்தாக்கம்

நவாலி, ஓக. 10

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தில் டெங்கு நோயால் சிலர் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்காக மானிப்பாயில் சுகாதாரப் பகுதியினரால் கடந்தவாரம் அப்பகுதி எங்கும் புகை விசிறப்பட்டது. (த-100)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.03.1946 மறைவு 10.08.2006

**அமரர் யோசப் பற்றிக் (ராசா)**

அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் இருப்பிடமாய்
பண்பின் பொக்கிசமாய்
இடர்தீர்க்கும் மருந்தாய்
எம் இதயத்தில் வாழ்ந்த எம் அன்புத் தந்தையே!
ஆண்டுகள் பல போனாலும் உம் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டுப் பிரியாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவில்:

149/2, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சந்திரசேகரம் பற்குணராசா (தவம்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை அம்மன் கோயிலை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் பற்குணராசா (தவம்) 07.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - பூலோகவதி தம்பதியினரின் மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சகோதரரான ச.தர்மராசா (சைக்கிள்கடை ராசா) வின் இல்லத்தில் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(101812)

தகவல் :
தம்பி - ச.தர்மராசா
(சைக்கிள்கடை ராசா).

### திருமதி விஜயலஷ்மி கணபதிப்பிள்ளை



கொக்குவில் மேற்கு, குளப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட விஜயலஷ்மி கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (08.08.2010) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், தேவகி, சுந்தரகணேஷ், சித்திரா, சந்திரவதனி, சுஜீதா ஆகியோரின் அன்புத் தாயும் அருமைநாயகம், இரஞ்சன் (இலங்கை வங்கி - பம்பலப்பிட்டி), துரைசிங்கம், கண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் 6 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நாளை (11.08.2010) புதன்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு தெகிவளை, கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, ஜெயவர்த்தனா அவெனியூ,
தெகிவளை.
(T.P. : 2736679)

(சி/569492)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரன் திரவியவதனி



யாழ். எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டு, இறுதியில் கனடாவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி யோகேஸ்வரன் திரவியவதனி 05.08.2010 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - திரவியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் யோகேஸ்வரனின் பாசமிகு மனைவியும் ஆரபி, ராகபி, சிந்துஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரவியமலர் (பிரான்ஸ்), திரவியநாதன் (ஜேர்மனி), திரவியலிங்கம் (ஜேர்மனி), திரவியகுமாரி (லண்டன்), திரவியகலா (ஜேர்மனி), திரவியராஜ் (ஜேர்மனி), திரவியரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயசீலன் (பிரான்ஸ்), நவரஞ்சிதமலர் (ஜேர்மனி), விஜயகுமாரி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் (லண்டன்), சிவஞானலிங்கம் (ஜேர்மனி), ராஜி (ஜேர்மனி), சுலோசனா (லண்டன்) மற்றும் பாக்கியலீலா (கனடா), சந்திரலீலா (கனடா), சோதிமலர் (இலங்கை), லோகேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), பாலசச்சிதானந்தஈஸ்வரன் (இலங்கை), பூலோகசச்சிதானந்தஈஸ்வரி (இலங்கை), சுகுமாரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் **3280 Sheppard Ave.** இல் அமைந்துள்ள **Highland Funeral Home (Warden & Sheppard)** இல் 08.08.2010 ஞாயிற்றுக் கிழமையும், 09.08.2010 திங்கட்கிழமையும் மாலை 5 மணி தொடக்கம் 9 மணி வரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு, இன்று (10.08.2010) செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு **256, Kingston Road** இல் அமைந்துள்ள **St. John Norway Cemetery & Crematorium** இற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
யோகேஸ்வரன் (கனடா) - 2892002029
திரவியகலா (ஜேர்மனி) - + 49695890855
ம.பா. ஈஸ்வரன் (மைத்துனர்) மீசாலை - 077066890

தகவல் :
கணவர், பிள்ளைகள்.

(சி/569763)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி விமலசோதிராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட விமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி விமலசோதிராஜா 07.08.2010 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் அனுசியாவின் அன்புக் கணவரும் ராகவனின் அன்புத் தந்தையும் ரூபன் (றொசான் ஐசிங் கேக்), பிரபா, மாலினி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முன்னர் அறிவிக்கப்பட்டதன்படி அல்லாமல் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி றோட்,
கோண்டாவில் சந்தி.
T.P. : 0777742514

(101803)

தகவல் :
ரூபன் (றொசான்கேக்), பிரபா.
(சகோதரர்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி கருணா நாயக்காவின் வாகனம் மீது அம்பாந்தோட்டையில் இரவில் தாக்குதல்

கொழும்பு, ஓக. 10

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காகச் சென்ற ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் வாகனங்கள் நேற்றுமுன்தினம் இரவு பெலியத்தை பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டன.

தடிகளுடன் வந்த சுமார் 15 பேர் தமது வாகனங்களை அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமகாராம, தங்காலை, பெலியத்த, லுனுகம்வெகர உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக நானும், எனது ஆதரவாளர்களும் ஞாயிறு இரவு அங்கு சென்றோம்.

பெலியத்தைக்குச் சென்றபோது இரவு 9 மணியளவில் 15 பேர் அடங்கிய கும்பலொன்று தடிகளுடன் வந்து எமது வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தியது. நான் பயணித்த வாகனத்தையும் அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச்சென்றது.

அங்கு எம்மை அரசியல் செய்யக் கூடாது என்று கூறியே அக்கும்பல் தாக்குதல் நடத்தியது. இதுதொடர்பில் நாம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்யவேண்டும். - என்றார்.

அம்பாந்தோட்டை தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச ஆவார். அவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரே.

# அமைச்சரவை மாற்றத்தின் பின்பும் பிரதமராக ஜயரட்ணவே தொடர்வார்

கொழும்பு, ஓக. 10

இந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்திற்குப் பின்பும் தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரட்ணவே பிரதமராக நியமிக்கப்படுவார் என்று 'ஏசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்திற்குப் பின்பு டி.எம்.ஜயரட்ண பிரதமராக இருக்கமாட்டார் என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆனால், நவம்பர் மாதம் அமைச்சரவை மாற்றத்திற்குப் பின்பும் டி.எம்.ஜயரட்ணவே பிரதமராக இருப்பார் என்று ஏசியன் ட்ரிபியூன் நேற்று செய்தி வெளியிட்டது.

அத்தோடு புதிய அமைச்சரவையில் பல புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என்றும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை உறுப்பினர்களின் செயற்திறன் மற்றும் வயது போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையும், பிரதமர் பதவியும் நவம்பர் மாதத்தில் மாற்றி அமைக்கப்படும் என்று இந்த வருடம் ஏப்ரல் மாதம் அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடு இலங்கை' என்ற அரசின் கோட்பாட்டை நோக்கி நாட்டின் நிர்வாகத்தைப் பலப்படுத்தக்கூடியவாறே இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், வடமேல் மற்றும் ஊவா போன்ற மாகாணங்களில் இருந்து தெரிவான புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாக நியமிக்கப்படும் வாய்ப்பு அதிகம் உண்டு என்று அரச வட்டாரத்தை மேற்கோள் காட்டி ஏசியன் ட்ரிபியூன் மேலும் தெரிவித்துள்ளது.

# சக்வித்தி ரணசிங்கவின் இரண்டு பிள்ளைகளையும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் ஒப்படைக்குக!

## கங்கொடவில் நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஒக். 10

நிதி நிறுவனம் நடத்தி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட சக்வித்தி ரணசிங்கவின் பிள்ளைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்குமாறு கங்கொடவில நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

சக்வித்தி ரணசிங்க கைது செய்யப்பட்டதையடுத்து அவரின் மனைவியும் அவரின் 8 மற்றும் 10 வயதுடைய இரு பிள்ளைகளும் முன்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பலகோடி ரூபா நிதிமோசடி தொடர்பில் தேடப்பட்டு வந்த சக்வித்தி ரணசிங்கவும், அவரது மனைவியும் கடந்த 6 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை அறிந்ததே.

(சி)

# நாட்டு மக்களைத் திசை திருப்ப நாடகம் நடத்துகின்றது அரசு

## ஐ.தே.கட்சிப் பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 10

மக்களின் எதிர்பார்ப்புகளையும், வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாமல் தடுமாறும் அரசு பிரச்சினைகளைத் திசைதிருப்ப பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று குற்றஞ்சாட்டியது.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. அவற்றில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை. அரச ஊழியருக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் அது 2010 ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் எனவும் வாக்குறுதியளித்தது. ஆனால், வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ள நிலையிலும், இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினைகளைத் திசை திருப்ப கோமாளி அமைச்சர்களைக்கொண்டு பூரண அரச ஆசீர்வாதத்துடன் நாடகங்களை அரசு அரங்கேற்றி வருகின்றது. ஐ.நா. செயலாளருக்கு எதிராக ஒரு அமைச்சர் நகைப்புக்கிடமான உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டார். ஆனால், எதுவுமே நடக்கவில்லை. சர்வதேசரீதியாக எமது நாட்டுக்கு இதனால் அபகீர்த்தியே ஏற்பட்டது.

சமுர்த்தி முகவர் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு வருகைதரவில்லை என்ற காரணத்தால் அவரை மரத்தில் கட்டி வைத்து மற்றுமொரு நாடகத்தை அரங்கேற்றினார் ஒரு அமைச்சர். இவ்வாறு பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பும் நாடகங்களையே அரசு அரங்கேற்றி வருகின்றது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-சி)

# ஐ. தே.கட்சியில் பொன்சேகா ஒருபோதும் இணையமாட்டார்

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு பிரதித் தலைவர் கரு ஜயசூரிய விடுத்த பகிரங்க வேண்டுகோளை சரத் பொன்சேகா நிராகரித்துவிட்டார் என ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் எவரும் தனிப்பட்ட ரீதியாக அணுகவில்லை எனவும் இது தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகா யோசிக்கவுமில்லை எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இந்த அழைப்பு ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவால் மாத்திரம் விடுக்கப்பட்டது. இவ்வழைப்பு மங்கள சமரவீர ஐ.தே.கவில் இணையும் போதே இந்த பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது. ஜெனரலுக்கு தனிப்பட்ட ரீதியில் எந்தவொரு ஐ.தே.க உறுப்பினரும் அழைப்பு விடுக்கவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

ஐக்கிய தேசிய கட்சியில் ஜெனரல் சரத் பொன்சேகா இணைந்து கொள்வார் எனும் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

# வறுமையான மாணவர்களுக்கு லாம்புகள் அன்பளிப்பு

வடமராட்சி, ஓக. 10

பளை மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஆறு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு லாம்புகள் வழங்கப்பட்டன.

அதிபர் க.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி நித்தியானந்தா இந்த லாம்புகளை வழங்கினார்.

(த-236)

# அரசிலிருந்து பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பெரும்பான்மையைப் பெறும் வகையில் வாக்களிப்பு உட்பட எந்தவித நடவடிக்கையிலும் பிரபா கணேசன் கலந்து கொள்ளக்கூடாது. தற்சமயம் பிரபா கணேசனின் கட்சி அங்கத்துவம் ஜனநாயக மக்கள் முன்னணியில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைவர் மனோ கணேசனினால் பொதுச் செயலாளரின் தலைமையில் அரசியற்குழு உறுப்பினர்கள் 10பேர் அடங்கிய ஒழுக்காற்றுக்குழு அமைக்கப்பட்டுள்ளது." - இப்படி பிரபா கணேசனுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தொடர்பிலான ஒழுக்காற்று குழுவில் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன், மாகாணசபை உறுப்பினர்கள் எஸ். ராஜேந்திரன், முரளி ரகுநாதன், கங்கை வேணியன், ஏ.ஜெயபாலன், ஜோசப் ஜேகப், எவ்.எம்.ஷியாம், வி.முரளிதரன், லே.பாரதிதாசன் மற்றும் எம்.ராஜ்குமார் ஆகியோர் தலைவர் மனோ கணேசனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கட்சியின் தலைவரினாலும், பொதுச் செயலாளரினாலும் எடுக்கப்பட்டுள்ள இம்முடிவுகளை அங்கீகரிப்பதற்காகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவின் அவசர கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு கட்சித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கட்சித் தலைமையகத்தில் நடைபெறவிருக்கின்றது. இதற்கான அழைப்பு அனைத்து அரசியற்குழு உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

# அரசமைப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் இணைய விரும்புகின்றனர்.

'ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.தே.கட்சியினரை அரசுடன் இணைத்துக் கொள்வதற்கான அவசியமோ, தேவையோ இல்லை. ஐ.தே.கட்சி பல்வேறு விதத்தில் பலவீனமடையுமானால் தீவிரவாதக் கட்சிகள் அந்த இடத்தைப் பிடிக்கும் ஆபத்து இருக்கிறது என ஜனாதிபதி நினைக்கின்றார்.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை இந்த நிலையை உணர்ந்து செயற்படவேண்டும்'' - இப்படி அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் எச்சரித்தார்.

இதேவேளை, அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு இன்னும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. எனினும், ஐ.தே.கட்சித் தரப்பிலிருந்து கொண்டே அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கும் ஏ.ஆர்.எம்.ஏ.காதரையும் இணைத்துக் கொண்டால் இன்னும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே அரசுக்குத் தேவை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(அ-சி)

# செய்திச் சரம்

## 'இசுறு' தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 10

'இசுறு' வேலைத் திட்டம் தொடர்பாக யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று காலை 10 மணியளவில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட 'இசுறு' வேலைத்திட்ட ஒப்பந்தகாரர்களுடனான இக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைத் திட்டப் பணிப்பாளர் கலந்து கொள்வார்.

(எ-130)

## பளைப் பகுதியில் பாம்புகளால் தொல்லை

தென்மராட்சி, ஓக. 10

பளைப்பகுதியில் அண்மைக் காலத்தில் பாம்புகளினால் தீண்டப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த சில வாரங்களில் பாம்புகள் தீண்டி பலர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் பளை, பேராலையில் படுக்கையில் வைத்து குடும்பப் பெண்ணை பாம்பு தீண்டியது.

அதே இடத்தைச் சேர்ந்த வசந்தகுமார் சாரதாதேவி (வயது 30) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(ஒ-207)

## கிரிக்கெட் போட்டிகள்

தென்மராட்சி, ஓக. 10

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு நிறைவையொட்டி பிரதேச கிரிக் கெட் அணிகளுக்கு இடையிலான மென்பந்து சுற்றுப்போட்டிகளைக் கடந்த 31ஆம் திகதி தொடக்கம் நடத்தி வருகின்றனர்.

சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் நாளை புதனும் மறுநாள் வியாழனும் நடைபெற்று இறுதிப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

## டெங்கு ஒழிப்பு குறித்து தெருக்கூத்துக்கள்

வட்டுக்கோட்டை, ஓக. 10

வட்டுக்கோட்டை முதலிய கோயிலடி இன்பச்சோலை கிராமத்தில் டெங்கு நோய்த் தடுப்பு பற்றிய கருத்தரங்குகளும், அது தொடர்பான தெருக்கூத்துக்களும் இடம்பெற்றன.

சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாக ஊர்மக்கள் சுற்றாடல், சுகாதாரம் பேணி வருவதோடு வீதிகள், குடியிருப்புக்கள், சூழல்கள் எங்கும் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஒ-161-323)

## மேசன், தச்சுத்தொழில் பரீட்சைப் பெறுபேறு

யாழ்ப்பாணம், ஓக. 10

நிர்மாணம், பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் (ஐ.சி.ரி.ஏ.டி) கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட மேசன், தச்சுத் தொழிலுக்கான தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழுக்கான செயன்முறைப் பரீட்சை முடிவுகள் யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலக தொழிற்றுறை கண்காணிப்புப் பிரிவால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் பரீட்சை முடிவுகளை இன்றுமுதல் பார்வையிடலாம் என்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

(ஒ-10)

## வட்டு. மத்திய கல்லூரி மாணவர் கல்விச் சுற்றுலா

வட்டுக்கோட்டை, ஓக. 10

வட்டு. மத்திய கல்லூரி தரம் 9, 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு தென்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவின் போது இலங்கையில் உள்ள பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் அவர்கள் பார்வையிட ஏற்பாடாகி இருந்தது.

(ஒ-161-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மழை, நிலச்சரிவு அனர்த்தங்கள்; பலியானோர் எண்ணிக்கை 127 ஆக உயர்வு

பீஜிங், ஓக. 10

சீனாவின் வடமேற்குப் பகுதியில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 127 ஆக உயர்வடைந்துள்ளது. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணமற்போயுள்ளனர்.

திபெத் பகுதிக்கு உட்பட்ட கான்சூ மலைப் பிராந்தியத்தில் ஓடும் பாய்லாங் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி கிராமங்களில் வெள்ளத்தாலும், நிலச்சரிவுகளாலும் பலர் பலி யாகியுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. 50 ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் வீடு, உடைமைகளை இழந்துள்ளனர்.

கார்கள், கட்டட இடிபாடுகள், மரத் துண்டு கள் ஆகியவை பாய்லாங் நதி வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு ஆங்காங்கே மலை போல் குவிந்துள்ளன. இவற்றால், நதிநீர் தடுக்கப்பட்டு ஊருக்குள் வெள்ளம் புகுகிறது. அப்பகுதிகளில் சீன இராணுவத்தினர் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தடைகளை அகற்றி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3,000 இராணுவச் சிப்பாய்களும், 300 வைத்தியர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சீன பிரதமர் வென் ஜியாபோ, நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கான்சூ பிராந்தியத்துக்கு விரைந்துள்ளார்.

மீட்புப் பணியில் முழுவீச்சில் ஈடுபடுமாறு இராணுவச் சிப்பாய்களுக்கும், பொலிஸா ருக்கும் சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தோவோ உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, சீனாவின் வடகிழக்குப் பகுதியிலும் மழை வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அங்குள்ள ஜீலின் பிராந்தியத் தில் 82 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சனிக்கிழமையுடன் மழை ஓய்ந்துவிட்டது. எனினும், பாய்லாங் நதியின் மலையோர நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை நீடிப்பதால் வெள்ள அபாயம் தொடர்கிறது.

இந்த வருடத்தில் மட்டும் சீனாவில் மழை வெள்ளத்தில் சிக்கி 2,100 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான 'ஜின்குவா தெரிவித்துள்ளது. (சி)

# மலேசியாவில் விபத்தில் சிக்கிய படகு அகதிகளை ஐ.நா. தூதரகம் பதிவு செய்கிறது

கொழும்பு, ஓக.10

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் வழியில் விபத்தில் சிக்கி, மலே சியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 75 இலங்கையர்களையும் பதிவு செய்யும் நடவடிக்கைகளை அக்திகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் நோக்கில் 75 இலங்கையர்கள் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி படகொன்றில் பயணத்தை ஆரம்பித்தனர். அந்தப் படகு விபத்தில் சிக்கியதையடுத்து மலேசிய கடற்படையினர் இவர்களைக் காப்பாற்றினர்.

இப்போது இவர்கள் கோலாலம்பூர் விமான நிலையத்துக்கருகில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# இராணுவநீதிமன்ற விசாரணை இன்றுவரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 10

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் பொன்சேகாவை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி நேற்று இராணுவ நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காமை காரணமாக இவ்விசாரணை ஒத்திவைக்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜெனரல் பொன்சேகா சேவையில் ஈடுபட்டிருந்த காலப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காகவே முதலாவது இராணுவ நீதிமன்றம் நேற்று கூடியது.

இவ்வழக்கில் சாட்சியமளிப்பதற்காக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன ஆகியோர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். எனினும் விசாரணை ஒத்திவைக்கப்பட்டதால் அவர்கள் சாட்சியமளிக்க முடியவில்லை. (சி)

# புத்தளத்தில் 'கூட்டாஞ்சோறு'

கொழும்பு,ஓக.10

புத்தளம் வாழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய 'கூட்டாஞ்சோறு' சமைத்து உண்ணும் பருவகாலம் ஆரம்பித்துள்ளது.

புனித நோன்பு காலம் ஆரம்பமாகும்வரை இச்சம்பிரதாயம் இடம்பெறும்.

நோன்பை வரவேற்கும் முகமாக குடும்பம் குடும்பமாக ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் கூடி தத்தமது வீடுகளிலிருந்து கொண்டு வரும் உணவு வகைகளை ஒன்று சேர்த்து உண்டு மகிழும் வழக்கமே 'கூட்டாஞ்சோறு' என அழைக்கப்படுகின்றது.

இதற்காக தற்சமயம் சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கால ஓயா ஆற்றிற்கு மக்கள் படையெடுத்துள்ளனர். அங்கு சில தினங்கள் தங்கி நின்று கூட்டாஞ்சோறு சமைத்து உண்டு மகிழ்கின்றனர்.

புனிதநோன்பு ஆரம்பிப்பதற்கு முதல் நாள் இச் சம்பிரதாயம் முடிவுக்கு வரும். (சி)

## இந்திய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாவினால் கட்டிக்கொடுக்கப்படவுள்ளது.

மாதிரி வீடமைப்புத் திட்டத்திற்கான இடங்கள் மற்றும் வீடுகள், நிரந்தர வீடுகள் தேவைப்படும் பயனாளிகள் என்பன பற்றிய சகல விவரங்களும் திரட்டப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கையில் உள்ள வட பகுதி மக்களுக்கு 51 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்கவுள்ளது. இதில் முதற் கட்டமாக ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கவுள்ளதால் அதற்கான மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)


சுடர் ஒளி ஒகஸ்ட் 8 - 14



★ தலைவிதியை நிர்ணயிக்கும் வாக்காளர் கணக்கீடு.
★ தமிழர் அரசியலுக்கு புதிய அணுகுமுறை தேவை.
★ யாழிலிருந்து விலகும் படைகள் வன்னியில் மையம் கொள்ளும்.
★ எதற்காக இந்த விலை?
★ உயிர் வலிக்கும் கணங்கள் தொடர்....
★ ஜெயலலிதாவின் அதிரடிகளால் திகைத்து நிற்கும் தி.மு.க.!
★ தெலுங்கானா தேர்தலிலும் தோல்வி! காங்கிரஸ் அரசு தள்ளாட்டம்!
★ தொடரும் தாக்குதல்கள் பணியாத குற்றவாளிகள்.

மற்றும் பல சுவையான அம்சங்களுடன்

கொழும்பு விலையிலேயே (ரூ. 25)

உங்கள் 'உதயன்' முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.


# ஒஸ்லோ இந்து ஆலயத்தில் தமிழ்க் குழுக்கள் சண்டை

## ஆறு பேர் காயம்; 3 பேர் கைது

கொழும்பு, ஓக. 10

நோர்வே ஒஸ்லோவில் இந்து ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற மோதலில் ஆறு தமிழர்கள் காயமடைந்துள்ளனர். கைகலப்பில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வழி பாட்டு நிகழ்வொன்றின்போது இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஒஸ்லோ பொலிஸார் கூறினர்.

நோர்வே தமிழீழ சபையின் உறுப்பினர்களுக்கும், நோர்வே தமிழ் பொருளாதாரப் பிரிவின் உறுப்பினர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றது.

இதில் நோர்வே தமிழ் பொருளாதார கழகத்தின் உறுப்பினர் சிவனேஸ் வடிவேலு காயமடைந்தார் என நோர்வே அரசதகவல் திணைக்களத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

நோர்வே தமிழீழ சபை என்பது, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவராகக் கருதப்படும் நெடியவனினால் நடத்தப்பட்டு வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பாகும்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுகள் குறித்து இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.

இம்மாணவனின் மரணத்திற்கு பொலிஸாரின் தாக்குதலே காரணம் என றுகுணு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தி வருகிறது. (அ-சி)


விற்பனைக்கு

NP-H இலக்கமுடைய isuzu ரக டிப்பர் வாகனம் (வெள்ளைநிறம் - 1 கியூப்) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
0777432665, 0770650730

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2012 A/L

| ஒட்சியேற்றம் - தாழ்தல் | ஹைட்ரோகாபன்கள் பரிவு - கலப்பாக்கம் |
|---|---|
| ஆரம்பம்: 10.08.2010 | ஆரம்பம்: 14.08.2010 |
| TUE THU (6.30 - 7.30 am.) | SAT SUN (5.30 - 6.30 pm.) |

By: RAJAH

Universal Kantharmadam, நாளை 6 A.m.
Niru Kondavil, நாளை 8.30 A.m.
கணக்கீடு
A/L 2011-Paper Class
ஆரம்பம்
S. தவா
B.Com (Hons) (Acc-Spl)
Shamrock Eachchamoodai, வியாழன் 6 A.m.
New Science Hall வியாழன் 1 P.m.
தனிப்பாட அனுமதி" "கொழும்பு முன்னணி ஆசிரியர்களின் அலகு ரீதியிலான பயிற்சிப் பரீட்சை" "இன்றைய மாணவர்களின் வருகை நேற்றைய மாணவர்கள் பெற்ற பேறுகை"


## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 265 மாணவரும், பூந்தோட்டத் தில் 104 மாணவர்களும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏதுவாக 'ஜிரிசட்' என்ற நிறுவத்தின் நிதி உதவியுடன் மாகாண கல்வி அமைச்சு அவர்களுக்குத் தேவையான பாடக்குறிப்புக்களை வழங்கியது. அத்துடன், ஆளுமைமிக்க ஆசிரியர்களை கற்றல் நடவடிக்கைக்கு ஈடுபடுத்தியது.

இதேவேளை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலிருந்து 15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அத்துடன், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார் கல்விப்பணிப்பாளர்.

இதேவேளை, நாட்டில் சுமார் 2 லட்சத்து 69 ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் எனக் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இந்திய அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர் திடீர் விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

இந்தியத் தூதரக இரண்டாம் நிலைச் செயலர் கே.முரளிதரன், கவுன்சலர் ஏ.சுனில் ஆச்சயா ஆகிய இருவரும் நேற்றுக்காலை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து, நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

அதன்போது பொது மக்கள் பலரையும் நேரில் சந்தித்து அவர்களின் வாழ்க்கை நிலை, தேவைகள், போருக்கு பின்னரான யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் என்பன தொடர்பாக அவர்களிடம் அதிகாரிகள் இருவரும் விவரமாகக் கேட்டறிந்தனர்.

போர் முடிவடைந்த பின்னர் அச்ச சூழ்நிலை பெருமளவுக்கு நீங்கி இருப்பதாகவும் முன்னரைக் காட்டிலும் பல்வேறு வகைகளில் தமது வாழ்க்கைத்தரம் உயரத் தொடங்கி உள்ளதாகவும், குடாநாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த அபிவிருத்தித் திட்டங்கள் தேவைப்படுவதாகவும் மக்கள் அவர்களிடம் தெரிவித்தனர் என்று அறியவந்துதது.

பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராயும் பொருட்டு வடமாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரச அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோரையும் இந்தியத் தூதரக அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள், மக்கள் வாழ்க்கை மேம்பாட்டு அபிவிருத்தி, மீள்குடியமர்வு என்பன தொடர்பான நடவடிக்கைகள் தமக்குப் பூரண திருப்தியை அளிப்பதாக இந்தியத் தூதரக அதிகாரிகள் குடாநாட்டின் உயர் அதிகாரிகள் பலரிடம் கூறியதாகத் தெரியவந்தது. (அ-எ-14-319)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org